



# தமிழ்நாடு இபேப்பர்.காம்

www. tamilnaduepaper.com





CHENNAI Volume- 3 Issue:145 10-12-2025 புதன்கிழமை Free E- Paper ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

10.12.2025 கார்த்திகை 24
புதன் கிழமை

சூரிய உதயம் 6.19

திதி:
இன்று இரவு 7.58 வரை
சஷ்டி பின்பு சப்தமி

நட்சத்திரம்:
இன்று காலை 8.36 வரை
ஆயில்யம் பின்பு மகம்

யோகம் :
இன்று மாலை 6.30 வரை
வைதிருதி பின்பு விஷ்கம்பம்.

கரணம் :
இன்று காலை 8.20 வரை
கரசை பின்பு இரவு 7.58
வணிசை பின்பு பத்திரை.

அமிர்தாதி யோகம் :
இன்று முழுவதும் சித்த யோகம்.

சந்திராஷ்டமம்
இன்று காலை 8.36 வரை
பூராடம் பின்பு உத்திராடம்.

நல்ல நேரம்
காலை 9.15 – 10.15.
மாலை 4.45 – 5.45
இராகு காலம்
பிற்பகல் 12.00 – 1.30.

எமகண்டம்
காலை 7.30 – 9.00.

குளிகை
காலை 10.30 – 12.00 .

இன்று சுபமுகூர்த்த நாள்.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
**இராமமூர்த்தி**
செல்: 8189908040

# “வாக்கு திருட்டுதான் மிகப் பெரிய தேச விரோத செயல்”

## மக்களவையில் ராகுல் காந்தி காட்டம்

**புதுடெல்லி, டிச.10:** “வாக்குத் திருட்டுதான் மிகப் பெரிய தேச விரோத செயல்” என்று மக்களவையில் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி காட்டமாக குறிப்பிட்டார்.

மக்களவையில் இன்று நடைபெற்ற தேர்தல் சீர்திருத்தங்கள் குறித்த விவாதத்தில் பங்கேற்றுப் பேசிய ராகுல் காந்தி, “இந்தியா என்பது 150 கோடி மக்களின் பிணைப்பு. இதற்கு ஆதாரமாக இருப்பது வாக்குகள். மக்களவையோ, மாநிலங்களவையோ, சட்டப் பேரவையோ, பஞ்சாயத்துகளோ வாக்குகள் இல்லாவிட்டால் இவை எதுவும் இருக்காது. நாடு இதுவரை கண்ட அனைத்து சாதனைகளும் வாக்களிப்பதன் காரணமாகவே நிகழ்ந்துள்ளன.

ஆனால், இதைக் கைப்பற்ற ஆர்எஸ்எஸ் முயல்கிறது. நாட்டில் உள்ள ஒவ்வொரு நிறுவனத்தையும் கைப்பற்ற ஆர்எஸ்எஸ் முயன்று வருகிறது” என்றார்.



அப்போது, ஆளும் தரப்பு எம்பிக்கள் அமளியில் ஈடுபட்டதை அடுத்து தேர்தல் சீர்திருத்தம் குறித்து பேசுமாறு சபாநாயகர் ராகுல் காந்தியை கேட்டுக்கொண்டார். அப்போது, தேர்தல் சீர்திருத்தம் குறித்து ராகுல் காந்தி எதுவும் பேசவில்லை என நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு குற்றம் சாட்டினார்.

தனது உரையை தொடர்ந்த ராகுல் காந்தி, “ஆர்எஸ்எஸ் மற்றும் பாஜகவால் தேர்தல் ஆணையம் கைப்பற்றப்பட்டுள்ளது. பல நிறுவனங்களை இவை கைப்பற்றியுள்ளன. என்றாலும், முதலில் கைப்பற்றப்பட்டது தேர்தல் ஆணையம். அமலாக்கத் துறை, தேசிய புலனாய்வு அமைப்பு, சிபிஐ போன்ற நிறுவனங்களும்கூட கைப்பற்றப்பட்டுள்ளன.

ஆர்எஸ்எஸ் மற்றும் பாஜகவின் கட்டுப்பாட்டில் இருப்பதால் தேர்தலை வடிவமைக்க தேர்தல் ஆணையம் இவர்களுடன் இணைந்து செயல்படுகிறது.

தேர்தல் ஆணையராக யார் வர வேண்டும் என்பதில் பிரதமரும் உள்துறை அமைச்சரும் ஏன் இத்தனை அக்கறை காட்டுகின்றனர்? வாக்கு திருட்டைவிட மிகப்பெரிய தேச விரோத செயல் வேறில்லை" என்று ராகுல் காந்தி பேசினார்.

ராகுல் காந்தியின் உரைக்கு பதில் அளிக்கும் விதமாகப் பேசிய பாஜக எம்பி நிஷிகாந்த் துபே, "நான் ஆர்எஸ்எஸ் அமைப்பைச் சேர்ந்தவன். இதில் நான் பெருமைப்படுகிறேன். முஸ்லிம்களின் வாக்குகளைப் பெறுவதற்காக நெறிமுறைகளில் சமரசம் செய்து கொண்ட கட்சி காங்கிரஸ். நேரு அதிகாரத்தில் இருந்தது முதல் இதுதான் நடந்து வருகிறது" என்றார்.

## சோனியா காந்தி பிறந்தநாள்: பிரதமர் மோடி, முதல்வர் ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை: இன்று 79வது பிறந்தநாள் காணும் சோனியா காந்திக்கு பிரதமர் மோடி மற்றும் தமிழக முதல்வர் ஸ்டாலின் ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும், அக்கட்சியின் நாடாளுமன்றக் குழு தலைவருமான சோனியா காந்தி இன்று தனது 79வது பிறந்தநாளை கொண்டாடுகிறார். அவரின் பிறந்தநாளை காங்கிரஸ் தலைவர்களும், தொண்டர்களும் உற்சாகமாக கொண்டாடி வருகின்றனர். மேலும், பல்வேறு தலைவர்களும் சோனியா காந்திக்கு வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர்.

சோனியா காந்திக்கு வாழ்த்து தெரிவித்து பிரதமர் மோடி வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘



சோனியா காந்திக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள். அவர் நீண்ட ஆயுளும், நல்ல ஆரோக்கியமும் பெற பிரார்த்திக்கிறேன்’ எனத் தெரிவித்துள்ளார்.

தமிழக முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘காங்கிரஸ் பேரியக்கத்தின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சோனியா காந்திக்கு இனிய பிறந்தநாள் வாழ்த்துகள். தியாகம், தன்னலமற்ற பொதுவாழ்வுப் பயணம், மதச்சார்பின்மை மற்றும் அரசியலமைப்பு விழுமியங்களை நிலைநாட்டும் உறுதியைப் பிரதிபலிப்பதாக அவரது வாழ்க்கை அமைந்துள்ளது.

முற்போக்கான, அனைவருக்குமான இந்தியாவை நோக்கிய நமது கூட்டு முயற்சிகளுக்கு அவரது கொள்கைப் பாதையும், வழிகாட்டுதலும் தொடர்ந்து வலுவூட்ட வேண்டும் என விழைகிறேன்’ எனத் தெரிவித்துள்ளார்.

# “மக்களுக்கு சட்டங்கள் சுமையாக இருக்கக் கூடாது!

## என்டிஏ எம்.பி.க்கள் கூட்டத்தில் பிரதமர் மோடி பேச்சு

**புதுடெல்லி, டிச.10:** டெல்லியில் நேற்று நடந்த தேசிய ஜனநாயக கூட்டணியின் எம்.பி.க்கள் கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் மோடி, “பொருளாதாரத்தில் மட்டுமல்ல, சமூகத்தின் அனைத்து அம்சங்களிலும் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும்” என்றார்.



என்டிஏ எம்.பி.க்கள் கலந்துகொண்ட கூட்டத்துக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய நாடாளுமன்ற விவகார அமைச்சர் கிரண் ரிஜிஜு, “பிரதமர் மோடி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மிகச் சிறந்த வழிகாட்டுதல்களை வழங்கினார்.

சட்டங்கள் யாருக்கும் சுமையாக இருக்கக் கூடாது, மக்களின் வசதிக்காக இருக்க வேண்டும் என்று பிரதமர் கூறினார். விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் ஆகியவை அமைப்பை மேம்படுத்துவதற்காக இருக்க வேண்டும், மக்களைத் துன்புறுத்துவதற்காக அல்ல. எந்தச் சட்டமும் மக்களைத் துன்புறுத்தும் வகையில் இருக்கக் கூடாது.

வளர்ச்சிப் பணிகளை மூன்று மடங்கு வேகத்தில் விரைவுபடுத்தவும், இளைஞர்களை விளையாட்டு மற்றும் பிற செயல்பாடுகளுடன் இணைக்கவும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று பிரதமர் மோடி கூறினார்.

இந்தக் கூட்டத்தின் தொடக்கத்தில், சமீபத்திய பிஹார் தேர்தலில் என்டிஏ பெற்ற மகத்தான வெற்றிக்காக பிரதமர் மோடி பாராட்டப்பட்டார்” என்று கிரண் ரிஜிஜு கூறினார்.

மத்திய அமைச்சர்கள் ராஜ்நாத் சிங், அமித் ஷா மற்றும் பாஜக தலைவரான ஜே.பி. நட்டா ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். மாநிலங்களவை உறுப்பினர்களான ஜேடியு தலைவர் சஞ்சய் ஜா மற்றும் ராஷ்ட்ரிய லோக் மோர்ச்சா தலைவர் உபேந்திர குஷ்வாஹா ஆகியோர் பிரதமர் மோடிக்கு மாலை அணிவித்தனர்.

## ‘என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி’ திமுக பரப்புரை இன்று தொடக்கம்

**சென்னை, டிச.10:** தமிழக சட்டசபை தேர்தல் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெறும் என தெரிகிறது. இந்த தேர்தலில் 200 தொகுதிகளில் வெற்றி பெற இலக்கு நிர்ணயித்து தி.மு.க. தலைவர் மு.க.ஸாலின் வியூகம் வகுத்து செயல்பட்டு வருகிறார்.



இந்தநிலையில் திமுகவினரின் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பரப்புரை நாளை தொடங்க உள்ளது. தேனாம்பேட்டையில் பகுதிச்செயலாளர் தலைமையில் நடைபெறும்கூட்டத்தில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் பங்கேற்க உள்ளார். வாக்குச்சாவடிகளை பலப்படுத்தும் திமுகவின் பிரசாரம் மாநிலம் முழுவதும் இன்று தொடங்க உள்ளது.

ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் திமுகவினரை உற்சாகத்துடன் செயல்பட வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வீடு வீடாக செல்லும் பூத் கமிட்டி குழுக்களில் மகளிர் கட்டாயம் இடம்பெற வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ராமேசுவரம் மீனவர்கள் கடலுக்கு செல்ல தடை

**ராமேசுவரம், டிச.10:** பாக்நீரிணை கடற்பகுதியில் பலத்த சூறைக்காற்று எச்சரிக்கையால் ராமேசுவரம் மீனவர்கள் கடலுக்குச் செல்ல மீன்வளத் துறை தடை விதித்துள்ளது.

வங்கக் கடல் பகுதி, குமரிக் கடல் பகுதிகளையொட்டிய மாலத்தீவு பகுதிகளில் வரும் 13-ம் தேதி வரை பலத்த சூறாவளிக் காற்று வீசக்கூடும்.

# “தி.மு.க.வை நம்பாதீர்கள்; நம்ப வைத்து ஏமாற்றி விடுவார்கள்”: விஜய்

**புதுவை, டிச.10:** “தி.மு.கவை நம்பாதீர்கள்; நம்ப வைத்து ஏமாற்றி விடுவார்கள்” என்று புதுவையில் நேற்று நடந்த பொதுக்கூட்டத்தில் பேசுகையில் விஜய் எச்சரிக்கை விடுத்தார்.

கூட்டத்தில் விஜய் பேசியதாவது:-

“என் நெஞ்சில் குடியிருக்கும் புதுச்சேரி மக்களுக்கு வணக்கம். எல்லோரும் எப்படி இருக்கீங்க?

ஒன்றிய அரசு தான் தமிழகத்தை ஒரு மாநிலமாகவும், புதுச்சேரியை யூனியன் பிரதேசமாகவும் பார்க்கிறது. ஆனால் நாம் வேறு வேறு கிடையாது. எந்த மாநிலமாக இருந்தாலும் உலகின் எந்த மூலையில் தமிழர்கள் இருந்தாலும் அவர்கள் நம் உயிர் தான். பாச உணர்வு இருந்தால் போதும் வேறு எதுவும் தேவையில்லை.

தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா, ஆந்திரா, கர்நாடகா-னு நம்ம வகையறா எங்க இருந்தாலும் அவங்க நம்ம உறவுதான்.

புதுச்சேரினாலே முதலில் மணக்குள விநாயகர், அரவிந்தர் ஆசிரமம், வில்லியனூர் மாதா ஞாபகத்துக்கு வரும். இது பாரதியார் இருந்த மண், பாரதிதாசன் பிறந்த மண்.

**எம்ஜிஆர் நமக்கானவர்...**

1977-ல் தமிழ்நாட்டில் ஆட்சியை பிடிப்பதற்கு முன்பாகவே, எம்ஜிஆர் 1974ல் புதுச்சேரியில் ஆட்சியை பிடித்தார். எம்ஜிஆர் நமக்கானவர், அவரை மிஸ் பண்ணிடாதீங்க என தமிழ்நாட்டிற்கு அலெர்ட் செய்ததே புதுச்சேரி தான். அப்படிப்பட்ட புதுச்சேரியை மறக்க முடியுமா?

**தி.மு.க. அரசு கற்றுக்கொள்ள வேண்டும்**

தமிழக மக்களைப் போலவே, புதுச்சேரி மக்களும் கடந்த 30 ஆண்டுகளாக என்னை தாங்கி பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் இந்த விஜய் தமிழகத்துக்கு மட்டும்தான் குரல் கொடுப்பார் என நினைக்காதீர்கள். புதுச்சேரி மக்களுக்கும் சேர்ந்து குரல் கொடுப்பேன். அது எனது கடமையும்கூட.

புதுச்சேரி அரசாங்கம் தமிழகத்தில் உள்ள திமுக அரசாங்கத்தை போன்றது கிடையாது. வேறு ஒரு அரசியல் கட்சி நடத்தும் நிகழ்ச்சியாக இருந்தாலும், அந்த நிகழ்ச்சிக்கு தன்னெழுச்சியாக வரக்கூடிய மக்களுக்கு பாதுகாப்பு கொடுத்து, பாரபட்சம் இல்லாமல் இந்த அரசு நடந்து கொள்கிறது. புதுச்சேரி முதல்வருக்கு எனது மனப்பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இதை பார்த்தாவது தமிழகத்தில் உள்ள தி.மு.க. அரசு கற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் அவர்கள் கற்றுக் கொள்ள மாட்டார்கள். வரப் போகின்ற தேர்தலில் அவர்கள் 100% கற்றுக் கொள்வார்கள். மக்கள் பார்த்துக்கொள்வார்கள்.



**புதுச்சேரியை கண்டுகொள்ளாத ஒன்றிய அரசு...**

புதுவை அரசு கூட்டணி ஆட்சியில் இருந்தாலும் புதுச்சேரியை ஒன்றிய அரசு எந்த விஷயத்திலும் கண்டு கொள்ளவில்லை என்பது மக்களுக்கே தெரியும். இங்கு வளர்ச்சி ஏற்பட அவர்கள் துணை நிற்கவில்லை. புதுச்சேரிக்கு இன்னும் மாநில அந்தஸ்து கொடுக்கவில்லை. பலமுறை புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து கோரி சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் மூடப்பட்ட 5 மில்கள், பல்வேறு தொழிற்சாலைகளை மீண்டும் திறக்க இன்னும் ஒரு துரும்பை கூட கிள்ளி போடவில்லை.

பல்லாயிரக்கணக்கான இளைஞர்களின் வேலை வாய்ப்புக்காக அவர்கள் எதையுமே செய்யவில்லை. காரைக்கால் மாஹி, ஏனம் பகுதியில் முன்னேற்றமே இல்லை. புதுச்சேரி கடலூர் மார்க்கத்தில் ரெயில் திட்டம் வேண்டும். புதுச்சேரியில் ஒரு ஐடி கம்பெனி உருவாக வேண்டும் என்ற எண்ணம் கூட கிடையாது. இது குறித்து யார் பேசினாலும் அவர்களின் காதுகளில் விழவே இல்லை. தமிழ்நாட்டை ஒதுக்குவது போல், புதுச்சேரியையும் ஒன்றிய அரசு ஒதுக்கக்கூடாது.

ஒரு அமைச்சர் ஊழல் புகாரில் சிக்கி நீக்கப்பட்டு வேறு அமைச்சர் நியமிக்கப்பட்டு 200 நாள் ஆகியும் பதவி தரப்படவில்லை.

**மீனவர்கள் தாக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும்...**

20 லட்சம் பேர் வாழும் புதுச்சேரி மத்திய நிதி குழுவில் இடம்பெறவில்லை. அதனால், போதிய நிதி ஒதுக்கப்படவில்லை. வெளியே கடன் வாங்க வேண்டிய நிலை உள்ளது. மாநில அந்தஸ்து வாங்கினால் மட்டும் போதாது. தொழில் வளர்ச்சியும் வேண்டும். இந்திய அளவில் ரேஷன் கடைகளே இல்லாத மாநிலம் புதுச்சேரிதான். மற்ற மாநிலங்களைப் போல் இங்கும் ரேஷன் கடைகளை தொடங்கி மக்களுக்கு மானிய விலையில் அரிசி, பருப்பு போன்ற பொருட்களை வழங்க வேண்டும். காரைக்கால் மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்படுவதை தடுக்க வேண்டும். புதுச்சேரி மக்களுக்கு ஒன்று மட்டும் சொல்லிகொள்கிறேன். தி.மு.க.வை நம்பாதீர்கள்; அவர்கள் நம்பவைத்து ஏமாற்றி விடுவார்கள்.

வரவிருக்கும் புதுச்சேரி தேர்தல் களத்தில் தவெக கொடி பட்டொளி வீசி பறக்கும். நம்பிக்கையாக இருங்கள். வெற்றி நிச்சயம் ” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.






## திருக்குறள் குறள்-465

**வகையறச் சூழா தெழுதல் பகைவரைப் பாத்திப் படுப்பதோ ராறு**



செயலின் வகைகளை எல்லாம் முற்ற எண்ணாமல் செய்யத்தொடங்குதல், பகைவரை வளரும் பாத்தியில் நிலைபெறச் செய்வதொரு வழியாகும்.

## சிந்திக்க ஒரு நொடி



மன காயத்திற்கு ஆறுதல்
என்பது தற்காலிக தீர்வு,
மாறுதல் என்பது
நிரந்தர தீர்வு, ஆறுதல்
தேடாதே
மாறுதல் தேடு
வாழ்க்கை வசந்தமாகும்.

**ராஜகோபாலன்.J**
சென்னை 18

## புதிய மீன்பிடி இறங்கு தளம்



குமரி மாவட்டம் தேங்காப்பட்டணம் துறைமுகத்தில் புதிய மீன்பிடி இறங்கு தளத்தை முதல்வர் காணொளி வாயிலாக திறந்து வைத்த பிறகு, அங்கு கலெக்டர் அழகுமீனா முன்னிலையில் அமைச்சர் மனோதங்கராஜ் குத்து விளக்கேற்றினார்.ராஜேஷ்குமார் எம்எல்ஏ உடன் உள்ளார்.

## விஜயகாந்த் நினைவிடத்தில் பிரேமலதா சிறப்பு பூஜைகள் செய்து அன்னதானம்



சென்னை தேமுதிக அலுவலகத்தில் விஜயகாந்த் நினைவிடத்தில் பிரேமலதா சிறப்பு பூஜைகள் செய்து அன்னதானம் வழங்கினார்.

## பாரதியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை



பொதிகைத் தமிழ்ச் சங்கம் மற்றும் ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரியின் தமிழ்த் துறை சார்பாக 09.12.2025-அன்று பிற்பகலில் நடைபெற்ற மகாகவி பாரதியின் 144-ஆவது பிறந்த நாள் விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் ஜே.சுமிதா தலைமையில்,பொதிகைத் தமிழ்ச் சங்க நிறுவுநர் கவிஞர் பேரா முன்னிலையில் பாரதியார் சிலைக்கு மாலை அணிவித்து மலர்கள் தூவி மரியாதை செய்யப்பட்டது.

## போதை பொருள்களுக்கு எதிரான மூன்று சக்கர வாகன விழிப்புணர்வு பேரணி



கன்யாகுமரி மாவட்ட சக்ஷம் (மாற்றுத் திறனாளர்கள் நலன் விரும்பும் தேசிய அமைப்பு) முஞ்சிறை ஒன்றியம் சார்பில் சர்வதேச மாற்றுத்திறனாளர் தினத்தை முன்னிட்டு போதை பொருள்களுக்கு எதிரான மூன்று சக்கர வாகன விழிப்புணர்வு பேரணி நடந்தது.

## ஸ்ரீபூதலிங்கசுவாமி திருக்கோயில் தைப்பெருந்திருவிழாவுக்கு திருக்கால் நாட்டப்பட்து



பூதப்பாண்டி அருள்மிகு சிவகாமிஅம்மாள் சமேத அருள்மிகு ஸ்ரீபூதலிங்கசுவாமி திருக்கோயில் தைப்பெருந்திருவிழாவுக்கு திருக்கால் நாட்டப்பட்து.

## வேலூர் ஸ்ரீபுரம் பொற்கோவிலில் 600 மாணவர்கள் பங்கேற்ற பிரம்மாண்ட ஐகிரி நந்தினி பாராயணம்!

**வேலூர்,டிச.10:**

வேலூர் ஸ்ரீபுரம் பொற்கோயிலில் 600 மாணவர்கள் பங்கேற்ற பிரம்மாண்டமான ஐகிரி நந்தினி பாராயணம் நடந்தது. ஸ்ரீ சக்தி அம்மாவின் 50 ஆவது ஜெயந்தி விழாவை முன்னிட்டு இசையமுது நடந்தது.

வேலூர்ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 600க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் இணைந்து ஸ்ரீசக்தி அம்மாவிற்கு தெய்வீக இசை அமுது படைக்கும் விதமாக அருள்மிகு ஸ்ரீ சக்தி அம்மாவின் முன்னிலையில் பிரம்மாண்ட ஐகிரி நந்தினி ஸ்லோகம் பாராயணத்தை நிகழ்த்தினர் .

ஸ்ரீபுரம் பொற்கோயில் வளாகத்தில் உள்ள திறந்தவெளி அரங்கில் நடைபெற்ற இந்த விழாவுக்கு ஸ்ரீபுரம் பொற்கோவில் மற்றும் ஸ்ரீநாராயணி பள்ளிகளின் அறங்காவலரும், இயக்குநருமான டாக்டர் எம் .சுரேஷ் பாபு தலைமை வகித்தார். இந்த



சிறப்பு நிகழ்ச்சியில் ஸ்ரீ சக்தி அம்மாவின் நீண்ட நாள் வெளிநாட்டு பக்தர்களும் கலந்து கொண்டு மாணவர்களின் ஆன்மிக பாராயணத்தை கண்டு மகிழ்ந்தனர் .

விழாவில் 600 மாணவர்கள் ஒரே நேரத்தில் ஒருங்கிணைந்து தேவி துதியை முழு பக்தியுடன் பாடியது காண்போரை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. ஸ்ரீ சக்தி அம்மாவின் பொன்விழாவை போற்றும் வகையில் ஒரு உன்னதமான ஆன்மிக காணிக்கையாக இந்த பிரம்மாண்டமான பாராயண நிகழ்வு அமைந்திருந்தது.

இந்த சிறப்பு நிகழ்வில் ஸ்ரீ நாராயணி பள்ளிகளின் முதல்வர்கள், துணை முதல்வர்கள், நிர்வாக அலுவலர் மற்றும் இருபால் ஆசிரியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பன்னாட்டுப் புத்தகத் திருவிழா




சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா (CIBF) -2026 - இன் இலச்சினையை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வெளியிட்டார். உடன் பள்ளிக் கல்வித்துறை முதன்மைச் செயலாளர் சந்திரமோகன், பொதுநூலகத்துறை இயக்குநர் ஜெயந்தி, ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி இயக்குநர் ஆர்த்தி, பள்ளிக் கல்வி இயக்குநர் கண்ணப்பன் உள்ளனர்.

## திருவண்ணாமலை கோவிலில், பாமக தலைவர் அன்புமணி, குடும்பத்துடன் வழிபட்டார்



திருவண்ணாமலை கோவிலில், பாமக தலைவர் அன்புமணி, குடும்பத்துடன் வழிபட்டார்.

## ரயில்வே அமைச்சரிடம் அதிமுக முன்னாள் அமைச்சர் எம்ஆர் விஜயபாஸ்கர் கோரிக்கை மனு



மதுரை,கரூர்,சேலம் வழியாக சென்னைக்கு அல்லது கோவை,கரூர்,திருச்சி வழியாக சென்னைக்கு புதியதாக வந்தே பாரத் ரயில், மற்றும் கரூர் வழியாக புதிய ரயில்கள் இயக்க வேண்டி ரயில்வே அமைச்சரிடம் அதிமுக முன்னாள் அமைச்சர் எம்ஆர் விஜயபாஸ்கர் கோரிக்கை மனு அளித்தார். உடன் மத்திய இணை மந்திரி முருகன்,தம்பித்துரை எம்பி. உள்ளனர்.

## அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணனிடம் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி மனு



திருவெறும்பூர் தொகுதி துவாக்குடி மற்றும் நவல்பட்டு கிராமப் பகுதிகளில் கால்நடை மருத்துவமனை அமைக்கக் கோரி கால் நடைத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணனிடம் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி மனு அளித்தார்.

## எறிபந்தாட்ட போட்டியில் வெற்றி பெற்ற தூத்துக்குடி கமாக் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி மாணவர்களை அமைச்சர் கீதா ஜீவன் வாழ்த்தினார்



குடியரசு தினம் மற்றும் பாரதியார் தினத்தை முன்னிட்டு திருச்சி கொங்குநாடு பொறியியல் கல்லூரியில் நடந்த மாவட்ட அளவிலான எறிபந்தாட்ட போட்டியில் வெற்றி பெற்ற தூத்துக்குடி கமாக் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி மாணவர்களை அமைச்சர் கீதா ஜீவன் வாழ்த்தினார்.

## வேலூரில் வழக்கறிஞர்கள், ஆர்ப்பாட்டம்



வேலூர் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் நேற்று வழக்கறிஞர்கள், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## என்சிசி மாணவர்களுடன் இந்திய கடற்படை கார் அணிவகுப்பு



தூத்துக்குடி வஉசி கல்லூரியில் என்சிசி மாணவர்களுடன் இந்திய கடற்படை கார் அணிவகுப்பு குழுவினர் நேற்று கலந்துரையாடினர்.

## பல்லி அரசு மேல்நிலைப் பள்ளியில் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் விழா

**செய்யாறு டிச.10:**

செய்யாறு அடுத்த பல்லி அரசு மேல்நிலைப் பள்ளியில் விலை இல்லா மிதிவண்டிகள் வழங்கும் விழா நேற்று நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு எம்எல்ஏ ஓ. ஜோதி தலைமை தாங்கி மாணவர்களுக்கு விலை இல்லா மிதிவண்டிகளை வழங்கினார். தலைமை ஆசிரியர் சங்கர் முன்னிலை வகித்தார். ஒன்றிய செயலாளர் ஏ. ஞானவேல்



வரவேற்றார்.வெம்பாக்கம் மத்திய ஒன்றிய செயலாளர் ஜெ சி கே .சீனிவாசன், இலக்கிய அணி மணிவண்ணன்,சேகர், தொண்டரணி அமைப்பாளர் ராம்ரவி, அவைதலைவர் தயாளன், மற்றும் ஞானமுருகன்,சுந்தரேசன், மகராசன், ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## குடவாசல் அருகே அன்னியூரில் வடக்கு ஒன்றிய பாமக நிர்வாகிகள் கூட்டம்

**திருவாரூர், டிச.10:**

குடவாசல் அருகே அன்னியூரில் வடக்கு ஒன்றிய பாமக நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றது.

திருவாரூர் மாவட்டம் குடவாசல் வடக்கு ஒன்றிய பாமக ஆலோசனை கூட்டம் நடைபெற்றது, கூட்டத்திற்கு திருவாரூர் வடக்கு மாவட்ட பாமக செயலாளர் வேணு. பாஸ்கரன் தலைமை வகித்தார்.

மாவட்டத் தலைவர் பழனி, உழவர் பேரியக்க மாவட்ட செயலாளர் உலகநாதன், வன்னியர் சங்க மாவட்ட செயலாளர் கணேச.சண்முகம், மாநில பொதுக்குழு உறுப்பினர் வலங்கை என்.மாரிமுத்து ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னதாக வடக்கு ஒன்றிய செயலாளர் கருணாநிதி அனைவரையும் வரவேற்று பேசினார்.

கூட்டத்தில் பழுதடைந்த நிலையில் உள்ள அன்னியூர்



பிள்ளையார்கோயில் சாலையை உடனடியாக சீரமைக்க வேண்டும், அப்பகுதியில் உள்ள சுடுகாட்டிற்கு மயான கொட்டகை மற்றும் ஈமக்கிரியை மண்டபம் அமைத்து தர வேண்டும், ஜாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பை அரசு மேற்கொள்ள வேண்டும், வன்னியர்களுக்கு 10.5 சதவீத இடஒதுக்கீடு மற்றும் அனைத்து சமுதாய மக்களுக்கும் முறைப்படியான இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முடிவில் வருகின்ற 12- ந்தேதி திருவாரூர் மாவட்ட கலெக்டர் அலுவலகம் முன்பு நடைபெறும் இட ஒதுக்கீடு போராட்டத்திற்கு அனைவரும் குடும்பத்தோடு கலந்து கொள்வது என முடிவு செய்யப்பட்டது.

## அமலாக்கத் துறை மீண்டும் கடிதம்: முதல்வர் பதிலடி

**சென்னை, டிச.10:**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் 1,020 கோடி ரூபாய் ஊழல் புகார் தொடர்பாக தமிழக அரசின் தலைமைச் செயலர் மற்றும் டிஜிபிக்கு அமலாக்கத் துறை மீண்டும் கடிதம் அனுப்பி யுள்ளது. அதில், அமைச்சர் கே.என்.நேரு தனது உறவினர்கள் மூலம் ஒப்பந்ததாரர்களிடம் இருந்து மொத்த ஒப்பந்த மதிப்பில் 7.5 சதவீதம் முதல் 10 சதவீதம் வரை லஞ்சமாக வசூ லித்ததாக அமலாக்கத் துறை குற்றம் சாட்டியுள்ளது. இதற்கு பதிலடியாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் பேசுகையில், எதிரிகள் மத்திய புலனாய்வு அமைப்புகளை தங்களுக்கு எதிராகப் பயன் படுத்தி தினமும் பொய்களைப் பரப்பி வருவதாகவும், இதை எதிர்கொள்ள கட்சியினர் தங்கள் பலத்தை சரியாகப் பயன் படுத்த வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

## குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைப்பு

**சென்னை, டிச.10:**

சித்த மருத்துவப் பல்கலைக்கழகம் அமைப்பது தொடர்பான மசோதாவை ஆளுநர் ஆர்.என்.ரவி குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்துள்ளார். 2022 ஏப்ரலில் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இம்மசோ தாவில் ஆளுநர் கோரிய நான்கு மாற்றங்கள் நிராகரிக்கப் பட்டு, கடந்த அக்டோபரில் மீண்டும் நிறைவேற்றப்பட்டது. மூன்று ஆண்டுகள் நிலுவையில் இருந்த இம்மசோதா தற்போது குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பப் பட்டுள்ளது.

## செந்தில் பாலாஜிக்கு நிபந்தனையில் தளர்வு

**சென்னை, டிச.10:**

முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு உச்ச நீதி மன்றம் ஜாமீன் நிபந்தனைகளில் தளர்வு அளித்துள்ளது. போக்குவரத்துத் துறையில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி லஞ்சம் பெற்ற வழக்கில் வாரம் இருமுறை ஆஜராக வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது. கடந்த ஒன்றரை ஆண்டுகளில் 31 முறைக்கும் மேல் ஆஜரான செந்தில் பாலாஜி, நிபந்தனையைத் தளர்த்தக் கோரி மனுத் தாக்கல் செய்திருந்தார். தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலை மையிலான அமர்வு, தேவைப்படும் பட்சத்தில் மட்டும் நோட்டீஸ் அளித்து ஆஜராக உத்தரவிடலாம் என்று தீர்ப்ப ளித்துள்ளது.

## டிச.14 வரை மழைக்கு வாய்ப்பு

**சென்னை, டிச.10:**

கிழக்கு திசை காற்றின் வேக மாறுபாடு கார ணமாக டிச.14 ஆம் தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்க ளிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசா னது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. மேலும், தெற்கு மத்திய வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய தென்மேற்கு வங்கக் கடலில் காற்றழுத்த தாழ்வு நிலை நீடிப்பதாக வானிலை நிபுணர் ஹேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

## நெற்பயிர்கள் பாதிப்பு: கணக்கெடுப்பு பணி தீவிரம்

**சென்னை, டிச.10:**

டிட்வா புயல் காரணமாக திருவாரூர் மாவட்டத்தில் பெய்த தொடர் கனமழையினால் விளை நிலங்களில் தண்ணீர் சூழ்ந்து சம்பா மற்றும் தாளடி பயிர்கள் அழுகி சேதமடைந்தன. பாதிக்கப் பட்ட விவசாயிகள் யாரும் விடுபடாத அளவிற்கு கணக்கெடுப்பு பணி நடத்தி டிச.12 ஆம் தேதிக்குள் முடிக்க திட்டமிட்டுள்ளதாக வேளாண் துணை இயக்கு நர் தெரிவித்துள்ளார். சென்னை வேளாண்மை துணை இயக்குநர் அறவாழி, திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி அருகே ராயநல்லூர், மாங்குடி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் பாதிக்கப்பட்ட விளைநிலங்களை நேரடியாகப் பார்வையிட்டு சேத விபர கணக் கெடுப்பு பணியை ஆய்வு செய்தார். 59 வேளாண்மை உதவி அலுவலர்கள் மற்றும் வருவாய்த்துறை அலு வலர்கள் இணைந்து பணியாற்றுவதாகவும் கூறினார். திருவாரூர் மாவட்டத்தில் 14 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் பாதிப்பு இருப்பதால், புதுக்கோட்டை மற்றும் மதுரை மாவட்டங்களில் இருந்து உதவி வேளாண் அலுவலர்கள் வரவழைக்கப்பட்டு கணக் கெடுப்பு பணி நடத்தப்படுவதாகவும், விவசாயி களுக்கு உரிய நிவாரணம் கிடைக்க அனைத்து நட வடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதாகவும் வேளாண் துணை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

# நெல்லையப்பர் கோவிலில் சிறப்பு செய்தல் திட்டம்; 70 வயதை கடந்த 50 தம்பதிகள் கௌரவிப்பு



**நெல்லை, டிச.10:**

நெல்லையப்பர் கோவிலுக்கு வந்திருந்த பக்தர்கள் முதிய தம்பதிகளிடம் ஆசி பெற்றனர்.

தமிழ்நாடு சட்டப்பேரவையில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தபடி 70 வயது பூர்த்தி அடைந்த முதிய தம்பதியர்களை கோவில் சார்பாக சிறப்பு செய்யும் நிகழ்ச்சி இந்து சமய அறநிலையத்துறை சார்பில் கோவில்களில் நடத்தப்பட்டு வருகிறது.

இந்து சமய அறநிலையத்துறையின் நெல்லை ஆணையர் மண்டலம் சார்பில் கடந்த மாதம் 10-ந் தேதி 70 வயது நிறைவடைந்த 55 தம்பதிகளை சிறப்பு செய்யும் நிகழ்ச்சி நெல்லை டவுனில் உள்ள நெல்லையப்பர் கோவிலில் நடந்தது. நேற்று 2-ம் கட்டமாக மேலும் 50 முதிய தம்பதிகளுக்கு சிறப்பு செய்யும் நிகழ்ச்சி நெல்லையப்பர் கோவிலில் உள்ள ஆறுமுகநயினார் சன்னதியில் நடந்தது.

இதையொட்டி கோவிலில் சிறப்பு யாக பூஜைகள் நடந்தன. பூஜை நிறைவடைந்த பிறகு 50 முதிய தம்பதிகளும் வரிசையாக அமர வைக்கப்பட்டனர்.

அவர்களுக்கு கோவில் அறங்காவலர் குழு தலைவர் செல்லையா, செயல் அலுவலர் வெங்கடேஸ்வரன் மற்றும் பிரமுகர்கள் இணைந்து மாலை அணிவித்து, புத்தாடைகள், சீர்வரிசை பொருட்கள், பழங்கள், பிரசாதம் அடங்கிய தாம்பூல தட்டுகளை வழங்கி கவுரவிக்கப்பட்டனர்.

இதையடுத்து கோவிலுக்கு வந்த பக்தர்கள் உள்பட பலரும் முதிய தம்பதிகளிடம் ஆசி பெற்றனர். 2-வது முறையாக நடந்த இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டது தங்களுக்கு மனநிறைவாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்ததாக முதிய தம்பதிகள் நெகிழ்ச்சியடைந்தனர்.

# ஊட்டி, குன்னூரில் உறைபனி பொழிவு தொடக்கம் - கடும் குளிரால் மக்கள் அவதி






**ஊட்டி, டிச.10:**

ஊட்டி, குன்னூரில் இந்தாண்டின் முதல் உறைபனி பொழிவு தொடங்கியது. கடும் குளிரால் மக்கள் அவதியடைந்து வருகின்றனர். நீலகிரி மாவட்டத்தில் ஆண்டுதோறும் நவம்பர் மாதம் தொடங்கி ஜனவரி வரை பனிக்காலம் நிலவுகிறது.

இந்நிலையில் கடந்த சில மாதங்களாக காலநிலை மாறுபாடு காரணமாக இந்த ஆண்டு நீலகிரி மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை, வடகிழக்கு பருவமழை தாமதமாக தொடங்கியது.

அந்த வரிசையைத் தொடர்ந்து தற்போது பனிக்காலமும் இந்த ஆண்டு தாமதமாக தொடங்கியது. இந்நிலையில் நவம்பர் மாதம் நீர் பனி தொடங்கிய ஒரு வாரத்துக்குள் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்தது.

அதன் பின்னர் டிட்வா புயலின் தாக்கம் காரணமாக பனிப் பொழிவு முற்றிலும் நின்றது. மேலும் மாவட்டம் முழுவதும் பல இடங்களிலும் கன மழை கொட்டித் தீர்த்தது.

இந்நிலையில், ஒரு மாதம் கழித்து நேற்று முதல் மீண்டும் பனிப் பொழிவு தொடங்கியுள்ளது. ஊட்டி தாவரவியல் பூங்கா தலைக்குந்தா, படகு இல்லம், பைக்காரா, மார்க்கெட், குதிரை பந்தய மைதானம், குன்னூர் ஜிம்கானா மைதானம், வெலிங்டன் ஏரி ஆகிய பகுதிகளில் அதிகாலை முதலே அதிக அளவில் பனி படர்ந்து காணப்பட்டது.

இதனால் சாலையோரம் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்கள் மீது பனி கொட்டிக் கிடந்தது. இதனால் வனப்பகுதிகள் அதிகம் கொண்ட நீலகிரி காலையில் பசுமையாக தெரியும் நிலையில் தற்போது வெண்மையாக காட்சியளிக்கிறது. ஊட்டி, குன்னூரில் காலை முதல் மாலை வரை வெயிலான காலநிலை நிலவுகிறது.

இரவு முதல் அதிகாலை வரை பனி அதிகரித்து இருப்பதால் பொது மக்கள் கடும் அவதிப்படுகின்றனர். இதற்கிடையே கடும் குளிரிலிருந்து தப்ப பொதுமக்கள் அதிகளவில் கம்பளி ஆடைகளை அணிகின்றனர். மேலும் ஒரு சிலர் ஆங்காங்கே தீ மூட்டி குளிர் காய்கின்றனர்.

இது குறித்து தோட்டக்கலைத்துறை துணை அதிகாரிகள் கூறும் போது, "உதகையில் நேற்று குறைந்தபட்சமாக 9 டிகிரி செல்சியஸ், அதிகபட்சமாக 17 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவானது. அடுத்த ஒரு சில வாரங்களில் மைனஸ் டிகிரியை வெப்பநிலை எட்டலாம். அதே சமயத்தில் காற்றில் ஈரப்பதத்தின் அளவு 58 சதவீதமாக இருந்தது" என்றனர்.

# வைகை அணையில் இருந்து கிருதுமால் நதிக்கு மீண்டும் நீர் திறப்பு

**ஆண்டிப்பட்டி, டிச.10:**

வைகை அணையில் கிருதுமால் நதிக்கு நிறுத்தப்பட்ட நீர் (டிச.9) மீண்டும் திறக்கப்பட்டது.

விருதுநகர் மாவட்டம் கிருதுமால் நதி தேவைக்காக வைகை அணையில் இருந்து கடந்த 5ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது. விநாடிக்கு 650 கனஅடி நீர் தொடர்ந்து டிச.12ம் தேதி வரை வெளியேற்ற திட்டமிடப்பட்டி ருந்தது.

இந்நிலையில் திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை கூட்டாற்றில் ராஜ்குமார் (32) என்ற கூலி தொழிலாளி ஆற்றில் சிக்கி உயிரிழந்தார்.

இவரது உடலை மீட்பதில் சிரமம் ஏற்பட்டதால் நேற்று வைகை அணையில் இருந்து கிருதுமால் நதிக்காக வெளியேற்றப்பட்ட நீர் நிறுத்தப்பட்டது.



இந்நிலையில் இறந்தவரின் உடல் மீட்கப்பட்டதால் அணையில் இருந்து நிறுத்தப்பட்ட நீர் மீண்டும் இன்று (டிச.9) முதல் வெளியேற்றப்பட்டு வருகிறது.

இதன்படி கிருதுமால் நதிக்காக விநாடிக்கு 650 கனஅடி, திண்டுக்கல், மதுரை மாவட்ட பாசனத்துக்காக கால்வாய் வழியே 700 கனஅடி, குடிநீர் திட்டங்களுக்காக 69 கனஅடிநீர் என மொத்தம் ஆயிரத்து 419 கனஅடி நீர் தற்போது அணையில் இருந்து சென்று கொண்டிருக்கிறது. அணை நீர்மட்டம் 64.21 அடியாகவும் (மொத்த உயரம் 71), நீர்வரத்து விநாடிக்கு ஆயிரத்து 565 கனஅடியாகவும் உள்ளது.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389



## நலம் தரும் மருத்துவம்

## குளிர் காலத்தில் சளி, இருமலுக்கு 'குட் பை'.. இத மட்டும் பண்ணுங்க..!



பருவகால நோய்த் தொற்றுகளுக்கு எதிராக இயற்கையான பாதுகாப்பை இஞ்சி வழங்குகிறது. இஞ்சி சாற்றை உங்கள் உணவில் சேர்த்துக் கொள்வதால் கிடைக்கும் சில நன்மைகள் பற்றி இங்கே பார்ப்போம்.

குளிர்காலம் அல்லது மழைக் காலங்களில் பெரும்பாலானோர் சளி மற்றும் இருமல் பிரச்சனையால் மிகவும் அவதிப்படுகிறார்கள். பொதுவாக, இருமலில் இரண்டு வகைகள் உள்ளன. ஒன்று வறட்டு இருமல், மற்றொன்று சளியுடனான இருமல். ஒருவர் பல நாட்களாக இருமலை அனுபவித்தால், அது பல நோய்களுக்கான அறிகுறியாகும். மேலும் இருமலானது ஒருவரை அசௌகரியமாக உணர வைக்கும். அதில் வறட்டு இருமல் வறட்சியான குளிர் காற்றினால் ஏற்படக்கூடியது. அதே சமயம் சளியுடனான இருமலின் போது சளி வெளிவரக்கூடும். இந்த இரண்டு பிரச்சனைகளுக்கும் எடுத்த எடுப்பிலேயே இருமலுக்கான சிரப் மற்றும் மருந்துகளை எடுப்பதற்கு பதிலாக இயற்கை வழிகளை முயற்சிப்பது சிறந்த பலனை அளிக்கும்.

நம் முன்னோர்கள் இருமலுக்கு இயற்கை வைத்தியங்களை தான் பின்பற்றினார்கள். அதில் இருமலுக்கு பயன்படுத்திய பொருள் தான் இஞ்சி. எனவே உங்கள் உணவில் இஞ்சியை சேர்த்துக் கொள்வது, குளிர்கால சளி மற்றும் இருமலின் பிரச்சனையை எதிர்த்துப் போராடுவதற்கான சக்திவாய்ந்த இயற்கை மருந்தாகும். வைட்டமின்கள், ஆன்டி இன்ஃபிளமேட்டரி பண்புகள் மற்றும் ஆன்டிஆக்ஸிடண்ட்கள் நிரம்பிய இஞ்சி சாறு குளிர்கால நோய்களுக்கு ஒரு சக்திவாய்ந்த தீர்வாகும். நாசி நெரிசல் மற்றும் தொண்டை புண்களை நீக்குவதோடு, நோய் எதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்கிறது. மேலும், பருவகால நோய்த் தொற்றுகளுக்கு எதிராக இயற்கையான பாதுகாப்பையும் வழங்குகிறது. இஞ்சி சாற்றை உங்கள் உணவில் சேர்த்துக் கொள்வதால் கிடைக்கும் சில நன்மைகள் பற்றி பார்ப்போம்.

இஞ்சி சாறு குடிப்பதால் கிடைக்கும் நன்மைகள்...

### நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது

இஞ்சியில் ஆன்டி-ஆக்ஸிடன்ட்கள் நிறைந்துள்ளன. இதில் உள்ள ஜிஞ்சரால் ஆன்டி இன்ஃபிளமேட்டரி பண்புகளைக் கொண்டுள்ளது. இவை நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்துகிறது. நோய் எதிர்ப்பு செயல்பாட்டை மேம்படுத்தும் ஆன்டி பாக்டீரியல் பண்புகள் இஞ்சியில் உள்ளன. இது சளி, காய்ச்சல் மற்றும் தொற்று நோய்களில் இருந்து பாதுகாக்கிறது.

### தொண்டை புண் மற்றும் இருமல் நீங்கும்

இஞ்சி சாறு ஆனது தொண்டை புண் மற்றும் இருமலை போக்க உதவுகிறது. கூடுதலாக, இஞ்சியில் உள்ள ஆன்டி பாக்டீரியல் பண்புகள் சுவாச மற்றும் தொண்டை நோய்த் தொற்றுகளுக்கு எதிரான போராட்டத்தில் உதவுகின்றன.

### சுவாச பிரச்சனைகளை நீக்குகிறது

இஞ்சியில் ஆன்டி இன்ஃபிளமேட்டரி, ஆன்டி பாக்டீரியல் மற்றும் வைரஸ் எதிர்ப்பு பண்புகள் நிறைந்துள்ளன. இது உடலில் ஏற்படும் வீக்கம், சளி, இருமல் மற்றும் வைரஸ் பிரச்சனைகளை நீக்குகிறது. இதன் மருத்துவ குணங்கள் சுவாச மண்டலத்தை சுத்தப்படுத்தி, சுவாச ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது.

### செரிமானத்தை மேம்படுத்துகிறது

இஞ்சி டைஜஸ்டிவ் என்சைம்ஸ் உற்பத்தியை தூண்டுவது மட்டுமல்லாமல் சிறந்த செரிமானம் மற்றும் ஊட்டச்சத்துக்களை உறிஞ்சுவதற்கு உதவுகிறது. மேலும் இது, அஜீரணம் மற்றும் குமட்டல் போன்ற பிரச்சனைகளையும் நீக்குகிறது.

# பொதுத்துறை வங்கிகள் வாராக் கடன் ரூ.6.15 லட்சம் கோடி

**மும்பை, டிச.10:**

ரிசர்வ் வங்கியின் புள்ளி விவரம் வருமாறு: கடந்த 2020-21 நிதி யாண்டில் பொதுத் துறை வங்கிகள் ஒட்டுமொத்த அளவில் அதிகபட்சமாக ரூ.1.33 லட்சம் கோடியை வாராக் கடனாக அறிவித்தன. இது, 2021-22-ல் 1.16 லட்சம் கோடியாக குறைந்து பின்னர் 2022-23-ல் ரூ.1.27 லட்சம் கோடியாக உயர்ந்தது.வாராக் கடன் பிரிவில் கடந்த ஐந்து ஆண்டுகளில் பொதுத் துறை வங்கிகள் ரூ.1.65 லட்சம் கோடியை மட்டுமே மீட்டெடுத்துள்ளன.

இந்நிலையில், 2025 செப்டம்பர் நிலவரப்படி பொதுத்துறை வங்கிகளின் வாராக் கடன் ரூ.6.15 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளது.

## 12 வங்கிகளில் உரிமை கோரப்படாத டெபாசிட் - ரூ.58,331 கோடி முதலீட்டாளர் விழிப்புணர்வு நிதியத்துக்கு மாற்றம்

**புதுடெல்லி, டிச.10:**

வங்கிகளில் உரிமை கோரப்படாமல் இருக்கும் டெபாசிட் தொகையை உரியவர்களிடம் ஒப்படைக்கும் நடவடிக்கையாக 'உங்கள் பணம், உங்கள் உரிமை' திட்டத்தை மத்திய அரசு அக்.4-ல் தொடங்கியது.

இந்த நிலையில், பொதுத் துறை வங்கி வாரியாக எவ்வளவு தொகை உரிமை கோரப்படாமல் இருக்கிறது என்று மாநிலங்களவை உறுப்பினர் புலோ தேவி நேதம் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு மத்திய நிதித் துறை இணையமைச்சர் பங்கஜ் சவுத்ரி அளித்த பதிலில் கூறியிருப்பதாவது: வங்கிகளில் உரிமை கோரப்படாமல் இருக்கும் டெபாசிட்டுகளை நிர்வகிப்பதற்காக ரிசர்வ் வங்கி டெபாசிட்டுகள் முதலீட்டாளர் கல்வி மற்றும் விழிப்புணர்வு (டிஇஏ) (2014) நிதியத்தை உருவாக்கியுள்ளது.

பத்தாண்டுகளுக்கும் மேலாக செயல்படாமல் இருக்கும் நடப்பு மற்றும் சேமிப்பு கணக்குகளில் உள்ள இருப்பு இந்த நிதியத்துக்கு மாற்றப்படுகிறது. அதேபோன்று முதிர்வடைந்த பிறகு பத்தாண்டுகள் வரை யாரும் உரிமை கோராத டெபாசிட்டுகளும் டிஇஏ நிதியத்துக்கு மாற்றப்படுகின்றன.அந்த வகையில் ஜூன் 30, 2025 நிலவரப்படி, எஸ்பிஐ வங்கியில் யாரும் உரிமை கோராத ரூ19,330 கோடி டிஇஏ-க்கு மாற்றப்பட்டுள்ளது.


இதையடுத்து பஞ்சாப் நேஷனல் வங்கி ரூ.6,911 கோடி, கனரா வங்கி ரூ.6,278 கோடி, பரோடா வங்கி ரூ.5,277 கோடி, யூனியன் வங்கி ரூ.5,105 கோடி தொகை டிஇஏ-நிதிய கணக்குக்கு மாற்றப்பட்டுள்ளது.

இவை தவிர, பேங்க் ஆப் இந்தியா (ரூ.3,934 கோடி), இந்தியன் வங்கி (ரூ.3,740 கோடி), ஐஓபி (ரூ.2,386 கோடி), சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா (ரூ.2,092 கோடி), யூகோ வங்கி (ரூ.1,312 கோடி) ஆகிய வங்கிகளிலிருந்தும் உரிமை கோரப்படாத தொகை டிஇஏ-க்கு மாற்றப்பட்டுள்ளது. ஒட்டுமொத்த அளவில் 12 பொதுத் துறை வங்கிகளில் இருந்த ரூ.58,331 கோடி டெபாசிட்டுகள் டிஇஏ-க்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு அவர் கூறினார்.

# கொரோனாவுக்குப் பின் இதய நாள தளர்ச்சியால் பாதிப்போர் அதிகரிப்பு: அரசு மருத்துவர்கள் நடத்திய ஆய்வில் தகவல்

**சென்னை, டிச.10:**

கொரோனா பெருந்தொற்றுக்கு பிறகு இதய நாளத் தளர்ச்சி பாதிப்புக்கு உள்ளானவர்கள் எண்ணிக்கை நான்கு மடங்கு உயர்ந்திருக்கிறது என தமிழ்நாடு அரசு மருத்துவ ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றனர். சென்னை ஓமந்தூரார் அரசு பன்னோக்கு மருத்துவமனை மருத்துவர்கள் 2017-2023 வரை 19,720 பேரின் ஆஞ்சியோ பரிசோதனை முடிவுகளை ஒப்பிட்டு ஒரு ஆய்வை மேற்கொண்டனர். இந்த ஆய்வு அறிக்கை ஐரோப்பியன் ஹார்ட் ஜர்னல் என்ற உலகப் புகழ்பெற்ற ஆய்விதழில் வெளியாகியுள்ளது.



இதயத்திற்கு செல்லும் ரத்த நாளங்கள் ஒன்றரை மடங்கு அல்லது அதற்கு மேல் வீக்கமடையும் நிலையை இதய நாளத் தளர்ச்சி என்கிறோம். இதன் காரணமாக இதயத்தில் தசைகளுக்கு செல்லும் ரத்தம் ஓட்டம் குறையும் அல்லது தடைபடும். இதனால் நாளங்களில் ரத்த உறைவு ஏற்பட்டு மாரடைப்பு அல்லது வேறு விதமான தீவிர இதய பாதிப்புகளுக்கு வழிவகுக்கும். கொரோனா பெருந்தொற்று காலத்திற்கு முன்பு அரிதானதாக இருந்த இதய நாளத் தளர்ச்சி பிரச்சனை இப்போது கணிசமாக அதிகரித்துள்ளதாக மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

கொரோனாவுக்கு முன் 15 விழுக்காடாக இருந்த இதய நாளத் தளர்ச்சி விகிதம் கொரோனாவுக்கு பிறகு 62 விழுக்காடாக அதிகரித்துள்ளது. இந்த ஆய்வு அறிக்கையின் படி இணை நோய்கள் இல்லாத இளம் வயதினருக்கு இதய நாளத் தளர்ச்சி பாதிப்பு இருமடங்கு அதிகரித்துள்ளது. குறிப்பாக 30 முதல் 40 வயது உட்பட்டவர்களில் அதன் விகிதம் 7 விழுக்காட்டில் இருந்து 14 விழுக்காடாக உயர்ந்துள்ளது. இளைஞர்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்றும் புகைபிடிப்பதை அறவே தவிர்ப்பதோடு சர்க்கரை மற்றும் ரத்த அழுத்த அளவுகளை கட்டுப்பாட்டில் வைக்க வேண்டும் என்றும் மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர். மேலும் ஆபத்துகளை தவிர்க்க அனைவரும் ஆண்டுக்கு ஒருமுறை முழு உடல் பரிசோதனை செய்து கொள்வது அவசியம் என்றும் மருத்துவர்கள் வலியுறுத்துகின்றனர்.

# திமுகவில் இருந்து விலகி அதிமுகவில் இணைந்த செங்கோட்டையன் அண்ணன் மகன்

**சென்னை, டிச.10:**

செங்கோட்டையனின் அண்ணன் மகன் செல்வம் திமுகவில் இருந்து விலகி எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் அதிமுகவில் இணைந்துள்ளார்.

இது குறித்து அதிமுக சார்பில் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்: "சென்னை, பசுமை வழிச் சாலையில் உள்ள செவ்வந்தி இல்லத்தில் இன்று முன்னாள் அமைச்சர் செங்கோட்டையனின் உடன் பிறந்த மூத்த சகோதரர் காளியப்பனின் மகனும், திமுக குமாரபாளையம் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் மு.மு. செல்வன், திமுகவில் இருந்து விலகி அதிமுகவில் இணைத்துக் கொண்டார். மேலும், செல்வத்துடன், குள்ளம்பாளையம் கிராமம், கோபிசெட்டிப்பாளையம் தொகுதி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 50-க்கும் மேற்பட்டோர் இன்று அதிமுகவில் தங்களை இணைத்துக் கொண்டனர்.



கடந்த சில நாட்களுக்கு முன்பு, அதிமுகவின் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன், நடிகர் விஜய் தொடங்கிய தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்தார். இந்த சூழலில் செங்கோட்டையனின் அண்ணன் மகன் அதிமுகவில் இணைந்து இருப்பது குறிப்பிடத்தக்கது.

# தவெக கூட்டத்தில் பாஸ் இல்லாதோருக்கும் அனுமதி: புஸ்ஸி ஆனந்தை எச்சரித்த பெண் எஸ்பி!

**புதுச்சேரி, டிச.10:**

விஜய் வருவதற்கு 5 நிமிடம் முன்பு பாஸ் இல்லாதோருக்கும் அனுமதி தந்தனர். பாஸ் இல்லாமல் அனைவரையும் அனுமதித்ததால் புஸ்ஸி ஆனந்துக்கு புதுச்சேரி பெண் எஸ்பி எச்சரிக்கை விடுத்தார்.

தவெக பொதுக்கூட்டத்துக்கு 5 ஆயிரம் பேருக்கு மட்டும் கியூ ஆர் கோடுடன் கூடிய பாஸ் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் புதுவையின் அண்டை மாவட்டங்களான கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி மாவட்டங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான இளைஞர்களும், இளைஞிகளும் பொதுக்கூட்டம் நடைபெறும் துறைமுக வளாக பகுதிக்கு காலையிலேயே வந்து நின்றிருந்தனர். போலீஸார் அவர்கள் யாரையும் அனுமதிக்கவில்லை. கியூ ஆர் கோடு வைத்திருந்தவர்கள் மட்டும் முதலில் அனுமதிக்கப்பட்டனர். ஆனால் போலீஸாரால் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு கூட்டம் நெருக்கியது. தவெக பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த் அனைவரையும் உள்ளே அனுமதிக்கும்படி கோரினார். இதையடுத்து போலீஸார் பகுதி பகுதியாக பாஸ் இல்லாதவர்களையும் நெரிசல் இன்றி உள்ளே செல்ல அனுமதித்தனர். உப்பளம் துறைமுக வளாக பகுதி சுமார் 25 ஆயிரம் பேர் நின்றாலும் நெரிசல் ஏற்படாது. இதனால் பாஸ் இல்லாதவர்களையும் உள்ளே செல்ல அனுமதித்ததாக போலீஸார் தெரிவித்தனர். விஜய் பொதுகூட்ட வளாகத்துக்கு வருவதற்கு 5 நிமிடம் முன்பு பாஸ் இல்லாத அனைவரும் அனுமதிக்கப்பட்டனர். புஸ்ஸி ஆனந்தை எச்சரித்த பெண் எஸ்பி: பாஸ் இல்லாமல் அனைவரையும் அனுமதித்ததால் புஸ்ஸி ஆனந்துக்கு புதுச்சேரி பெண் எஸ்பி எச்சரிக்கை விடுத்தார்.

தவெக பொதுக்கூட்டத்துக்கான பாதுகாப்பு பணியில் புதுவை கிழக்கு எஸ்பி இஷா சிங் ஈடுபட்டிருந்தார். கியூ ஆர் கோடு இல்லாதவர்களை அவர் உள்ளே செல்ல அனுமதி மறுத்தார்.

அப்போது அங்கு வந்த தவெக பொதுச்செயலாளர் ஆனந்த் மற்றும் நிர்வாகிகள், மைதானத்தில் நிறைய இடம் உள்ளது. பாஸ் இல்லாத தொண்டர்களையும் உள்ளே செல்ல அனுமதிக்கும்படி கோரினர்.

இதனால் ஆவேசமடைந்த பெண் எஸ்பி, "உங்களால் ஏற்கனவே 40 பேர் உயிரிழந்துள்ளனர். காவல்துறை என்ன செய்ய வேண்டும்? என நீங்கள் சொல்லாதீர்கள். இங்கு ஏதேனும் அசம்பாவிதம் ஏற்பட்டு உயிரிழப்பு ஏற்பட்டால் நாங்கள்தான் பொறுப்பேற்க வேண்டும், நாங்கள்தான் பதில் சொல்ல வேண்டும்.

உங்களுக்கு அளிக்கப்பட்ட நிபந்தனைகளை சரியாக பின்பற்றுங்கள்" என தெரிவித்தார். இதனால் ஆனந்த் மற்றும் நிர்வாகிகள் திரும்பினர். ஆனால், பின்னர் போலீஸார் அனைவரையும் அனுமதித்தனர்.




## நிபுணர் குழு அமைப்பு

**சென்னை, டிச.10:**

யானைகளை இடமாற்றம் செய்யும்போது கடைப்பிடிக்க வேண்டிய விரிவான வழி காட்டு நெறிமுறைகளை உருவாக்க தமிழக அரசு நிபுணர் குழுவை அமைத்துள்ளது.

கடந்த சில மாதங்களில் இரண்டு காட்டு யானைகள் இட மாற்றத்தின் போது உயிரிழந்ததை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் அ. உதயன் தலைமையிலான ஆறு உறுப்பினர்கள் கொண்ட இக்குழு, யானைகளைப் பிடித்தல், கையாளுதல், இடமாற்றம் செய்தல் மற்றும் கண்காணித்தல் தொடர்பான அறிவியல் அடிப்படையிலான நெறிமுறைகளை உருவாக்கும். குழு 2 மாதங்களுக்குள் தனது அறிக்கையை அரசுக்கு சமர்ப்பிக்கும்.

## திருப்பத்தூர் நகராட்சி நிர்வாகத்தை கண்டித்து தர்ணா

**திருப்பத்தூர், டிச.10:**

திருப்பத்தூர் நகராட்சிக்கு உட்பட்ட 36வது வார்டு திருமால் நகர் பகுதியில், கடந்த சில மாதங்களாகக் குடிநீருடன் பாதாள சாக்கடைக் கழிவு நீர் கலந்து வருவதாக நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து நகராட்சி ஆணையாளரிடம் பலமுறை புகாரளித்தும் நடவடிக்கை எடுக்கப்படாததால் ஆத்திரமடைந்த அப்பகுதி மக்கள், 36வது வார்டு கவுன்சிலர் வெற்றிகொண்டான் தலைமையில் நகராட்சி அலுவலகம் முன்பு தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து, நகராட்சி ஆணையாளர் பொதுமக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். ஒரு வார காலத்திற்குள் இப்பிரச்சனை சரிசெய்யப்படும் என்று வாக்குறுதி அளித்ததன்பேரில், போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கலைந்து சென்றனர்.

## விளாப்பக்கம் அதிமுக சார்பில் ஜெயலலிதா நினைவு தினம்

**ஆற்காடு டிச.10:**

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு சட்டமன்றத் தொகுதி விளாப்பாக்கம் பேரூர் அதிமுக சார்பில் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் ஒன்பதாவது நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது நிகழ்ச்சிக்கு திமிரி ஒன்றிய முன்னாள் எம்ஜி..ஆர் இளைஞர் அணி செயலாளர் கே எத்திராஜ் தலைமை தாங்கினார்.

முன்னாள் பேரூராட்சி தலைவர் செல்வி ராமசேகர் அலங்கரிக்கப்பட்ட ஜெயலலிதா உருவப்படத்திற்கு மாலை அணிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட பேரவை துணை செயலாளர் வி பி ரவி நிர்வாகிகள் வேலாயுதம் செல்வம் மோகனம் அவை தலைவர் ராமசாமி ஆசிநாதன் மணவாளன் டி எஸ் மணி சந்திரன் கமலநாதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்

# தெரியுமா உங்களுக்கு...இனி பெண்கள் 10 லட்சம் வரை பிணையம் இன்றி கடன் பெறலாம்..!

தமிழகத்தில் நடைமுறையில் உள்ள பெண்களுக்கான நலத் திட்டங்களில் முக்கிய இடத்தைப் பெறுகிறது மகளிர் சுய உதவிக் குழு (Self Help Group SHG). பெண்களைக் கொண்டு பெண்களாலேயே நடத்தப்படும் இந்தத் திட்டத்தின் மூலம் தங்கள் வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொண்ட பெண்கள் ஏராளம்.

இத்திட்டம் முதலில், 1989-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதி (IFAD) உதவியுடன், தமிழகத்தில் — தர்மபுரி மாவட்டத்தில் துவங்கப்பட்டதாகவும் பின் 1997 98 ஆகும்வரை மகளிர் திட்டமாக மாநில அரசின் நிதியுடன் SHG-கள் மற்ற பகுதிகளுக்கும் விரிவாக்கம் செய்யப்பட்டன என்றும் கூறப்படுகிறது.

மகளிர் சுய உதவிக் குழு என்பது பெண்களின் பொருளாதார, சமூக முன்னேற்றத்தைப் பலப்படுத்த உருவாக்கப்படும் சிறிய குழுவாகும். பொதுவாக ஒரே பகுதியில் வாழும் பொருளாதாரம் தேவைப்படும் பெண்கள் ஒன்றிணைந்து, சேமிப்பை வழக்கமாக்க, சிறுகடன் பெற, வருமானம் உருவாக்கும் தொழில்கள் செய்து அதன் மூலம் சமூக, பொருளாதார முன்னேற்றத்தை அடைய உதவும் ஒரு தன்னார்வ குழுவாக 10 முதல் 20 பெண்கள் சேர்ந்து இந்தக் குழுவை அமைக்கிறார்கள்.

இத்திட்டத்தின் மூலம் பெண்களின் சுயநம்பிக்கை மற்றும் தலைமைத் திறன் வளர்த்தல் , சிறுசேமிப்பு பழக்கத்தை உருவாக்கல், வங்கி கடன் பெறும் சாத்தியத்தை அதிகரித்தல் சுயதொழில்/சிறுதொழில் மேம்படுத்தல், குடும்பத்தின் சராசரி வருமானத்தை உயர்த்தல் மற்றும் சமூக பிரச்சினைகளில் பெண்களின் பங்கேற்பை அதிகரித்தல் போன்ற பெண்களுக்கான நன்மைகள் சாத்தியமாகிறது.





இதன் நடைமுறை எளிதானது. குழுவில் உள்ள ஒவ்வொரு பெண்ணும் மாதந்தோறும் ஒரு சிறுசேமிப்பு செலுத்துவார்கள். சேமிப்பின் அடிப்படையில் குழு ஒரு பொது நிதியை உருவாக்கும். உறுப்பினர்கள் தேவையின்படி அதிலிருந்து சிறுகடன் பெறலாம்.குழுவின் நம்பகத்தன்மையைப் பார்த்து வங்கிகள் SHG Bank Linkage மூலம் பெரிய கடன்களும் வழங்குகின்றன. குழுவின் கூட்டங்கள், கணக்குகள், முடிவுகள் அனைத்தும் ஜனநாயக முறையில் நடைபெறுவது சிறப்பு..


தமிழ்நாட்டில் தமிழ்நாடு மகளிர் திறன் வளர்ச்சி கழகம் (TNCDW) மூலம் Mahalir Thittam ,PM-SHGS, NRLM போன்ற திட்டங்களின் கீழ் பெண்களுக்கு பயிற்சிகள், உற்பத்தி அலகுகள், சந்தை இணைப்பு போன்றவைகள் வழங்கப்பட்டு வருகிறது..

தொழில் ஆரம்பிக்க உதவியுடன் பொருளாதார பாதுகாப்பு ,சமூகத்தில் நிலையான மரியாதை

கல்வி, சுகாதாரம் குறித்து விழிப்புணர்வு என இத்திட்டம் பல பயன்களைத் தருகிறது

இந்நிலையில் தமிழக அரசு ஒரு முக்கியமான அறிவிப்பை வெளியிட்டுள்ளது. அதன்படி, பெண்கள் சுய உதவிக் குழுக்கள் (SHG) மூலம் எளிதாகக் கடன் பெறும் வகையில், கடன் வழங்கும் நிறுவனங்கள் தொடர்பான நடவடிக்கைத் தடுப்புச் சட்ட விதிகளை உருவாக்கி அமல்படுத்தியுள்ளது. கடந்த ஜூன் மாதம் தமிழக சட்டப்பேரவையில் மசோதாவாகத் தாக்கல் செய்யப்பட்டு இந்தச் சட்டத்தில் உள்ள விதி முறைகள் செயல்பாட்டுக்கு வந்துள்ளதாக தகவல்கள் கூறுகின்றன. இதன்படி பெண்கள் எளிதில் கடன் பெறுவதில் சலுகைகளை பெற வழிவகுக்கும் மேலும் கடன் வழங்கும் நிறுவனங்கள் புதிய விதிகளை ஏற்று செயல்படும் என்று தெரிகிறது. புதிய விதிகளின்படி கடன் நடவடிக்கைகளைச் சிறப்பாகக் கண்காணிக்கவும், கடன்களின் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தவும் உதவும் வகையில் ஒவ்வொரு நிதியாண்டுக்கான வருடாந்திர அறிக்கையையும் செப்டம்பர் 30 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ நியமிக்கப்பட்ட போர்ட்டலில் கடன் வழங்கும் நிறுவனங்கள் பதிவேற்றம் செய்யவும் இந்தப் பதிவுகள் குறைந்தபட்சம் எட்டு ஆண்டுகளுக்குப் பராமரிக்கவும் அறிவுறுத்தப்படுகிறது. குறிப்பாக தனிநபர்களுக்கு வழங்கும் ரூ.4 லட்சம் வரையிலான கடன்களுக்குப் பிணையம் (Guarantee/Security) எதுவும் பெறக் கூடாது எனவும் மகளிர் சுய உதவிக் குழுக்களிடம் இருந்து ரூ.10 லட்சம் வரை கடன்களுக்குப் பிணையம் எதுவும் பெறக் கூடாது எனவும் கூறப்பட்டுள்ளது அனைவரின் கவனத்தையும் பெற்றுள்ளது. இதன் மூலம் வியாபாரம் அல்லது வேறு தொழில்களைத் தொடங்க விரும்பும் பெண்கள், சுய உதவிக் குழுவில் உறுப்பினராகச் சேர்ந்து மகளிர் சுய உதவிக் குழுக்களில் கடன் பெறுவதற்கு, அந்தக் குழு 6 மாதங்கள் செயல்பாட்டில் இருக்க வேண்டும் என்ற பொது விதியை கடைப்பிடித்து குறைந்த வட்டியில் ரூ.10 லட்சம் வரை எளிதாகக் கடன் பெற முடியும். மேலும் 18 முதல் 70 வயதுடைய பெண்கள், கணவரால் கைவிடப்பட்டவர்கள், கணவரை இழந்த கைம்பெண்கள் ஆகியோருக்கு இந்தக் குழுக்களில் கடன் பெற முன்னுரிமை அளிக்கப்படும். இதன் செயல்பாட்டைக் கருத்தில் கொண்டு வங்கி, கடனுக்கான தகுதியை உறுதி செய்யும் எனப்படுகிறது.

# அவன் அவள் காதல்



தனது தோழிகள் திருமணத்திற்குப் பிறகு வண்ணமயமான உடைகளில், கைகோர்த்தபடி, முத்தமிட்டபடி, காதலை வெளிப்படுத்தும் ரொமான்ஸ் புகைப்படங்களை தினசரி இன்ஸ்டாகிராமிலும் ஃபேஸ்புக்கிலும் பதிவிட்டுக்கொண்டிருக்க, தன் கணவன் ஜனா ஏன் அப்படிப்பட்ட வெளிப்படையான பாசத்தைக் காட்டுவதில்லை என்று நிஷா வருத்தப்பட்டாள். அவள் அவ்வாறு யோசித்துக்கொண்டிருக்கும்போது, ஜனா அவளுக்கு அலைபேசியில் அழைத்தார்.

நிஷாவுக்குத் தொலைபேசியில் அடிக்கடி பலரிடமிருந்து அழைப்புகள் வரும். ஆனால், ஜனா அழைக்கையில், அந்த அழைப்பை நிஷா மட்டுமே எடுக்க வேண்டும் என்பதில் அவன் மிகுந்த பிடிவாதமாக இருப்பான். ஒருமுறை, நிஷா சமையலறையில் இருந்தபோது, நிஷாவின் தாயார் தொலைபேசியை எடுத்து, "நிஷா கிச்சனில் இருக்கிறாள், பிறகு பேசச் சொல்கிறேன்" என்று ஜனாவிடம் சொன்னார். அதைக் கேட்ட ஜனாவுக்குப் பிடிக்கவில்லை. நிஷாவுக்கு வரும் அழைப்பை, அதுவும் தான் அழைக்கும்போது, நிஷா மட்டுமேதான் எடுக்க வேண்டும்; இடையில் வேறு யாரும் பேசுவது அவனுக்குச் சற்றும் பிடிக்காது. இது அவளுடைய தனிப்பட்ட இடத்தில் மற்றவர்கள் தலையிடுவதை ஜனா விரும்பாததைக் காட்டியது.

இன்று, ஜனா அருகிலிருக்கும்போதே, நிஷா தனது அலைபேசியின் அழைப்பைத் தானே எடுக்காமல், வேறு ஒருவரை எடுத்துப் பேசும்படிச் சொன்னாள்.

"நிஷா! உனக்கு நான் அழைக்கும்போது, வேறு யாரும் உன் அழைப்பை எடுக்கக் கூடாது என்று எனக்குத் தெரியும் அல்லவா? ஏன் இப்படிச் செய்தாய்?" என்று ஜனா கேட்டபோது நிஷா திடுக்கிட்டாள்.

பிறகு அவளுடைய தோழி அவளிடம் பேசும்போது இந்தக் குழப்பத்தைக் குறித்து எடுத்துரைத்தாள்: "நிஷா, யோசித்துப் பார். அவர் உன்மேல் கோபப்படுவதற்குக் காரணம், நீ அவருக்கு எவ்வளவு பிரத்தியேகமானவள் என்பதால்தான். நீ அவருக்குச் சொந்தமானவள், உன் தனிப்பட்ட உரையாடலில் யாருக்கும் இடம் தரக்கூடாது என்று அவர் நினைப்பதற்குக் காரணம், அவர் உன்னை அந்த அளவுக்கு ஆழமாக நேசிக்கிறார், காதலிக்கிறார், உன்னுடன் நெருக்கமாக இருக்க விரும்புகிறார் என்பதுதான். உண்மைக் காதல், இந்த பிரத்தியேகமான அக்கறையிலும் உரிமையிலும்தான் இருக்கிறது. வெளி உலகத்துக்குக் காட்டுவதிலில்லை!"

அந்த ஆழமான உண்மை நிஷாவுக்கு இப்போதுதான் புரிந்தது. ஜனா தனது அன்பை வெளிப்படுத்த சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தவில்லை என்றாலும், தனக்கு வரும் ஒரு பிரத்தியேக அழைப்பைக்கூட நிஷா மட்டுமே எடுக்க வேண்டும் என்று அவன் எதிர்பார்ப்பதுதான், அவன் அவளை எவ்வளவு தீவிரமாக நேசிக்கிறான் என்பதற்கான மிகப்பெரிய ஆதாரம்.



**-ஜனனி அந்தோணி ராஜ்**
திருச்சிராப்பள்ளி

# திருந்தினான் வெங்கி !

இரண்டு மாதம் முன்னால் வரை சேமிப்பு என்றால் காத தூரம் ஓடிய வெங்கடேசன் சமீபத்தில் மனம் மாறினான். காரணம் அவன் மனைவி சுசீலா.

போனமாதம் திடீரென உடல்நலக் கோளாறு ஏற்பட்டது வெங்க டேசனுக்கு ! பாழும் குடி மற்றும் பான் பராக்கு போடும் பழக்கம் இருந்ததால் ஈரப்பதம் குறைந்துபோய் ஆசனவாய் இறுகிப்போனது. மலம் வெளியேற மிகவும் சிரமமாய் இருந்தது. வலி உயிர்போனது. மருத்துவரிடம் கொண்டு காண்பித்ததில் Fissure நோயினால் ஆசனவாய் சிறுத்துப் போய் ஆங்காங்கே வெடிப்பு ஏற்பட்டு இரத்த கசிவு உண்டாகி இருக்கிறது. அதனால் உடனே அறுவைச் சிகிச்சை செய்யவேண்டும் அதற்கு 60,000/ ரூபாய் செலவாகும் என கூறியிருக்கிறார் மருத்துவர். கேட்ட வெங்கடேசன் அதிர்ந்து போனான். கார ணம் கை நிறைய சம்பாதித்தாலும் சேமிப்பு இல்லாததால் மருத்துவச் செவவுக்கு எப்படி பணம் புரட்டுவது என தெரியாமல் விழித்தான்.



ஆனால் மனைவி சுசீலா சமயத்தில் கை கொடுத்தாள். மறுநாள் போஸ்ட் ஆஃபிஸிக்குச் சென்று கணவனின் அறுவைச் சிகிச்சைக்காக தேவை யான பணம் ட்ரா செய்து கொண்டு வந்து மருத்துவ மனையில் கட்டினாள் !

அறுவைச் சிகிச்சை நல்லபடியாக முடிந்துநிம்மதியாக வீடுவந்து சேர்ந்த வெங்கடேசன் பணம் பற்றி கேட்க அதற்கு சுசீலா, " நீங்க வீட்டுச் செலவுக்குன்னு கொடுத்து வந்த பணத்தில் மாதம் 1000 ரூபாய் மிச்சம் பிடித்து அதை என் பெயரில் ஆர். டி அக்க வுண்ட் ஓபன் பண்ணி போஸ்ட் ஆஃபிஸில் போட்டு வந்தேன். அஞ்சு வருஷம் முடிஞ்சு ரெண்டுமாதம் முன்னால மெசூரான பணம் வட்டி யோட கெடச்சிது. அதை என் சேவி ங்ஸ் பேங்க் அக்கவுண்ட்டில போட் டேன். அந்தப் பணம்தான் உங்க ஆபரேஷனுக்கு உபயோகமா இருந்தது"

நெகிழ்ச்சியுடன் மனைவியின் கையைப் பிடித்த வெங்கடேசன் , " ஒவ்வொரு கணவனின் பின்னால் அவனோட மனைவி துணையா இருப்பாள் என்பதை நீ உறுதி செய்திட்டே சுசீ ! சேமிப்பை நான் துச்சமா மதித்தேன். அதனால் குடி பாக்குன்னு பணத்தோட அருமை தெரியாமல் கண்டபடி செலவு செஞ்சேன். சேமிப்பு nil. ஆபரேஷ னுக்கு என்னால ஒத்த ரூபாக் கூட புரட்ட முடியல்ல...சே ! " கண்ணீர் மல்கினான்.

" பரவாயில்லங்க. இதுக்கு ஏன் இப்படி. வருத்தப்படறீங்க ! அட்லீஸ்ட் இனிமேலாவது நமக்கு அஞ்சுவயசில் ஒரு பெண் இருக்காள்ங்குறத நினை ச்சிக்கிட்டு கேர்ஃபுல்லா இருக்கப் பாருங்க !"

" கரெக்ட் சுசீ ! என்கிட்ட இருக்கற எல்லா கெட்டப் பழக்கங்களையும் விட்டு ஒழிக்கப் போறேன். இனி வரும் மாதம் முதல்எவ்வளவு பணம் சேமிக்க முடியுமோ அவ்வளவையும் தயார் பண்ணப் போறேன்.என் கண்ணத் திறந்த தெய்வம் நீ !" புன்சிரிப்போடு சொன்ன கணவனை " என்னநீங்க தெய்வம் அது இதுன்னு என்னைப் புகழுறீங்க ! உங்க பணம் உங்களுக்கு செலவாச்சு !"

" பணம் என்னிதுதான். ஆனால் சேமிப்பு உன்னோடதுதானே ! தக்க சமயத்துல நீ பணம் கொண்டு வந்து கட்டினது தெய்வாதீனம்னே !"

" சரி சரி ரெஸ்ட் எடுங்க. உங்கப் பொண்ணு டியூஷன் முடிந்து வந்து பசிக்கிறதுன்பா. டிபன் செய்யணும் "என்படி எழுந்து சென்ற மனைவியை பூரிப்பு டன் பார்த்தான் வெங்கடேசன்.



**-வி.கே.லக்ஷ்மிநாராயணன்**
ராமகிருஷ்ணா நகர்,
போரூர், சென்னை 600 116



# ஊர்மிளையின் ஊமைமனம்

இரண்டாம் பாகம் 7



**▪கே.பானுமதி நாச்சியார்**
சிவகிரி

## சித்திரக்கூட மலையின் அழகு

கங்கை ஆற்றைக் கடக்க நெடுநாவாய் ஏற்பாடு செய்தான் குகன். கங்கை ஆறு வெண்மை நிறத்தை உடையது.

கருமை நிறமுடைய யமுனை ஆற்றில் ராமனும் சீதையும் இலக்குவனனும் நீராட விரும்ப, ராமன் சீதையிடமும் லக்குவனனிடமும் கூறலானான்.

“சீதை! ஒரு பந்தயம் வைத்துக் கொள்ளலாம்! யமுனை ஆற்றங்கரையில் ஒரு இடத்தைச் சுட்டிக் காட்டி அங்குவரைச் சென்று திரும்பி வரவேண்டும். யார் முதலில் வருகிறார்களோ, அவர்களே வெற்றியாளர்! இதற்கு நீதிபதி லக்குவன் சரியா!” என்றான்.

இருவரும் சந்தோஷத்துடன் ஒப்புக்கொள்ள ராமனும் சீதையும் போட்டிக்குத் தயாரானார்கள்.

விரைவில் அந்த இடத்தைச் சென்றடைந்த ராமன், சீதை பின்னால் வருவதைக் கண்டு நின்றான். போட்டியில் பின்தங்கிய சீதையைக் கேலி செய்தான். திரும்பி வரும் ராமன், முங்கு நீச்சலில் வரவே அவன் தான் வெற்றி பெறுவான் என்று நினைத்துக் கொண்டிருந்தான் லக்குவன்.

ஆனால் ராமன் நின்று விட்டான். சீதை வெற்றியாளராகக் கரையைத் தொட்டாள்.

உடனே அங்கிருந்து லக்குவன் அகன்றான்.

நீராடிக் களைத்த இருவரும் யமுனை நதிக்கரையைக் கடப்பது குறித்து சிந்தித்த அளவில், இலக்குவன் தெப்பம் ஒன்றை அமைத்து இருவரையும் அக்கரையில் சேர்த்தான்.

“இலக்குவா! எங்குச் சென்றாய்? எவ்வாறு தெப்பமெல்லாம் அமைத்தாய்?” என்று வியப்புடன் ராமன் கேட்க, “ராமண்ணா! யமுனையைக் கடக்கும் வலிமையைக் காணத்தானே பந்தயமே வைத்தாய்! அன்னையாரின் களைப்பைப் புரிந்து கொண்டு நான் தெப்பம் அமைத்தேன்!” என்றான்.

தெப்பம் என்பது ஒரு மிதவை. சிறிய ஆற்றில் தெப்பத்தின் மேல் அமர்ந்து வேறு ஒருவர் நீந்தி கொண்டே வந்து அதனைத் தள்ளி தள்ளி முன்னேறிச் செல்ல உதவ வேண்டும். ராமனும் சீதையும் தெப்பத்தில் அமர இலக்குவன் நீந்திக் கொண்டு அத்தெப்பத்தை யமனைக் கரையைக் கடந்தான்; அவர்களை அக்கரையில் சேர்த்தான்.

அன்பரின் தொண்டினை நினைத்து ஊர்மிளாவுக்குப் பெருமையாக இருந்தது. சகோதர பாசத்தில் நான் இவரைப் போல் இல்லை!” என்று நினைத்துக் கொண்டாள். ராமண்ணா! மிகவும் கொடுத்து வைத்தவர் இப்பேற்பட்ட தம்பியரை உடையவராய் இருக்கிறார்!” என்றும் நினைத்தாள்.

கையால் தள்ளிய நீர் கீழ்க்கடலையும், தெப்பத்தால் விடுபட்ட நீர் மேற்கடலையும் அடைத்ததாம்.

வழியில் பாலைவனத்தைக் கடக்க, அதன் வெம்மையைத் தணிக்க ராமன் விசுவாமித்திரரிடம் கற்ற இரண்டு மந்திரங்களைச் சொல்ல, அதனால் வெம்மை குறைந்து, மயில் நடனமாட, வண்டுகள் இசை பாட வழி இனிதாயிற்று.

இதோ சித்திரக்கூட மலைகளைக் காண்கின்றனர் மூவரும். அதன் அழகில் மயங்கிய ராமன், சீதை இவர்களிடம் விடைபெற்று கொண்டு இலக்குவன் தனக்குச் சில பணிகள் இருப்பதாகச் சொன்னான். அவ் இடத்தை விட்டும் அகன்றான்.

இவர்கள் ஏற்கனவே வனத்திற்கு வந்திருக்கிறார்கள் என்பதை அறிந்த சீதா, சித்திரக்கூடமலை வளத்தைக் கூறுமாறு ராமனிடம் கேட்டாள்.


பிறைமதி மறைந்த கார்மேகத்தைத் தன் சூல்கொண்ட பிடி எனக் கருதி, தன் தும்பிக்கையை வான் நோக்கி நீட்டும் வளமை உடையது சித்திரக்கூட மலை என்றான் ராமன்.

ஊர்மிளையின் மனமும் அந்தச் சித்திரக்கூட மலைக்குச் சென்றது.

எத்தனை அழகு கொட்டி கிடைக்கிறது அங்கு தான். அவளும் ஒரு காட்சி காண்கிறாள். அங்கு ஒரு யானை படுத்திருக்கிறது. அதன் தோற்றமும் நீர் உண்ட சூல் காளமேகமும் யானையும் வேற்றுமை உணராதபடி ஒன்று போலவே இருக்கின்றனவே! )இங்கு கண்களும் பொய் சொல்கின்றதே! காட்சிப் பிழைகளாய்த் தோன்றுகின்றனவே!

யானைகளை விழுங்கும் மலைப்பாம்புகள் தோற்றம் கூட, ராமனுக்கு அயோத்தியில் மாடங்களில் கட்டப்பட்டிருக்கும் வெண் துணி கொடிகள் போல் இருந்தன என்கிறான்.

ஆஹா! ராமண்ணாவுக்கு இப்பொழுதாவது அயோத்தி என்ற சொல்லின் ஞாபகம் வந்ததே என்று நினைக்கிறாள் ஊர்மிளா. அங்கு ஒரு காட்சியைக் காண்கிறான் ராமன். அதனைச் சீதையையும் பார்க்கச் சொல்கிறான். ஊர்மிளையின் மனமும் அக்காட்சியைக் காண விழைகிறது. காதலில் உயிரினங்கள் அத்தனையும் உருகுமனம் கொண்டதாகத் தான் இருக்க வேண்டும். பிரபஞ்சத்தின் விருத்தி என்பது அன்பினால் ஊடல், கூடல் என்பதனை ஆறறிவு உயிர் என்று இல்லாமல் உயிர்கள் அனைத்திற்கும், படைக்கப்பட்ட அத்தனை உயிர்களிலும், காதல் உணர்வைப் புகுத்திய இயற்கையின் படைப்பில் இறையே மகிழ்வது வியப்பாக இருக்கிறது.



களிற்றானை ராமன் என்பதால் இங்கு யானைகள் அதிகமாக உருவகப்படுத்தப் படுகின்றன கம்பரால்.

ஆம்! பிறைமதி போன்ற தந்தத்தை உடைய ஒரு களிற்றானை முதிர்ந்த கர்ப்பத்தை உடைய தன் பிடிக்கு மனம் உருகுதற்குக் காரணமான அன்பினால், காதலால், தழைகளைக் கொண்டு, இனியகுரல் எழுப்பும் வண்டுகளை அகற்றி, மணம் வீசுகின்ற செந்தேனினைத் தனது கையில் இருந்து வாயில் பருகக் கொடுத்ததைக் காணாய்!” என்கிறான் ராமன்.

இன்னுமோர் காட்சியைக் காண்கிறாள் ஊர்மிளை. ஒரு முறை உடலால் பிரிந்த குறத்தியைக் கணவன்பால் தம் பாடலால் இணைத்து வைக்கிறதாம் கின்னர மிதுனங்கள்.

“ஈதென்ன புதுமை!” என்கிறாள் ஊர்மிளா. தான் காணாத உருவமாய் ஓர் உயிர்! ஆம்! மனித முகமும் குதிரை உடலும் புடைத்து, ஆணும் பெண்ணும் இணைந்தே இருப்பது கின்னரமிதுனம். இது கின்னரம் என்ற இசைக்கருவி கொண்டு பாடும் தன்மை உடையது. அங்குள்ள கொடிகளில் மூங்கில்கள் மோதுவதால் தம்மிடம் உள்ள தேனடை உடைந்து வழிந்த தேனானது நீண்ட கொடிகளை உடைய கவலைக்கிழங்கைத் தோண்டி எடுத்த பள்ளங்களை நிரப்பும் தன்மையைக் காணாய்!” என்கிறான்.

“இதோ! இங்கே பாரு! நீராடுகின்ற மிகுந்த அன்புடன் இன்பமாகத் தன்னுடன் நீராடிய ஆண் குரங்காகிய கடுவனை மந்தி அருவியின் நீரைக் கொண்டு வீச, அதுவோ அப்புறம் ஏறி ஒரு தொகுதி மேகத்தைப் பிடித்து நீர் சிந்த வைக்கும் கடுவனை காணாய்!” என்கிறான்.

கடுவன் என்பது ஆண்குரங்கு. மந்தி என்பது பெண்குரங்கு.

ஊர்மிளையின் கண் முன் இன்னனுமோர் காட்சி விரிகிறது.

“அகணம் என்றொரு மான் வகை. இசையை விரும்பி கேட்கும் இயல்பினது என்பதால் குடிமகளிர் பாடிய இன்னிசை கேட்டு இசை விரும்பும் அகண மா ஓடி வருவதைக் காணாய்!”

ஆனால் குறவர்கள் அதனை அருளாது, இறந்துவிடச் செய்து பிடிப்பது அவர்கள் இயல்பு என்று நினைக்கிறாள்.

அங்குள்ள பூச்சிகளைக் கூட ராமன் சீதையிடம் சொல்கிறான். “இந்திரகோபம் செம்முதாய் போன்ற செந்நிறத் தன்மையை இதழ்களில் பெற்றவளே!” என்று தான் ராமன் சீதையை விளிக்கிறான். இந்திரகோபம் என்பது ஒருவகை பூச்சியின் பெயர். செம்மை உடைய பூச்சியின் நிறத்தைப் பெண்களின் இதழுக்கு உவமையாகச் சொல்வர் சங்க காலப் புலவர்கள்.

சீதையின் கண்களைக் கூட “வடுவின் இவை எனப் பொலிந்த கண்மயிலே!” என்பார்.

மாவடுவை இரண்டாகப் பிளந்தால் எப்படி இருக்குமோ, அப்படியான வடுவின் வடிவாகக் கண் அமைந்து இருப்பதாகக் கூறுகிறார்.

இவ்வாறு ராமனும் சீதையும் இயற்கையின் எழிலுடன் கொஞ்சி விளையாட, இலக்குவனைத் தேடியது ஊர்மிளையின் மனம்.

“அவர் என்ன செய்கிறார்? எங்கு இருக்கிறார்? இவர்கள் தங்களையே மறந்து விளையாடிக் கொண்டிருக்க, இவர் மட்டும் அப்படி என்ன செய்து கொண்டிருக்கிறார்? அவர் நினைவுகள் கூட வராதது எப்படி இவர்களுக்கு?”

அவர்கள் நினைத்த மாத்திரத்தில் தெப்பம் செய்து ஆச்சரியப் படுத்தியவர், இப்பொழுது என்ன செய்கிறார்? அன்னையின் வரத்தால் காடு செல்லுதல் என்பது இவரின் விதியின் குற்றம் என்றாலும், அன்பரின் விதி ஏன் எதுவும் செய்யாமலே இப்படி ஆகியது? அன்னையரின் எதிர்பாராத சொற்களால், அதனிலும் கட்டளை வேறு, தொண்டன் போல் உதவி செய்! என்று அன்னையருக்காவது தெரியுமா இலக்குவனின் மனநிலை? இதனை எதையும் துன்பம் எனக் கொள்ளாது இன்புற்றுச் சுகமாய் வாழும் அவரது உள்ளம் தான் பெருமைக்குரியது. அவரே என் அன்பர் என்று கூறிக் கொள்வதில் எனக்கும் தான் எத்தனை பெருமை!. ஆனாலும் இப்போது அவர் எங்கே? என்று அவளின் மனத்தோடு கண்களும் துழாவின.

ஆனாலும் இரவு வரை இவர்கள் எழிலரசியின் அழகில் கட்டுப்பட்டும், இயற்கை வளத்தின் வனப்பிலும் தன்னை மறந்து அழைத்து வரும்போது உண்ண உணவு தயார் செய்து கொண்டு இருப்பாரோ? இல்லை உறைவிடம் ஏதாவது..?


“ என்ன! இவருக்குப் பர்ண சாலை அமைக்கும் விதம் கூடத் தெரிந்திருக்குமோ?” என்றெல்லாம் எண்ணியவள் தன்மனம் அன்பரைக் காணாது, சோர்ந்து, துவண்டு, மெதுவாக கண்கள் சுழல மஞ்சத்தில் விழுந்தாள்

“அதுதானே! அப்படி என்னதான் செய்து கொண்டிருக்கிறார் இலக்குவன்?”

நாளை அவன் செய்திருக்கும் தொண்டிற்கு ராமனே அவனை ஆரத் தழுவி எம் தந்தையே என்று சொல்லும் அளவுக்கு இலக்குவன் என்னதான் செய்தான். ராமனோடு சேர்ந்து நாமும் வாழ்த்துவோம்.

– தொடரும்

# “ஒரே நாளில் ஐந்து நிறங்களில் அருள்பாலிக்கும் அதிசய லிங்கம்! திருநல்லூர் பஞ்சவர்ணேஸ்வரரின் தெய்வீக இரகசியம்!



“நிறங்கள் ஓர் ஐந்து
உடையாய்! விண்ணோர்கள்
ஏத்த!”
என்று மாணிக்கவாசகர்
சிவபுராணத்தில் ஈசனைப்
புகழ்ந்து பாடிய அந்த
வரிகள்,
உண்மையான தரிசனமாகக்
காணப்படும் ஒரே தலம்
திருநல்லூர்!

தமிழ்நாட்டின் நெஞ்சில்
தவழும்
பெருமையும் அதிசயமும்
கூடிக் கலந்த
திருநல்லூர்
பஞ்சவர்ணேஸ்வரர்
திருக்கோயில்,
இன்றும் பக்தர்களை
பரவசத்தில் ஆழ்த்திக்
கொண்டே இருக்கிறது.
ஒரே நாளில் ஐந்து முறை
நிறம் மாறும் சுயம்பு
லிங்கம்!
இத்தலத்தில்
எழுந்தருளியுள்ள
பஞ்சவர்ணேஸ்வரர் சுயம்பு
மூர்த்தி!

ஒரே நாளில்
ஆறு நாழிகைக்கு ஒருமுறை
அவர் லிங்கத் திருமேனி
ஐந்து வித நிறங்களில்
மாறி மாறி
அருள்காட்சியளிக்கிறது!

காலை 8 மணி வரை
தாமிர நிறம்
அதன் பிறகு இளஞ்சிவப்பு
நிறம்
மதியம் 2.30 மணி வரை
பொன் நிறம்
அதன் பின்னர் உருகிய
தங்க நிறம்
மாலை நேரம் நவரத்தின
பச்சை நிறம்
ஒரே லிங்கம்... ஐந்து
நிறங்கள்...
ஒரே இறைவன்... ஐந்து
வேத சக்திகள்!

இதனால்தான் இவருக்கு
“பஞ்சவர்ணேஸ்வரர்” என்ற
திருநாமம்!
சடாரி வைக்கப்படும் ஒரே
சிவாலயம் காரணம்
என்ன?
வைணவத் தலங்களில்
போல
இந்த சிவாலயத்திலும்
பக்தர்கள் தலைமேல் சடாரி
வைக்கப்படுகிறது!
இதற்குப் பின்னால்
மறைந்திருக்கும்
அப்பர் நாயனாரின் உன்னத
பக்தி வரலாறு இதோ...
நாவுக்கரசருக்கு சிவன்
திருவடி சூட்டிய தலம்!

அப்பர் பெருமான்,
“மரணம் என்னை
அணுகுவதற்கு முன்
உன் திருவடியை என்
தலைமேல் வைத்து அருள
வேண்டும்!”
என்று இறைவனை உருகி
வேண்டினார்.
அப்பொழுது ஈசன்,
“திருநல்லூருக்கு வா...
உன் வேண்டுதல் அங்கே
நிறைவேறும்!”
என்று அருளினார்.
அப்பரும் திருநல்லூருக்கு
வந்து,
பஞ்சவர்ணேஸ்வரரை
வழிபட்டார்!
அப்போது—
ஈசன் தன் திருவடியை
அப்பரின் சிரசில் வைத்து
ஆசீர்வதித்தார்!
இதன் நினைவாகத்தான்
இன்றும் பக்தர்களுக்கு
சடாரி சாற்றும் வழக்கம்
தொடர்கிறது!
அகத்தியருக்கு கல்யாண
கோலம் காட்டிய தலம்

அகத்திய முனிவருக்கு
சிவன் பார்வதி திருமணக்
கோலத்தில்
அருள்புரிந்த புனிதத்
திருத்தலம் இதுவே!

அந்த திருமணக்
கோலத்தை
இன்றும் கருவறையின்
பின்புறம்
மூல லிங்கத்தின்
பின்திசையில்
தரிசிக்கலாம்!

அகத்தியர் பூஜித்த
இரண்டாவது சிறிய
லிங்கமும்
இங்கே இன்றும் உள்ளது!
பிருங்கி முனிவர் வண்டு
வடிவில் ஆராதித்த இடம்

பிருங்கி முனிவர்
வண்டு வடிவில் பறந்து
வந்து இறைவனை
பூஜித்ததால்,
இன்றும் லிங்கத்
திருமேனியில்
சிறு சிறு துளைகள்
காணப்படுகின்றன!

அமர்நீதி நாயனார் தராசில்
குடும்பத்தையே தந்த
தியாகம்
பழையாறையில் வாழ்ந்த
அமர்நீதி நாயனார்
அன்னதானப் பெருந்தகை!
திருநல்லூரில் அவர் கட்டிய
அன்னதான மடம் இன்றும்
உள்ளது!
ஒருநாள்,
வேதியர் ரூபத்தில் வந்த
ஈசன்,
ஒரு கோவணத்தை
ஒப்படைத்து
“இதனை பத்திரமாக
வைத்திரு!”
என்று கூறிச் சென்றார்.

மழையில் நனைந்து திரும்பி
வந்து
அந்த கோவணத்தை
கேட்டபோது—
அது மாயமாக
மறைந்திருந்தது!

தராசு கொண்டு வந்து
இழந்த கோவணத்திற்கு
ஈடாக
ஒவ்வொன்றாக
துணிகள்... ஆபரணங்கள்...
சொத்துகள்...
வைக்கப்பட்டன...
எதுவும் சமமானதே
இல்லை!

இறுதியில்—
அமர்நீதி நாயனரும்,
அவரின் மனைவியும்,
மகனும்
தங்களையே தராசில்
ஏற்றினர்!

அந்த நொடியில்—
ஈசன்
பஞ்சவர்ணேஸ்வரராக,
கல்யாணசுந்தரராக,
வானில் காட்சி தந்து
மூவரையும் கைலாயம்
அழைத்துச் சென்றார்!
இத்தகைய தியாகம்
நிகழ்ந்த புனிதத் தலம்
திருநல்லூர்!

முடிவுச் செய்தி:
ஒரே நாளில்
ஐந்து நிறங்களில் அருள்
புரியும்
பஞ்சவர்ணேஸ்வரர்,
பக்தியைப் பரிசாகவும்,
தியாகத்தை வாழ்வாக்கவும்
கற்றுத் தரும்
ஒரு அற்புத தெய்வீக தலம்!

-எம்.அசோக்ராஜா
அரவக்குறிச்சிப்பட்டி
திருச்சி _620015

**தினம் ஒரு தலைவர்கள்**

# கோபிநாத் பர்தலை வரலாறு

கோபிநாத் பர்தலை,
6 சூன் 18905 ஆகத்து
1950) இந்திய மாநிலமான
அசாமின் முதலாவது
முதலமைச்சராகப்
பணியாற்றியவரும், இந்திய
விடுதலை இயக்கத்தில்
பெரும் பங்காற்றியவரும்
ஆவார். அரசியல்
கோட்பாடாக காந்தியின்
வன்முறை தவிர்த்த
வழியை ஏற்றுக்கொண்டவர்.
அசாம் மாநிலத்திற்கும்
மக்களுக்கும் இவராற்றியப்
பணியைப் பாராட்டி
இவர் முதலமைச்சராக
இருந்தபோது அசாமின்
ஆளுநராக இருந்த ஜயராம்
தாஸ் தௌலத்ராம்
இவருக்கு "லோகபிரியா"
என்ற பட்டத்தை
வழங்கினார். 1999 ஆம்
ஆண்டு இந்தியாவின்
உயரிய குடிமை விருதான
பாரத ரத்னா இவருக்கு
மரணத்திற்குப் பின்பு
வழங்கப்பட்டது.

இளமையும் கல்வியும்
கோபிநாத் ராகாவில்
1890ஆம் ஆண்டின் சூன்
6 அன்று புத்தேசுவர்
பர்தலைக்கும்
பிராணேசுவரி பர்தலைக்கும்
மகனாகப் பிறந்தார்.
பன்னிரெண்டாவது
அகவையிலேயே தனது
தாயை இழந்தார். 1907ஆம்
ஆண்டில் மெட்றிக்கில்
தேர்வானபிறகு காட்டன்
கல்லூரியில் சேர்ந்தார்.
தனது இடைநிலை
பட்டப்படிப்பை 1909ஆம்
ஆண்டு முடித்து
கொல்கத்தாவிலுள்ள
இசுகாட்டிஷ் சர்ச்
கல்லூரியில்
பட்டப்படிப்பை 1911இல்
முடித்தார். கொல்கத்தா
பல்கலைக்கழகத்திலிருந்து
1914ஆம் ஆண்டு
முதுகலைப் பட்டம்
பெற்று சட்டம் படிக்கத்
தொடங்கினார். ஆனால்
மூன்றாண்டுகளிலேயே
இறுதித் தேர்வு
எழுதாது குவஹாத்தி
திரும்பினார். சோனாராம்
உயர்நிலைப்பள்ளியில்
தற்காலிக
தலைமையாசிரியராகப்
பணியாற்றியபடியே தமது
சட்ட படிப்பை 1917ஆம்
ஆண்டு முடித்தார்;
குவஹாத்தியில்
வழக்கறிஞராகப்
பணி புரியத்
தொடங்கினார்.

அரசியல் வாழ்வு
1922 ஆம்
ஆண்டு
இந்திய தேசிய
காங்கிரசின்
அங்கமாக
அசாம் காங்கிரசு
உருவானபோது
இவரது
அரசியல் வாழ்வு
துவங்கியது.
அந்த ஆண்டு
நடைபெற்ற
ஒத்துழையாமை
இயக்கத்தில்
பங்கேற்று ஓராண்டு
சிறை சென்றார்.
வெளிவந்தபிறகு
தமது
வழக்கறிஞர் தொழிலுக்குத்
திரும்பினார்.



1936 ஆம் ஆண்டு
பிராந்திய சட்டப்பேரவை
தேர்தல்களில் காங்கிரசு
பெரும்பான்மை
இடங்களைப்
பெற்றிருந்தபோதும்
அமைச்சர்களுக்கு
அதிகாரம் வழங்கப்படாத
நிலையில் எதிர்கட்சியாகவே
செயலாற்ற முடிவு
எடுத்தது. போர்டோலாய்
எதிர்கட்சித் தலைவராக
தேர்ந்தெடுக்கப்பட்டார்.
சிறுபான்மை கட்சிகள்
அமைத்த அரசு
கவிழ்ந்தநிலையில் இவர்
செப்டம்பர் 21, 1938ஆம்
ஆண்டில் முதல்வராக
பொறுப்பேற்றார்.
மகாத்மா காந்தியின்
ஆணைப்படி 1940ஆம்
ஆண்டில் தமது பதவியை
துறந்தார். 1946ஆம்
ஆண்டு நடைபெற்ற
தேர்தல்களில்
மீண்டும்
வெற்றி பெற்று
முதலமைச்சராக
பொறுப்பேற்றார்.

இந்தியப்
பிரிவினைக்கு
முன்பாக நடந்த
உரையாடல்களில்
அசாமை
வங்காளத்துடன்
இணைத்து
கருதப்படுவதை
காங்கிரசுக்கு
உள்ளேயும்
பிரித்தானிய
அரசினரிடத்தும் இவர்
எதிர்த்தமையாலேயே
பின்னாளில்
அசாம் கிழக்கு
வங்காளத்துடன்
பாக்கித்தானின்
பகுதியாக
இணைக்கப்படாமல்
இருந்தது எனச் சில
அரசியலாளர்கள்
கருதுகின்றனர்.

1999ஆம் ஆண்டு
இவருக்கு
மரணத்துக்குப்
பிறகான பாரத ரத்னா
வழங்கப்பட்டது.

குவஹாத்தியில் உள்ள
விமான நிலையத்துக்கு
இவர் நினைவாக
லோக்பிரியா
கோபிநாத் பர்தலை
சர்வதேச விமான
நிலையம் என்று பெயர்
சூட்டப்பட்டுள்ளது.








# "காந்தா" ஓடிடி ரிலீஸ் எதில் பார்க்கலாம்?



துல்கர் சல்மான் நடிப்பில் டந்த 14-ந் தேதி வெளியான படம் 'காந்தா'

இப்படத்தை செல்வமணி செல்வராஜ் இயக்கி உள்ளார். இப்படம் தமிழ் சினிமாவின் முதல் சூப்பர் ஸ்டாரான எம்.கே. தியாகராஜா பாகவதரின் வாழ்க்கை வரலாற்று திரைப்படமாகும்.

இப்படத்தில் மிஸ்டர் பச்சன் திரைப்பட புகழ் பாக்யஸ்ரீ, துல்கர் சல்மானுக்கு ஜோடியாக நடித்துள்ளார். சமுத்திரக்கனி, ராணா டகுபதி முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

இப்படத்தை வேஃபாரர் பிலிம்ஸ் மற்றும் ராணா ஸ்பிரிட் மீடியா நிறுவனங்கள் இணைந்து தயாரித்துள்ளன.

இப்படம் தமிழ், தெலுங்கு, மலையாளம் மற்றும் கன்னடம் மொழிகளில் வெளியானது. படம் கலவையான விமர்சனங்களை பெற்றது.

இந்நிலையில் காந்தா திரைப்படம் வருகிற 12 ஆம்தேதி நெட்பிளிக்ஸ் ஓடிடி தளத்தில் வெளியாக உள்ளது.



நடிகை திவ்யபாரதி தமிழ் சினிமாவில் வேகமாக வளர்ந்து வரும் நடிகையாக இருந்து வருகிறார். 33 வயதாகும் அவருக்கு இன்ஸ்டாவில் 37 லட்சம் ரசிகர்கள் இருக்கின்றனர்.

அவர்களுக்காக தொடர்ந்து படுகிளாமர் ஆகவும் புகைப்படங்கள் வெளியிட்டு வருகிறார் திவ்யபாரதி. அவர் தற்போது கிளாமர் உடையில் போஸ் கொடுத்து இருக்கும் புகைப்படங்களை வெளியிட்டு இருக்கிறார்.

# 'படையப்பா- 2'.. அப்டேட் கொடுத்த ரஜினி!



ரஜினியின் 50வது வருடத்தை கொண்டாடும் விதமாக அவரது பிறந்தநாள் அன்று ரீரிலீஸ் செய்யப்பட இருக்கிறது.

முதல் பாகத்திலேயே நீலாம்பரி கதாபாத்திரத்துக்கு அதிக வரவேற்பு கிடைத்தது.

கடந்த 1999-ம் ஆண்டு கே.எஸ்.ரவிக்குமார் இயக்கத்தில் வெளியான படம் தான் படையப்பா. சிவாஜி கணேசன் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்த இந்த படத்தில், ரஜினிகாந்த், மறைந்த நடிகை சௌந்தர்யா, வில்லியாக ரம்யா கிருஷ்ணன், நாசர், செந்தில், ரமேஷ் கண்ணா, லட்சுமி, ராதாரவி, உள்ளிட்ட பலர் நடித்திருந்தனர்.


இந்த படத்திற்கு, ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைத்திருந்தார். படத்தில் அனைத்து பாடல்களும் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றிருந்தது.

இந்நிலையில் இப்படம் திரைத்துரையில் ரஜினியின் 50வது வருடத்தை கொண்டாடும் விதமாக அவரது பிறந்தநாள் அன்று ரீரிலீஸ் செய்யப்பட இருக்கிறது.

இதனை முன்னிட்டு படையப்பா படம் தொடர்பான தனது அனுபவங்களை ரஜினிகாந்த் பகிர்ந்துகொள்ளும் வீடியோவை சௌந்தர்யா ரஜிகாநாத் பகிர்ந்துள்ளார்.

அதில் பேசிய ரஜினி, "முதல் பாகத்திலேயே நீலாம்பரி கதாபாத்திரத்துக்கு அதிக வரவேற்பு கிடைத்தது. தற்போது எல்லாமே 2.0 என எடுக்கிறார்கள். அதேபோல் ஏன் படையப்பா 2 எடுக்கக் கூடாது எனத் தோன்றியது. நீலாம்பரி என்ற தலைப்பில் படையப்பா 2 படத்தை எடுக்க கதையை திட்டமிட்டு வருகிறோம். எல்லாம் சரியாக அமைந்தால், படம் நிச்சயமாக வரும். ரசிகர்களுக்கு விருந்தாக அமையும்" என்றார்.

# 10 நாளில் இத்தனை கோடியா?



பாலிவுட்டில் 'ராஞ்சனா' மற்றும் 'அட்ராங்கி ரே' போன்ற படங்களை இயக்கிய பிரபல பாலிவுட் இயக்குனர் ஆனந்த் எல் ராய்யின் படத்தில் தனுஷ் நடித்துள்ளார்.

பாலிவுட்டில் இயக்குனர் ஆனந்த் எல் ராய் இயக்கத்தில் தனுஷ், சோனம் கபூர் நடிப்பில் கடந்த 2013 இல் வெளியாகி வரவேற்பை பெற்ற படம் 'ராஞ்சனா'. தமிழில் அம்பிகாபதி என்ற பெயரில் வெளியானது. படத்தில் ஏஆர் ரகுமான் இசையில் இடம்பெற்ற ஒவ்வொரு பாடலும் ஒரு கிளாசிக்.

இந்நிலையில் தனுஷ் - ஆனந்த் எல் ராய் - ஏஆர் ரகுமான் கூட்டணியில் புதிதாக உருவாகி உள்ள படம் "தேரே இஸ்க் மேன்" (Tere Ishk Mein).

இதுவும் ராஞ்சனா போலவே காதல் படமாக அமைந்துள்ளது. இந்த படத்தில் தனுஷுக்கு ஜோடியாக பிரபல பாலிவுட் நடிகை கிரித்தி சனோன் நடித்துள்ளார். கடந்த வாரம் வெளியான இப்படம் பாலிவுட்டில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. தனுஷின் நடிப்பிற்கு ரசிகர்களிடம் பாராட்டுக்கள் கிடைத்து வருகிறது.

படம் 7 நாட்களில் உலகளவில் ரூ.118.76 கோடி வசூல் செய்திருந்தது. இந்நிலையில், 'தேரே இஷக் மெய்ன்' படம் 10 நாட்களில் ரூ.141.86 கோடிக்கும் அதிகமாக வசூல் செய்துள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது.



ரசிகர்களின் மனம் கவர்ந்த முன்னணி நடிகைகளில் ஒருவர் ருக்மிணி வசந்த். இவர் நடிப்பில் இந்த ஆண்டு வெளிவந்த மதராஸி மற்றும் காந்தாரா சாப்டர் 1 மாபெரும் வெற்றிபெற்றது. இதில் காந்தாரா ரூ. 855+ கோடி வசூல் செய்து சாதனை படைத்தது.

நடிகை ருக்மிணி வசந்த் இன்ஸ்டாகிராமில் அவ்வப்போது தனது லேட்டஸ்ட் புகைப்படங்களை பதிவு செய்வார். அந்த வகையில், ருக்மிணி வெளியிட்டுள்ள அசத்தலான லேட்டஸ்ட் போட்டோஷூட் இணையத்தில் வைரலாகி வருகிறது.




சுனாமியல் குடும்பத்தை இழந்த நாயகன் கௌதம் கண்ணகி நகரில் வசித்து வருகிறார். அதே பகுதியை சேர்ந்த தீபா உமாபதியை ஐந்து பேர் சேர்ந்து கடத்தி கற்பழித்து கொன்றதாக கௌதமுக்கு தகவல் கிடைக்கிறது. இதை அறிந்த கௌதம் அவர்களை பழிவாங்க திட்டம் போடுகிறார்.

இறுதியில் தீபாவிற்கு என்ன ஆனது? அந்த ஐந்து பேர் யார்? கௌதம் அவர்களை பழிவாங்கினாரா? என்பதே படத்தின் மீதிக்கதை.

நடிகர்கள்

படத்தில் கதையின் நாயகனாக நடித்து இருக்கும் கௌதம், கண்ணகி நகர் மொழியை உள்வாங்கி, முக பாவனைகளில் வெளிப்படுத்துகிறார். நாயகியான தீபா உமாபதி எதார்த்தமான நடிப்பை வெளிப்படுத்தி இருக்கிறார். படத்தில் நடித்த மற்ற கதாபாத்திரங்கள் கொடுத்த வேலையை சிறப்பாக செய்து இருக்கிறார்கள்.

இயக்கம்

எல்லா உறவுகளையும் இழந்த பின்பு ஒரு மனிதனின் கடைசி முடிவு என்ன என்பதை மக்களுக்கு காட்டியிருகிறார் இயக்குனர் குணா. சென்னை தமிழ், கண்ணகி நகர், காட்சிப்படுத்திய விதம் அருமை. வலுவான காட்சிகள் இல்லாதது படத்திற்கு பலவீனம்.

இசை

தேவாவின் இசையில் பாடல்கள் படத்தின் முதுகெலும்பாக அமைந்திருக்கிறது. பின்னணி இசையை தேவையான அளவிற்கு கொடுத்து இருக்கிறார்.

ஒளிப்பதிவு

பா.மு.முஹம்மது ஃபர்ஹான் ஒளிப்பதிவு கதைக்கு ஏற்ப பயணித்திருக்கிறது.

ruby
Building Future

தேவை

செக்யூரிட்டி கார்ட்

தொடர்புக்கு:
7299019079
9884194154



Launch Your Own Secure Crypto MLM Software Today!
@4999/- onwards
CALL: 98537 19337, 74369 14247
www.mlmperfect.com

திருவள்ளூர் மாவட்டம் தொழுவூரில் அமைந்துள்ள ஸ்ட்சுரல் ஸ்டீல் நிறுவனத்தில் பணிபுரிய நன்கு அனுபவமுள்ள கீழ்கண்ட ஆட்கள் தேவை.

- SAFETY OFFICER
- ARC / CO2 வெல்டர்
- கேஸ் கட்டர்
- கனரக வாகன டிரைவர் (Heavy License)
- ஸ்ப்ரே பெயிண்டர்
- Industrial எலக்ட்ரிசியன் (B-License)

தகுதியுடையோர்க்கு நல்ல சம்பளம் வழங்கப்படும். ESI, EPF மற்றும் தங்கும் வசதி உண்டு.

Ct: 98416 46097

இடம் விற்பனைக்கு

இராமன்புதூர் மீன் சந்தை அருகே 6 சென்ட் இடம் விற்பனைக்கு உள்ளது.

தொடர்புக்கு:
8300134494

Make Money Without Investment Through Mobile



Just 20 min/per day
Any Time
Earn upto Rs. 1000/per mobile

Call : 9337501889

Darling
MASALA
SPICES & FOODS
A Mega Food Processing Company

AREA SALES MANAGER
HORECA SALES MANAGER
MARKETING HEAD
SALES OFFICER

To Promote Pickles / Masala / Appalam / Asofedita
admin@darlingmasala.com
+91 98410 08875

இடம் விற்பனைக்கு

காரவிளை முதல் ராஜாக்கமங்கலம் மெயின் ரோட்டில் 57 சென்ட் இடம் விற்பனைக்கு உள்ளது.

Contact: 08220426606

WANTED
OFFICE EXECUTIVE (MALE)
for Catering Office at Kanchipuram.
Proficient in MS Office, maintain office supplies & equipments.
mail resume:
subhamganesan24@gmail.com

ADVERTISE WITH US



CONTACT US
9438610756

அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்

வழங்கும்
2026 மாத காலண்டர்
தெய்வீகப் படங்களுடன்



3 காலண்டர்
100 ரூபாய்

அனைத்து இல்லங்களிலும் இருக்கவேண்டிய அற்புத காலண்டர்
இது காலண்டர் அல்ல
மினி பஞ்சாங்கம்

Admin office
Padma Media House
116, EH Road, Gandhi Nagar Chennai 600081

தொடர்பு கொள்ளவும்
9337501889



# புதுக் கவிதை பகுதிகள்



### அவள்

பூங்காவைப்
பலமுறை சுற்றி வந்தும்
உன்னை எழுத ஓர் கவிதை
பிறக்கவில்லை.
உன்னைச் சுற்றி வர
நினைக்கிறேன்,
பூங்காவைப்
பற்றி
ஒரு கவிதை
எழுத!



கே. பி. ஜனார்த்தனன்



### மழைத்துளியின் பயணம்

வான் மழைக்குள்–
நனைந்த என் இதழை,
பிழையென நினைத்து
தேன் மழையாய்
முத்தமிட்டு திருத்தம்
செய்தவனே... உனது
முத்த தீண்டுதலில்
மோட்சம் அடைகிறேன்!
மீண்டும் மீண்டும் வந்து–
உன் மோகத்தால்
என் காமத்தை தூண்டாதே...
அப்படி– முத்த தேசத்தில்
செத்துப் பிழைப்பது தான்
உனக்கு சுகம் என்றால்
தற்காலிக மரணத்தில்
இறந்தே கிடக்கிறேன்
உன் இதழில் என் இதழை
பதித்து ! சத்தமிட்டு வரும்–
மழைத்துளிகளோ
சற்று நின்று உற்றுப்
பார்க்கிறதடா...
சத்தமில்லாமல்–
நீ கொடுக்கும் முத்தத்தை!
மண் மீது கொண்ட
காதலால்– மழையின் தாகம்
தீர்வதைப் போல,
நீ என் மீது விழுந்து
என் தேகத்தை
கொ(ல்)ள்ளடா...
என் தாகம்–
தீரும் வரை
இல்லை
என் ஆயுள்
நீளும் வரை!



பாரதி முத்து

### ஏக்கம் !

பூமி குளிர்ந்தது... தன் மீது
உன் பாதம் படிந்து நடந்து
வருவதை நினைத்து !

வானம் மகிழ்ந்திற்று...
உன் மீது தவழும்
மழைத்துளிகளை
நினைத்து...

அனல் காற்று கூட குளிர்
காற்றாய் வீசியது உன் மீது
தவழும் ஆவலில்....

நானும் ஆவலோடு அருகில்
வருகிறேன்
உன் நிழலோடாவது
சேர்ந்து
நடக்கும்
ஏக்கத்தை
தீர்க்க !



எம். பி.தினேஷ்.
கோவை

மறுதலிப்பவர்களை
நோக்கியே நகர்கிறது மனசு.
பதில் தராதவர்களை
நோக்கியே கேள்விகள்
செல்கிறது அவமானமும்
அலட்சியமும் உறங்கச்
செய்வதில்லை பாதையின்
மருங்கில் கல் வீசுபவர்களை
குறித்துக்
கவலை
படுகிறது
மனசு
சற்றே
திரும்பி பார்
அன்பை
அகல
கைவிரித்து அளிக்கக்
காத்திருப்பவர்களை



ஜி ஏ பிரபா
கோவை



நிலவு உறங்கும் நேரத்தில்...
வந்து விடுகிறாய்....
நினைவாய்....

பகலிலும் தான் தொட
முடியாத தூரமாய்...நீ...
உன்னைச் சுற்றி சுழல்கிறது...
என் பூமி...

புன்னகை புரிகையில்
பகலாகவும்
புறக்கணிக்கையில்
இரவாகவும்....

--------------------

எப்போதோ பெய்த
மழையினை... மண்
சேகரித்து
வைக்கிறது...
ஈரப்பதமாய்...

நானும்
அன்றைய
உன்
பேரன்பை....



தே.சௌந்தரராஜன்
கல்யாணம் பூண்டி



### ஐயம்

என் எண்ணத்திரையில்
எப்பொழுதும் தோன்றும்
வண்ணத்தாரகை நீயே
அன்பே!
உன்னைத்தவிர வேறொரு
தேவதை என் உள்ளத்தில்
அமர்ந்து விட
இயலுமா என்ன?!

### ஏன்?!

நான் உன் அழகையும்
நீ என் அன்பையும்
திருட முயல்கையில் தான்
தெ(ப)ரிகிறது களவும் கற்று
மற என்று ஏன்
சொன்னார்கள் என்று!

### அகராதி

உன் ஒரு புன்னகையில்
நான் காண்கிறேன் கா த ல்
அகராதிப் புத்தகத்தையே!

### கேள்வி

நாம் சந்திக்கும் போதெல்லாம்
பால் குடிக்கிறாயா?
பழம் சாப்பிடுகிறாயா?
என்றெல்லாம் நீ கேட்கிறாய்!
அப்படியானால் நாமும்
நம் திருமணத்திற்குப் பின்
முதலிரவில்
என்னதான் சாப்பிடுவது?
எதைத்தான் குடிப்பது?

### தேவதையாட்டம்

எத்தனையோ
விளையாட்டுகளில்
நான் பல பரிசுகள்
வாங்கியிருப்பினும்
எனக்கு எப்பொழுதும்
மிகவும் பிடித்தது
எனக்குப் பிரியமான
நீ ஆடும்
தேவதையாட்டம் தான்!

### தெரியும்!

உனக்கு முத்தமிழும்
தெரியுமா? என்று கேட்கிறாய்!
உனக்குத் தான் எவ்வளவு
நையாண்டி!? உன்னை
மு த் த மி டு வ தை த்
தவி ர எனக்கு வேறொன்றும்
தெரியாதென்று
உனக்கும் கூடத்
தெரியும் தானே!

### புரிதல்

நீ சரியில்லையென்று
சொல்லி அடிக்கடி
முறைக்கிறாய்!
நான் ருசிப்பதையெல்லாம்
நீயும் நம் கா த லு ம்
மிகச் சரியாகத் தான் புரிந்து
கொண்டிருக்கிறீர்கள்!

### எப்பொழுது?!

நீ என்னிடம் வந்து
அவன் காதலிக்கிறான்
இவள் விரும்புகிறாள்
என்றெல்லாம் யார் யாரைப்
பற்றியோ சொல்கிறாய்!
நான் உன்னை நேசிப்பதை
நீ எப்பொழுது தான் புரிந்து
கொள்ளப் போகிறாய்?!

### கலை


உனக்கு எல்லாமே
கை வந்த கலை
என்று சொல்லி
என்னைப்புகழ்கிறாய்!
கொஞ்சம் மாற்றிக்
காதல் வந்த கலை
என்று சொல்லேன் அன்பே!

### உண்மை

யார் யாரெல்லாம்
யாரைக்
காதலிக்கிறார்கள்
என்று மிகத்
துல்லியமாகத்
தெரிந்து
வைத்திருக்கும்
நீ நான்
உன்னைக்
காதலிப்பதை
எப்பொழுது தான் தெரிந்து
கொள்ளப் போகிறாய்?!



முத்து ஆனந்த் வேலூர்



### துறவி

உறவைத் துறந்து
ஊர்சுற்றும் துறவி....
துறவே பெரிதாகும்
ஆயினும் மனிதத்தை
துறக்க முடியுமா?
அக்கம் பக்கம்
உறவுகள் அத்தனையும்
வெறுத்து நின்றாலும்
மறுபடி முகிழ்த்தன....
உயிரினம் அன்புகாட்ட
ஒருவருக்கு ஒருவர்
காட்டும்
அன்பே
மறுபடி
உயிர்க்கக்
காரணமாமே!!!



வைரமணி
சென்னை


### தீப்பொறி!

ஆற்றல் கொண்டதும் தீயே
அழிவைக் கொண்டதும் தீயே
போற்றத் தக்கதும் தீயே
பொலிவைக் கொண்டதும்
தீயே!

சக்தி கொண்டதும் தீயே
சாற்றத் தக்கதும் தீயே
பக்திக் குரியதும் தீயே
படிமம் கொண்டதும் தீயே!

கற்கள் காதலே தீயே
கற்கள் உரசினால் தீயே
பொற்பாய் அமைவதும் தீயே
புகழின் விளிம்புமே தீயே!

பெண்ணை நெருங்கினால்
தீயே பீடு
நிறைந்ததும்
தீயே
மமண்ணை
ஆள்வதும் தீயே
மாண்பு
மிக்கதும் தீயே!



முனைவர்
இராம.வேதநாயகம்
திருவண்ணாமலை.



### அசைந்துவரும் தீபம்

விழிகளில் தெறிக்கும்
ஒளிச் சுடர், கரங்களில்
எதிரொலிக்கும் அகல்
விளக்கில்!

அலையில்லா சின்ன ஆற்று
நீரில், நிலவொளி நீந்தும்
சிறு குளிரில்,

பருவங்கள் தாலாட்டும்
பதின்ம வயது,
பார்க்கிறதெல்லாம்

பரவசக்கோலம், நீரில்
அசைந்து வரும்
கார்த்திகை தீபம்,

நெஞ்சில் இனம்
தெரியாதோர் தாபம்,.....
தன்னிழலில்

பெண் மனம்
கண்டதென்ன?, அழகன்
முருகனின் ஆனந்த
ரூபமோ,!

இல்லை,குழலூதும்
கண்ணனின் குறும்பு
வண்ணமோ! அவள்

இதழ் ஓரம் நெளிகின்ற
சிறு
நகையில்,
தெரிகின்ற
வெளிச்சமும்
ஓர் அழகு
தீபமே!



மீனா சேகர்



### ஓசை

தாயின் இதயத் துடிப்பு
கருவறை தந்த காதுக்கு
இனிய முதல் ஓசை

ஈரைந்து மாதம் கருவில்
உயிர் தாங்கி உடல் வளர்த்து
உலகம் பார்க்க
தாயின் வலி தரணி காட்டிய
இனிய ஓசை

அகன்று பரந்த ஆகாயம்
ஆழப் புதைந்த பூமி
அண்டம் நிறைப்பருப்பொருள்
யாவும் ஓசையில் நிறைந்து
உயிர்ப்பின் ஓசையாய்
நிறைவாகும்


மேவும் கடலலை ஓசை
மேனி தழுவும் காற்றின் ஓசை
கீதம் இசைக்கும்
குயிலின் ஓசை பாதம்
தாங்கும் சலங்கையின் ஓசை
செவியை நிறைக்கும்
இனிய ஓசை

வருத்தம் தரும்
வலியின் ஓசை
ஏழ்மை காட்டும்
பசியின் ஓசை
கருணை மறக்கும்
கரன்சியின் ஓசை
வாழ்வை வெறுக்கும்
துயர ஓசை

அன்பின் ஓசையை
இசையாக்கி சினத்தின்
ஓசையை இரைச்சலாக்கி
இயற்கை செய்யும்
மாயவித்தை

கருவறை ஓசை
கேட்டுப் பிறந்து
கல்லறை ஓசை
கேட்க மறந்து காலம் முழுதும்
கேட்கும் ஓசை

இன்பம் நிறைக்கும்
அன்பு ஓசை
இதயத்தில்
தங்கி
இன்பமே
நாளும்
நல்லட்டும்.



தமிழ்நிலா

# நூல் விமர்சனம்




நெஞ்சுக்குள் நெருப்பு !
நூல் ஆசிரியர் :
கவிஞர் க. தங்கராஜு
பேச : 99447 72096
நூல் விமர்சனம் :
கவிஞர் இரா. இரவி
வாசகன் பதிப்பகம், 11/96,
சங்கிலி ஆசாரி நகர்,
சன்னியாசிகுண்டு, சேலம்–636 015. விலை : ரூ. 60 செல் : 98429 74697

அட்டைப்பட வடிவமைப்பு மிக நன்று. புவி வெப்பமயமாகி வர, அவ்வெப்பம் தணிக்க புறா விதை எச்சமிட்டு மரம் வளர்வதை உணர்த்தும் விதமாக நன்றாக உள்ளது. உள்அச்சு வடிவமைப்பு யாவும் நேர்த்தியாக பதிப்பித்த இனிய நண்பர் கவிஞர் ஏகலைவனின் வாசகன் பதிப்பகத்திற்கு பாராட்டுகள்.

நூலாசிரியர் கவிஞர் க. தங்கராஜு அவர்கள் கட்டிடக் கலைஞர். சொற்களை வைத்து புதுக்கவிதை கட்டிடமும் திறம்பட கட்டி உள்ளார். நூலின் வளத்திற்கு உரம் சேர்ப்பதாக உள்ளது. முகநூலில், இணையத்தில் வலம் வரும் இனிய நண்பர் கவிஞர் ச. கோபிநாத், திரு. சி. மெய்யழகன் ஆகியோர் மிக நன்று. பதிப்புரையும் முத்திரை பதிக்கும் விதமாக உள்ளது.

நூலாசிரியர் கவிஞர் க. தங்கராஜு அவர்களுக்கு இது இரண்டாவது நூல். கவிதைகள் முதல் தரமாக உள்ளன. பாராட்டுக்கள். நாட்டு நடப்பை எடுத்து இயம்பி எழுந்திடு என்று உணர்த்திடும் கவிதை நன்று.

**எழுந்திடு தோழா!**

பட்டப்பகலில் பணங்காசு கொள்ளை பச்சப்புள்ள பாலியல் கொடுமை நாளுக்கொரு நோய் நாடெங்கும் வறுமை நாடு போகும் நிலை கண்டு நடுங்குதே மனம் ஏனோ நிதமும் கலங்குதே மனம் இளைய வயதிலே இன்னுமா உறக்கம்? எந்தன் தோழா எழுந்திடு எழுந்திடு இந்தியா காத்திடு தீமை அழித்திட தீயாய் கனன்றிடு! கோவிலுக்கு கடவுளை வணங்கிட செல்வார்கள். நூலாசிரியர் கோவிலுக்கு கலையை ரசித்திட செல்வது பற்றி கவிதை வடித்துள்ளார்.

இணைவோம் தோழா! ஆலயம் பல சென்று வந்தேன் ஆண்டவனை அறிவதற்காக அல்ல என் தமிழரின் கைவண்ணக் கலை அறிவதற்காக! தமிழகத்தை அண்டை மாநிலங்கள் அனைத்தும் தொடர்ந்து வஞ்சித்து வருகின்றன. காவிரியை கர்னாடகம் சிறைபிடித்து வைத்துக் கொண்டு அடாவடித்தனம் செய்து வருகின்றது. புதிய அணைகள் கட்டுவோம் என்று மிரட்டியும் வருகின்றது. காவிரியை வரவேற்று வடித்த கவிதை ஒன்று.

**பொங்கி வா காவிரியே!**

அன்று ஆனந்த வெள்ளத்தில் ஆர்ப்பரித்த காவிரியே இன்று அழுவதற்கும் உன்னிடம் கண்ணீர்த்துளி இல்லையே கரிகாலன் காலத்தே கரைபுரள வந்தவள் நீ பச்சைத் தமிழகத்தை பாலை நிலம் ஆக்காதே பொறுத்தது போதும் தாயே பொங்கி வா காவிரியே !

உழைத்தால் வாழ்வில் உயரலாம். வறுமையை இல்லாது ஒழிக்கலாம் என வழி சொல்லும் விதமாக வடித்த கவிதை.

உழைப்போம் உயர்வோம்! சாதனை பல சாதித்துக் காட்டிட சோதனை தகர்ப்போம் சோம்பலைத் துறப்போம். உயிரை உறிஞ்சும் வறுமையை வீழ்த்திட உழைப்போம் ! உயர்வோம் !! உலகினை உயர்த்துவோம்!

அடுத்தவர் உழைப்பில் உயிர் வளர்க்கும் சோம்பேறிகளுக்கு புத்தி சொல்லி, உழைக்கச் சொல்லி வலியுறுத்தி வடித்த கவிதை, சோம்பேறிகளின் சோம்பல் நீக்கிடும் கவிதை.

**உழைப்பே உயர்வு!**

வானம்பொழியமறுப்பதில்லை தென்றல் வீச மறுப்பதில்லை இமைகள் இமைக்க மறுப்பதில்லை மனிதா நீமட்டும்ஏன் உழைக்கமறுக்கிறாய்? உள்ளத்தில் திட்டமிடு உழைப்பை உரமாக்கு முயற்சி எனும் வேருக்கு வியர்வை நீர் பாய்ச்சு வெற்றி எனும் கனி சுவைப்பாய் பாரினில் என்றும் புகழ் பெறுவாய். தன்னலத்தோடு வாழாமல் பிறர் நலம் பேணி வாழ்வாங்கு வாழ்ந்தால் இறந்த பின்னும் வாழ முடியும் என்பதை உணர்த்தும் விதமாக வடித்த கவிதை.

**பயன்பட வாழ்!**

வாழ்வின் அர்த்தம் வகையாய்ச் சொல்லும் தனக்கென் வாழ்ந்து தனிமரமாய் ஆகாதே. பிறர்க்கென வாழ்ந்து சரித்திரம் படைத்திடு.

நீதிமன்றம் வலியுறுத்திய போதும் நடுவது இல்லை மரம். மரங்களை வெட்ட வெட்ட மழை பொய்க்கும். மழை வேண்டுமென்றால் மரங்கள் நட வேண்டும். ஒரு மரம் வெட்டினால் பத்து மரங்கள் நட வேண்டும் என்ற உள்ளம் வேண்டும். மரம் நட வலியுறுத்தும் கவிதை நன்று.

**மரம் நடு ! மனிதா!**

காற்றும் கெடுது கார், வண்டிப் புகையால் மழையும் பொய்க்குது மரங்கள் அழிவால் மண் வளம் குறையுது இரசாயண உரத்தால் நீரும் கெடுது தொழிற் சாலைக் கழிவால் விழித்திடு மனிதா விழித்திடு மரம் நடு! மரம் நடு! மண்ணெல்லாம் மரம் நடு மரத்தினை நட்டு மண்ணுயிர் காத்திடு !

நிலவு பற்றி கவிதை பாடாத கவிஞர் உண்டோ? இல்லை. எல்லாக் கவிஞர்களும் நிலவு பற்றி ஒரு பாடலாவது எழுதி விடுவார்கள். காரணம் எல்லோராலும் விரும்பப்படுவது நிலவு. நூலாசிரியர் கவிஞர் க. தங்கராஜு அவர்களும் நிலவு பற்றி எழுதி உள்ளார். பாருங்கள்.

வெண்ணிலவே ! விண்ணோடு நீயிருந்தும் மண்ணோடு நானிருந்தும் கண்ணோடு காண்கின்றேன் வெண்ணிலவே உன்னை உன் அழகைக் காட்டித்தான் ஊட்டி விட்டாள் அன்னை உன் உருவைக் காட்டித்தான் தினம் வளர்த்தாள் அன்னை பிறை நிலவே முழு நிலவே பளபளக்கும் எழில் நிலவே வெண்மதியே ஓவியமே வாழிய நீ வாழியவே!

ஊடகத்தில் குறிப்பாக தொலைக்காட்சியில் திட்டமிட்டு தமிங்கிலம் பரப்பி வருகின்றனர். தமிழ்க்கொலை நாளும் நடத்தி வருகின்றனர்.

தமிங்கிலத்தை சாடி வடித்த கவிதை நன்று. படைப்பாளிகள் அனைவரும் தமிங்கிலத்திற்கு எதிராக உரக்கக்குரல் கொடுத்து தமிங்கிலம் ஒழிக்க முன்வர வேண்டும். இந்நிலை இப்படியே தொடர்ந்தால் தமிழ்மொழி சிதைந்து போகும். விழிப்புணர்வு வர வேண்டும்.

**தமிழைக் காப்போம் !**

அம்மா என்பது மம்மி யானது அப்பா என்பது டாடி யானது அத்தை என்பது ஆன்ட்டி யானது மாமா என்பது அங்கில் ஆனது ஆக மொத்தம் அன்னைத் தமிழானது அழிந்தே போகுது அழகுத் தமிழில் அனைத்தும் இருக்க அன்னிய மொழி எதற்கு? அழகுத் தமிழினை அள்ளிப்பருகிடு அன்னைத் தமிழினை அனுதினம் காத்திடு.

கொடி கட்டி வாழ்ந்தவன் தமிழன். யானை கட்டிப் போரடித்தவன் தமிழன். கல்லணை கட்டியவன் தமிழன். கலைகள் பல வடித்தவன் தமிழன். உலக அரங்கில் தமிழன் என்றால் ஆற்றல் மிக்கவன் என்ற பெயர் உண்டு. உலகின் முதல் மொழியான தமிழ் மொழியினை தாய்மொழியாகக் கொண்டு தமிழா, தமிழராகப் பிறந்ததற்காக, பெருமை கொள் என்கிறார் நூலாசிரியர் கவிஞர் க. தங்கராஜு.

**பெருமை கொள் தமிழா!**

பாம்புக்குப் பால் வார்த்து முல்லைக்கு தேர் கொடுத்து மயிலுக்கு போர்வை தந்து புறாவுக்கு சதை கொடுத்தது எங்கள் தமிழ் இனமே ! வந்தார்க்கு வாழ்வளித்து வருவோரை வரவேற்று மகிழ்வோடு விருந்தோம்பி மனிதநேயம் காத்திட்ட(து) எங்கள் தமிழ் இனமே ! அன்பே அறமென்று வாழ்ந்து காட்டியது தங்கத் தமிழினம் தான் தரணிக்கு அதை ஓது!

இப்படி நூல் முழுவதும் தமிழ், தமிழர் பற்றுடனும், சுற்றுச்சூழல் ஆர்வத்துடனும் இயற்கை நேசத்துடனும் வடித்த கவிதைகள் நன்று. நூல் ஆசிரியர் கவிஞர் க. தங்கராஜு அவர்களுக்கு பாராட்டுகள்.




தக்கன பிழைத்து வாழும்
வெற்றிக் கனி பறிக்க;
வேண்டும் ஒரு முனைப்பு:

அணியைத் கட்டுக்குள்
வைக்கும் திறன்;
சமரசம் செய்யும்
சாமர்த்தியம்;

முரண்பாடுகளில் சமன்பாடு
கண்டறியும் நேர்த்தி;
எதிரணியின் வலி கணிக்கும்
வல்லமை;

தன் ஆற்றலின்மையை
ஆய்ந்தறிந்து செயலாற்றல்;

தக்க துணைகளை
தேர்ந்தெடுத்தல்;

தர்க்கம் தடுக்கும் திறமை;
வாதம் செய்வதிலும்
நளினம்;

தோல்வியை தோற்கடிக்கும்
வன்மை;வெற்றியில் பதறாமை;

தோல்வியில் துவளாமை;
வெற்றியில் செருக்கின்மை;

காண்போர்க்கு எளியனாயும்;
காணாதவர்க்கு
இறையாயும்; இருந்து பழக:

உயர்வான்; அவன்
தக்கோனாய்.



தக்கன பிழைத்து
வாழும் அன்றோ!

எக்காளம் என்றும்
அவன் கையில்!

**சசிகலா விஸ்வநாதன்**



## துணைக் கருவி

" இரவு முழுவதும் சுகம் தரும்
பாய் தலையணை
போர்வை விடிந்ததும்...."

ஓரம் கட்டி வழிவிட்டு
அடுத்த இரவு வரும் வரை
காத்திருப்பு பட்டியலில்
நிற்கிறது...."

தலைக்கு இதம் உடலுக்கு
ஒய்வு கட்டி அனைக்க
குறையும் கை கால் வலி .... "

இரவு முழுவதும்
கனவையும்
அற்புதமான
உறக்கத்தையும்
அள்ளித் தருகிறது
படுக்கை
விரிப்புக்கள் ..."
குன்றிய இரவு வெளிச்சமும்
மெத்தை மிடுக்கும்
சுண்டி இழுக்கிறது..."

சுகத்தை மட்டும் தந்து விட்டு
ஓரம் கட்டப்படும்
போது ஒப்பாரி
வைக்காமல் ..."

அடுத்த வாய்ப்புக்கு
தன்னை வாரித்தந்திட
தயாராய் இருக்கும் படுக்கை
ஆபரணங்கள்
என்றும் சுகமே ..."



துணைக் கருவி என்றும்
மனிதனின் தூக்க மருந்து
அழகிய விரிப்பு .... "

**ஆர். சீதாராமன்**
சீர்காழி



## மண் எனும் மாமணியே

(டிசம்பர் 5 உலக மண் நாள்)

உனக்குத்தான் எத்தனை
பெயர்கள் ?
பூவாம்; காயாம் ; கூவாம்;
கோவாம்!

உனக்குத்தான் எத்தனை
ஓரவஞ்சனை!
உழுபவன் வீசினில்
அன்பளிப்பு தருகிறாய்,
உதவாதென வீசினால் .
அழித்து விடுகிறாய் !

உனக்குத்தான் எத்தனை
பெரிய மனம்!
அகழ்வாரைத் தாங்குகிறாய்,
அசிங்கத்தையும்
தாங்குகிறாய்!

உனக்குத்தான் எத்தனை
தயாள குணம்!
உயிரினங்களுக்கு
உன்மடி உறைவிடம்,
அலையும் நீருக்கும்
மலைக்கும்
உன்னடி புகலிடம் .

எத்தனை திருட்டுகள்
செய்கிறாய் மண்ணே!
விலைமதிப்பானதை
மறைத்துவைக்கிறாய்

தோண்டி எடுத்தால்
தந்துவிடப் போகிறாய் !

சினம் கொண்டு ஆடுகிறாய் !
சிதைக்கவும் செய்கிறாய் !
மனித இன நகரங்களைத்
தாழிட்டுப்புதைக்கிறாய்;
புதைந்த பெருமைகளை
வெளிக்காட்டிச் சிரிக்கிறாய் !

உன்னால்தான் பேசப்படுகிறது
என்ஊர் பெருமை ;
என் இனத்தலைமை ;
என்னவர் வீரம்;
என்னுள் வீசுகிறது
உன் மொழி வாசம்!

தவழ்ந்தால் தாங்கிக்
கொள்கிறாய் !
விழுந்தால் தட்டிக்
கொடுக்கிறாய்!
எழுந்தால் உயர்த்தி
விடுகிறாய் !
படுத்துவிட்டாலோ
உறங்க வைக்கிறாய்

என் பிறப்பும்
என் இறப்பும் உன்னிடம் !


என்வாழ்வும் என் வளர்ச்சியும்
உன்னிடம் ! ஆவதும்
மண்ணாலே அழிவதும்



மண்ணாலே
இயற்கையே!
இறையே !

மண்ணைப்
போற்றுதும்!
மண்ணைப்
போற்றுதும்!!
மண்எனும்மாமணியே
உன்னைப் போற்றுதும்!

**திருமதி. இரா.இராஜாமணி**
ஈரோடு



அதன் ஒளி முன்னை விட
கூடுதலாகி விட்டது..
தெருவைப்பிரகாசமாக்கிக்
கொண்டிருக்கிறது..
இன்னும் பெயரிடப்படாத
நட்சத்திரமாய் ஒளிர்கிறது..



கையில்
ஏந்திக் கடக்க
முடியாமல்
திணறுகிறேன்..
என் மீதான
உன் பேரன்பை!

**ரிஷபன்**



## சிறப்பான வாழ்வு

பொறுமையாக இருந்தால்
அதையும் சமாளிக்கலாம்..
சுறு சுறுப்பாக இருந்தால்
எதையும் சாதிக்கலாம்...!

அமைதியாக இருந்தால்
அன்பை பெறலாம்...
உண்மையாக இருந்தால்
உலகை வெல்லலாம்...!

உறுதியாக இருந்தால்
பல சாதனைகள்
படைக்கலாம்...
நல்குணம் இருந்தால்
நல்ல மனிதனாகலாம்...!

உதவிகள் செய்தால்
நீ உயர்வாய் வாழலாம்..



அறிவாய்
இருந்தால் நீ
எதையும்
அடக்கி
ஆளலாம்...!!

**பொன். கருணா**
நவி மும்பை

ஒளித்து வைத்திருக்கும்
மொபைல் கேளரிகளில்
உன் புகைப்படங்களுடன்
உறங்காமல் கிடக்கின்றன
உன் நினைவுகள்!
-------------------
உன் காதல்
கிடைக்காதென தெரிந்தும்
இன்னும், இன்னுமென
முன்பை விட
கூடுதலாகவே
உன்னை காதல் செய்கிறேன்!
---------------------
ஏக்கத்தோடு
ஒரு பார்வை பார்த்து
என்ன வேண்டுமென்கிறாய்
எப்படி சொல்வேனடி?
பெரிதாய் ஒன்றும்
ஆசையில்லை
இந்த கண்களை
இப்படியே
காதலோடு கண்டு
மரிக்க வேண்டும்!
--------------------
நீ எனக்கானவள்,
எனக்கானவள் என்று
கர்வம் தரித்து திரிந்தவனுக்கு
ஏமாற்றம் மட்டுமே
பரிசாய் கிடைத்தது
எனது காதல் டைரி முழுதும்
உன் நினைவுகளின்
முள் கிரீடங்கள்!
--------------------
தொலைதூரத்தில் இருந்தாலும்
உனை அருகில்
வரவைத்து விடுகிறது
ஒரு தொலைபேசி உரையாடல்!
--------------------
உன் நினைவுகளை
சுமந்து திரிவது
பிரசவ வலியை விட
கொடுமையானது
நட்ட நிசி இராத்திரியில்
நிலையில்லாமல்,
நிம்மதியில்லாமல்



காற்றோடு காற்றாக
உலா வருகிறேன்
தீர்ந்து போகாத
தீரா உன் நினைவுகளுடன்!
--------------------
விட்டு விலகுவதாக தானடி
சொன்னாய்?
ஏனடி உயிரை பறித்து
கொண்டு வெற்று உடலை
விட்டு விட்டாய்?
நீயில்லாத உலகில்
எனக்கு வாழ்வேது!
---------------------
உடைந்த கண்ணாடியை
ஒட்டும் போது
அது அழகாகாது
நம்பிக்கையை
தொலைத்த பிறகு
அது மீண்டும் துளிர்க்காது!
--------------------
உன் நினைவுகளை
தொலைத்து விட்டு
நிம்மதியை
எங்கே தேடுவது?
இதுவரை சுமந்து
கொண்டிருக்கும்
பூமியின் எடையை ஒத்த
உன் சுகமான நினைவுகளும்
மாறாத இரணம் தான்!

பணத்தின் பின் ஓடும்
ஓநாய் கூட்டத்தில்
கனவுகளில் மனம் லயிக்கும்
மனிதர்கள் பலியாடுகள் தான்
அங்கே என் கனவுகள்
எரிந்து கொண்டிருக்கிறது!
---------------------
அழகை எதிர்பார்க்கும்
சராசரி ஆண்மகன்
நானில்லை அழுகை வந்தால்
தோள் சாய்த்து
அரவணைக்கும்
பேரன்பின் கரங்களையே
எதிர்பார்க்கிறேன்
---------------------
வெளிச்சம் இல்லாத
இருள் நிறைந்த இரவு
அழகானது அனிச்சம் பூவாய்
அருகே நீ இருந்தால்!
--------------------
நேற்றைய இரவு
ஏனோ பிடிக்கவில்லை



வானில் நிலவு
வராததால் அல்ல
என் மனவானில்
நீ உலா
வராததால்!

**லி.நௌஷாத் கான்**

## அழுத - கண்ணீர் !

உலக மக்கள் யாவரின் கண்ணிலும்
ஒரு சொட்டு கண்ணீர் கூட வரக்கூடாது !

ஏழை எளியோரின் துயர் களைய வேண்டாம்
எந்தவித வேறுபாடு இன்றி சமத்துவம்
வேண்டும் !

வன்முறை எங்குமின்றி ஒழிய வேண்டும்
வளமான உலகம் வசப்பட வேண்டும் !

ஆதிக்கம் எங்கும் இருக்கவே கூடாது
அடிமைத்தனமும் எங்கும் கூடாது !

எல்லோருக்கும் எல்லாம் கிடைத்திட வேண்டும்
ஏற்றத்தாழ்வுகள் உடன் களைந்திட வேண்டும் !

கியூபா நாடு போலவே உலகம் எங்கும்
கல்வி என்பது அரசுடைமையாகிட
வேண்டும் ! தனியாரின் ஆதிக்கம்
அகற்றிட வேண்டும்
தண்ணீர் ஒடிடும் நதிகள் பொதுவாக
வேண்டும்!



மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டும்
மனிதனை மனிதன் மதித்திட வேண்டும் !

ஆணாதிக்க சிந்தனை அழிந்திட வேண்டும்
அன்பாகப் பெண்ணை மதித்திட வேண்டும் !



உயர்வு தாழ்வு சாதியில் இல்லை என்ற
உயர்ந்த எண்ணம் மனதினில் வேண்டும் !

தனியுடைமைக் கொள்கை ஒழிய வேண்டும்
பொதுவுடைமைக் கொள்கை மலர
வேண்டும் !

**கவிஞர் இரா .இரவி !**



## ஞானக்கூக்கூ ....

இயற்கை வண்ணத்தில்
செழிப்பின் வளர்ச்சி
தேசியக் கொடி...!

குருதிகள் சிதறி
பசுமை மலர்ந்திட
பறைசாற்றும்
தேசியக் கொடி..

**நல.ஞானபண்டிதன்**



## அசைந்து வருகுது தேர்

ரதம் அதில் அநியாயத்தை
வதம் செய்த இறைவன்
அமர்ந்திருக்க ஆடி ஆடி
அசைந்து அசைந்து வருகுதே
தேர் .
பக்தர்களும் பரவசத்துடன்
சக்தியுடன் தேர் வடம் பிடித்து
இழுக்க ஆடி ஆடி அசைந்து
வருகுதே தேர்
முக்காலம் உணர்ந்த
கடவுள்
எக்காலமும் காப்பேன்
என்று அருள்பாலிக்க
ஆடி ஆடி அசைந்து
வருகுதே தேர்
சாலையில் தேர்



அசைந்து அசைந்து வந்ததால்
சாலையே சோலையாய் மாறி
மலர்களின் வாசம்
வீசுகிறதே ..
அங்கு வாசத்துடன்
பக்தர்களின் நேசமும்
சேர கடவுளும் மனிதனும்
சங்கமிக்கும் ஒரு சங்கமாக
அமைந்ததே தேர்.
அசைந்து வரும் தேரில்
ஒய்யாரமாக அமர்ந்த
கடவுளுக்கு தான் என்னே
மகிழ்வு சாலையில் வரும்
பார் போற்றும் தேரினை
ரசிப்போம் கடவுளின்
ஆசிகளை பெறுவோம்.

**உஷா முத்துராமன்**



## ஞானக் கூக்கூ

தாலாட்டி உறங்க வைத்து
அன்னையாய் அரவணைக்கும்
தொடர் வண்டி..

மனித மனங்களில்
சமரசமாய் உலா
வரும்
தொடர்வண்டி..!

எங்கும் அழைத்துச்
செல்லும்
எந்திர வாகனம்
தொடர் வண்டி..!



மனித சிந்தனையில்
அற்புதமான படைப்பு
தொடர் வண்டி..!

ஏழைகளின் உணர்வில்
மகிழ்ச்சியைத் தரும்
தொடர்வண்டி..!

**நல.ஞானபண்டிதன்**



## மாசு நீக்கி மாண்புறுவோம்

அகமாசோ அனைத்துவகை தீமை கட்கும்
அடித்தளமாய் அமைகின்ற கொடிய மாசு
முகம்பார்த்து அறிவதற்கும் முடிந்திடாது
முயன்றாலும் எளிதாகத் தெரிந்திடாது
நகம்போல வெட்டியதை எறியா விட்டால்
நாகம்போல் கொத்திவிடும் நஞ்சைக்கக்கி
தகவாழ்வு நாம்பெறவே எண்ணத் தூய்மை
தாயன்பு இரக்கமனம் அமைய வேண்டும் !

புறமாசோ அனைத்துவகை நோய்களுக்கும்
புதுவலிமை ஊட்டுகின்ற புன்மை மாசு
நிறம்கண்ணில் தெரிவதைப்போல் தெரிந்தே நாளும்
நீரினையும் காற்றினையும் கெடுக்கின்றோம்நாம்
இறப்பளிக்கும் மதுகுடித்தல் போலகூற்றை
இயற்கையினை மாசாக்கி அழைக்கின்றோம்நாம்
அறம்நம்மைக் காத்தல்போல் சுற்றுச்சூழல்
அருந்தூய்மை காக்கினது நம்மைக்காக்கும் !

அழுக்காறு சினம்ஆசை சூழ்ச்சித்தீயை
அகமாசு பெருக்கிநம்மை எரித்தழிக்கும்
வழுக்கவைத்துப் புகழ்கெடுத்தே உலகமெல்லாம்



வசைபாடப் புறக்கணித்தே இழிவு செய்யும்
உழுதிடும்மண் வீசுகாற்று குடிக்கும் தண்ணீர்
உயிர்பறிக்கும் நஞ்சாக்கும் புறத்தின் மாசு
விழுதுவிடும் ஆலம்போல் தழைத்து வாழ
விளைவிப்போம் அகம்புறத்தில் தூய்மை தன்னை !

**பாவலர் கருமலைத்தமிழாழன்**

## இருளடைந்த வெளிச்சங்கள்

இரவின் வெளிச்சங்கள்
குறித்து சில கேள்விகள்
இருந்தன..

உன் நிலவு வருடல்கள்
கிளர்தலுற்று சற்று
வெளிச்சம்
போர்த்திக்கொண்டு
என் இரவெங்கும்
சுற்றித்திரிந்தன..

மூச்சடைத்துக்கொண்டிருக்கும்
காரிருளை தூசுதட்டி
வெளியேற்றிக்கொண்டிருந்தன
உன்னாலானதோர்
வெளிச்சப்புள்ளிகள்..

என்னை அவ்வப்போது
அமிழ்த்திக்கொண்டிருந்தது
உன் பிரிவெனும் துயர்..

தூர மேகங்களில்
கலைந்துசேர்பவை
நம் மீட்சிமையாய்
இருக்கலாம் ஒருவேளை..

தூர்வாடப்படாத
குளத்திற்கப்பால்
என் நாரைகள் சில
பரிதவித்துக்கொண்டிருந்தன..

கிளையொடிந்த மரங்களின்
உச்சியில் சிறகிழந்த
பறவைகளாய்
வலியடைந்து கிடந்தன
உன் வெளிச்சம் மறுக்கப்பட்ட
சில இரவுக் கனவுகள்..

ஆயினும்
பாறையிடுக்கினில்



வேர்பிடித்துக்
கிடந்தது
உன்
அன்பிலானதோர்
அக்கினிக் குஞ்சு..!

**ம.முத்துக்குமார்**
வே.காளியாபுரம்

# வாசகர் கடிதம்

பள்ளங்களை நிரப்பிய
மழை நீருக்கு
உன் கன்னக்குழி தெரியவில்லை போலும்...என்ற ரிஷபன் எழுதிய புதுக்கவிதை ரசிக்கும் படி இருந்தது.
ஒருவேளை மழை நீர் விழுந்தால் தானும் எழ முடியாது எனத் தெரிந்தே கடந்திருக்குமோ?

முகில் தினகரன் எழுதிய "ஓடமும் ஒருநாள்" பழைய சைக்கிளின் மதிப்பே தனி என்பதோடு என் மாமா( அம்மாவின் தம்பி ) எனக்கு வாங்கித் தந்த ராலே சைக்கிள் காலத்தை நினைவூட்டியது .35 வருடங்களுக்கு மேலாக இன்றும் உள்ளது அந்த சைக்கிள்.



-ஸ்ரீகாந்த்
திருச்சி

இன்று (09.12.2025) தமிழ்நாடு இ பேப்பரில் முதல் பக்கத்தில் வந்தே மாதரம் நாடாளுமன்ற சிறப்பு விவாத செய்தியும், தினம் ஒரு குறள், சிந்திக்க ஒரு நொடி பகுதியில் கருத்து எதார்த்த உண்மை பிரதிபலிக்கிறது. உள்ளூர் செய்திகள் ஆகிய சிறப்பு.
நலம் தரும் மருத்துவம் பகுதியில் மூத்த குடிமக்களான காலை சத்தான உணவு பற்றிய குறிப்புகள் அனைவருக்கும் பயன்படும்.
மன்னித்து அருளும் மன்னீஸ்வர், ஏன் விநாயகர் சிலையை கரைக்கிறோம், ஆகிய தொகுப்பு மிகவும் சிறப்பாக உள்ளது.
சினித்துளியில் சாரா திரைவிமர்சனம் மற்றும் சினிமா செய்திகள், சுற்றுலா பகுதியில் மாஞ்சோலை மிகவும் அருமை.
உலக செய்திகள் பகுதியில் பல போர் பற்றிய செய்திகள் வேதனை அளிக்கிறது.



-T.P.குமரன்,
மகர்நோம்புச்சாவடி

வந்தே மாதரம் ஒரு மந்திரம்#சுதந்திர இயக்கத்துக்கு உத்வேகம் கொடுத்த முழக்கம்=பிரதமர் மோடி
கடந்த தேர்தலை விட அதிக வாக்குகள் பெறுவது உறுதி#முதல்வர் ஸ்டாலின்
நடிகை பாலியல் வழக்கில் நடிகர் திலீப் விடுவிப்பு
தமிழகத்தில் 99.27% எஸ் ஐ ஆர் படிவங்கள் பதிவேற்றம்
சென்னை விமான நிலையத்தில் 96 விமானங்கள் ரத்து
அண்ணா நகர் ஜிஎஸ்டி ஆணையரகத்தில் தீ விபத்து #இரண்டரை மணி நேரம் போராடி தீ அணைப்பு
புதுவையில் விஜய் பிரச்சாரத்துக்கு காவல் துறை அனுமதி மறுப்பு#மாற்று இடம் தேர்வு செய்ய அறிவுறுத்தல்
அதிமுகவை ஒருங்கிணைக்க பாஜக மத்தியஸ்தம் தேவை#தினகரன்
பங்குச் சந்தை 300 புள்ளிகள் சரிவு#ஐடி பங்குகள் உயர்வு
நீங்கள் அங்காளி பங்காளி என்றால் நாங்கள் மாமன் மச்சான்#முதல்வருக்கு நயினார் நாகேந்திரன் பதில்
60 வயது நிரம்பிய ஆண்களுக்கு வரப் போகுது இலவச பஸ் பயணம் #ஏற்கனவே நடைமுறையில் உள்ளது மூத்த குடிமக்கள் கட்டணமில்லா பயண டோக்கன் முறை
புதுக் கவிதைகள் அற்புதம்
நூல் விமர்சனம் அமர்க்களம்
வாசகர் கடிதங்கள் பிரமிப்பு
மின் விபத்தில் சிக்கி உயிரிழப்போர் குடும்பத்துக்கு ஒரே நாளில் இழப்பீடு #பொறியாளர்களுக்கு மின் வாரியம் அறிவுறுத்தல்
அமலாக்கத்துறையின் ரகசிய கடிதம் வெளியான விவகாரம்#சிபிசிஐடி விசாரணைக்கு டிஜிபி உத்தரவு
இணை தயாரிப்பாளரை அடுத்து, சினிமா தயாரிப்பாளர் போதைப் பொருள் வழக்கில் கைது
தஞ்சாவூர்: திருமண மண்டபத்தில் நகை, பணம் திருடியவர் கைது
நாகர்கோவிலில் பெண் குழந்தை கடத்தல்#மூன்று மணி நேரத்தில் மீட்ட போலீஸ்
டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு சரிவை ரிசர்வ் வங்கி கவனிக்கிறது #மத்திய அரசு
வந்தே மாதரம் எந்த கட்சிக்கும் சொந்தமானது அல்ல#மக்களவையில் அகிலேஷ் யாதவ் ஆவேசம்
ஜப்பானில் சக்தி வாய்ந்த நில நடுக்கம்#7.5 ரிக்டராக பதிவு
ஜெர்மனியில் இளைஞர்களுக்கு கட்டாய ராணுவ சேவை#மசோதா நிறைவேற்றம்
சீன போர் விமானத்தை விரட்டியடித்த ஜப்பான் ராணுவம்
ஆஸ்திரேலியாவில் காட்டுத் தீ#40 வீடுகள் எரிந்து நாசம்=தீயணைப்பு வீரரும் பலி



-பி.சுரேகா
சென்னை

வணக்கம் 9.12. 25 அன்று தமிழ்நாடு இ பேப்பர்.காம் முதல் பக்கத்தில் வந்தே மாதரம் ஒரு மந்திரம் என்ற நம் பிரதமர் மோடி ஜி அவர்களின் வார்த்தைகள் படிக்கும்போது மகிழ்ச்சியாக இருந்தது. இன்றைய பஞ்சாங்கம் மிக அற்புத நாளாக எனக்கு நல்ல செய்தியை மிக அருமையாக சொன்னது. பாராட்டுக்கள்.

திருக்குறளை மிக அருமையான பொருளுடன் புரிந்து கொண்டு பொறுமையாக படித்து மகிழ்ந்தேன். மனம் நிறைந்த பாராட்டுக்கள். தமிழ்நாடு இ பேப்பர் தெய்வம் இதழ் தமிழா ரவி சார்பில் சங்கடஹர சதுர்த்தி நடந்த படமும் செய்தியும் பிள்ளையாரும் பார்ப்பதற்கும் படிப்பதற்கும் மகிழ்ச்சியை கொடுத்தனர். சென்னை விமான நிலையத்தில் 96 விமானங்கள் ரத்து என்ற செய்தி அதிர்ச்சியாக இருந்தது. 20 வயது எனர்ஜியில் இயங்க காலில் நாம் என்ன சாப்பிட வேண்டும் என்று நல்ல அற்புதமான ஒரு டிப்ஸ் கொடுத்த நலம் தரும் மருத்துவ பகுதிக்கு மனமார்ந்த பாராட்டுக்கள். ஈரோட்டில் விஜய் அவர்களின் தேர்தல் பிரச்சாரத்திற்கு காவல்துறை அனுமதி மறுத்தது அரசியலை நன்றாக படம் பிடித்து காட்டியது. தினம் ஒரு தலைவர்கள் பகுதியில் அருணா ஆசப் அலி அவர்களின் வரலாறும் அவரைப்பற்றிய ஒவ்வொரு வரியும் அவர் என்னுடன் பேசுவது போல மிக அருமையான தகவலாக இருந்தது பாராட்டுக்கள். பல் சுவை களஞ்சியம் பக்கத்தில் வந்த ஜில்ஜில் தொட்டபெட்டா என்ற செய்தியை படிக்கும் போது மனதிற்குள் ஒரு குளிர்ச்சி வந்து உற்சாகமாக இருந்தது. ஜோக்ஸ் மிகவும் அற்புதம். பார்த்து ரசித்து சிரித்தேன். சமையலறை ஸ்பெஷல் மிகவும் அருமை. பயனுள்ள சமையல் டிப்ஸ் மிகவும் அருமை. அவற்றையெல்லாம் படிக்கும்போது நல்ல நல்ல உற்சாகப் தரும் டிப்ஸ்களாக இருந்தது.

நாராயணசாமி கோவில் கிருத்திகை திருவிழாவில் அன்னதானம் வழங்கிய செய்தியும் படமும் மிகவும் அருமை. ஊராட்சி கிராம சபை கூட்டம் என்று கூட்டம் நடந்ததை படிக்கும் போது அந்த கூட்டத்தில் என்ன நடந்தது என்று இந்த செய்திகளை வைத்து யூகிக்க முடிகிறது. சுற்றுலா பக்கத்தில் வந்த எழில் கொஞ்சும் மாஞ்சோலை என்று படிக்கும் போது மிகவும் அற்புதமாக உள்ளது. இது போன்ற இடங்களுக்கு சுற்றுலா சென்றால் உடல் மனம் இரண்டும் உற்சாகமடைந்து நாம் வரும் நாட்களில் உற்சாகமாக நம்முடைய பணியினை செய்யலாம் என்று எண்ணை வைத்தது. கொடி நாள் கொண்டாடப்படும் நேரத்தில் அதற்காக நிதியை ஆளுநர் முதல்வர் நன்கொடையாக கொடுத்தது மிகவும் நல்ல செய்தி.


அமெரிக்காவின் டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பின் சரிவையை ரிசர்வ் வங்கி கண்காணிக்கிறது என்ற மத்திய அரசு பற்றிய தகவல் நிதி நிலைமையை நன்றாக புரிய வைத்தது. சீனப் போர் விமானத்தை விரட்டி அடித்த ஜப்பான் ராணுவம் என்று அயல்நாட்டு செய்தியில் உக்கிரன் போர் நிறுத்த திட்டத்தை ரஷ்யா ஏற்றுக் கொண்டுள்ளது என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அவர்களின் செய்தி அயல்நாட்டு தகவல்கள் மிக அருமையாகவும் தெளிவாகவும் புரிந்து கொள்ள முடிந்தது. எல்லா நாளும் நல்ல தகவல்களாக இருப்பதால் ஆர்வமுடன் தினம் எப்போது காலையில் தமிழ்நாடு இ பேப்பர் வரும் என்று எதிர்பார்க்க வைப்பது தான் மறுக்க முடியாத மறைக்க முடியாத உண்மை.
இதற்காக அரும்பாடு படும் தமிழ்நாடு இ பேப்பரின் ஆசிரியர் குழுமத்திற்கு மனமார்ந்த பாராட்டுக்கள் .



-உஷா முத்துராமன்







CREATE YOUR
PROFILE
WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!


MLM Software/Website
Rs. 9999/- only/-
Contact :
+91 9853719337
+91 7436914247
Whatsapp
+91 7684053514
• Binary MLM Software
• Matrix MLM Software
• Single Leg MLM Software
• UniLevel Plan MLM Software
• Re-purchase Plan MLM Software
• Board Plan MLM Software
• Cryptocurrency MLM Software
• Investment Plan MLM Software
• Helping/ Gift Plan MLM Software


அருள்தரும்
தெய்வம்
தமிழ் மாதமிருமுறை இதழ்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான
ஆன்மீக செய்திகள்,
பரிகாரங்கள்,
ஸ்தல வரலாறு மற்றும்
சுவாரஸ்யமான
தகவல்கள் மாதம்
இருமுறை படித்து
ஆன்மீகத்தை
அறியுங்கள்..


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale... Residential / Commercial...
*Plots
*Flats
*House
*Villa
*Bungalows
*Farm Land
*Ware Houses
*Factory Sites
*Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget ⇨ We Show Your Home
Call:7871617005



GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009


SEVEN STARS
LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier,
Customs Clearance, Cargo Movement by Air,
Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town,
Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com


அனைத்து பிரிவினருக்கும்
என் துணை
திருமண தகவல் மையம்
உங்கள் மணமகனை /
மணப்பெண்ணைப்
பதிவு செய்யவும்.
www.enthunai.com
support@enthunai.com
7871617005
7789941009


PADMA
MEDIA HOUSE
Best Newspaper
Advertising Agency
Matrimonial
Property
Recruitment
Business
Announcements
Obituary
Public Notices
Education
CONTACT : +91 81227 98599


WANTED
NEWS COORDINATOR
NEWS
Salary
Rs. 25000
Plus
*Salary is not a
constraint for right candidate
Responsibilities:
1. Appoint Reporters and Photographers in
Tamil Nadu Districts and Taluks
2. Will coordinate with reporters and the news desk
3. Should have a minimum of six years of experience
in a print and TV newsroom.
4. Will report to the editors at the Chennai office
PRGI No. TNBIL/25/A1569
வைகறையில்
பேப்பர்பாய்
Send CV to
padmamediapublications@gmail.com
Call
9337501889




# புதிய தனி பங்களா வீடு வாடகைக்கு தேவை

தி.நகர், பனகல் பூங்கா, போயஸ் கார்டன், BOAT CLUB, RA புரம், ஆழ்வார்பேட்டை, MRC நகர், அடையாறு, பெசன்ட் நகர், கோட்டூர்புரம் ஆகிய இடங்களில் புதிய தனி பங்களா வீடு வாடகைக்கு தேவை.

தொடர்புக்கு: 75500 00680




## "CREST UBERTA" @ ANAKAPUTHUR



Grand Launching Offers

1 BHK ₹.19.99 L*

2 BHK ₹.29.99 L*

FREE SITE VISIT

CREST HOMES PVT LTD
Elegant Affordable...

89399 65050
www.crest.homes

## சென்னையில் CBSE பள்ளி

நடத்த நிலம் அல்லது கட்டிடம் வாடகைக்கு தேவை

CBSE பள்ளி நடத்துவதற்கு குறைந்த பட்சம் 2 ஏக்கர் முதல் 3 ஏக்கர் நிலத்தில் 40,000 முதல் 1,05,000 சதுரடியில் கட்டிடம் கட்டி வாடகைக்கு விடுவதற்கு ஆர்வமுள்ள நில உரிமையாளர்கள் கீழ்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும்

98426 99991

## Telecaller Job



Apply Today

Mobile Calling !!!!

Rs 250-Rs500 per day

Work From Home Jobs

Rs 8000 - Rs 15000 per month

Ananda Bhaskar
9337501889
7789941009

## கோவை பீளமேட்டில் உள்ள

லேடிஸ் ஹாஸ்டலில் பணிபுரிய

★ சமையல் மாஸ்டர்

★ CARE TAKER/ LADY SECURITY

வீட்டில் பணிபுரிய

★ சமையல்காரர்

★ தோட்ட பராமரிப்பு மற்றும் செக்யூரிட்டி தேவை

தங்குமிடம், உணவு இலவசம்

98947 73431

## ST COURIER

The People's Choice
ISO 9001:2008 Certifed

DOMESTRIC- INTERNATIONAL

Old No. 1/2, New No.3, Kesavan St., Tondiarpet, Chennai-600081.

Cell: 9176130601

## PRIME LAND FOR SALE

on main road between Perambalur to Trichy NH-45

- Approx. frontage 200 feet , 2 Acres
- Nearby Dhanalakshmi Srinivasan Medical College
- Ideal for Built & Suit
- Loan can be organised for Buyer

BHAARATH REAL ESTATE
To Buy or Sell We are the Leaders
ECR, Neelankarai, Chennai -115
Ph: 98412 99099 / 72994 86699
Email: bhaarathre21@gmail.com / www.bhaarathrealestate.com

## காஞ்சிபுரம்

செங்கழனீரோடை வீதி

3150 சதுரடி மனை

வடக்குப் பார்த்த கமர்ஷியல் மனை விற்பனை

9884851142 / 9884851146

## பூந்தமல்லி

பஸ் நிலையம், Metro Station Outer Ring Road அருகில் CMDA RERA Appd.

PLOT FOR SALE

9710500077

## கடம்பத்தூர்

ரயில் நிலையம் அருகில் DTCP Approved 600/- Sq.ft.

Rs.3,30,000/-

Offer Rate

99520 53440

## இடம் விற்பனைக்கு

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை to இளையான்குடி மெயின் ரோட்டில் 250 ஏக்கர் மொத்த இடம் விற்பனைக்கு தயாராக உள்ளது.

தொடர்புக்கு :
98434 88428 / 94420 78428

## ManjalMart




## COMMERCIAL COMPLEX FOR RENT



3 FLOORS with Lift
EACH Floor AREA, 3000 sqft,
1st, 2nd, 3rd Floor Available
Corner Site 2 way Entrance

KKR GARDEN 3rd Main Road, Madhavaram, Chennai - 60
Nr. Metro Rly Stn & Anthony Hospital.
Cell: 98846 25240 / 98843 38911

## COMMERCIAL SPACE FOR RENT

WAREHOUSE @ PORUR - GERUGAMBAKKAM

12500 Sq.ft.

40 Feet Road, 12 Mtr Ht,
3 Phase EB, ACC Flooring

Call : 98408 93117
82202 20444

## DTCP APPROVAL

அங்கீகரிக்கப்படாத வீட்டு மனை அங்கீகாரம் பெற & பில்டிங் பிளான் APPROVAL லே அவுட் APPROVAL

84381 83848



# பல்சுவை களஞ்சியம்




# கூழாமந்தல் பெருமாள்

திருவண்ணாமலை மாவட்டம் செய்யார் அடுத்துள்ள கூழாமந்தல் கிராமத்தில் 1500 ஆண்டுகள் பழமை வாய்ந்த பெருமாள் கோவில் உள்ளது. இங்கு தாயார் சூதேவி பூதேவி உடன் பேசும் பெருமாள் என்ற பெயரில் அருள்பாலிக்கிறார். இவரை வாய் பேச முடியாத வந்து வணங்கினால் பேச்சுத் திறன் கிடைக்கும் என்பது இத்தலத்தின் ஐதீகம்.



கூழாமந்தல் பெருமாளுடன் பேசிய மன்னன்சொல்லுக்கு எள் என்றும், பந்தல் என்றால் ஓடும் சாலை, விதானம் என்றும் பொருள்கள் உண்டு. பல்லவர்களின் தலைநகரான காஞ்சிபுரத்தில் இருந்து பிற்கால சோழர்களின் தலைநகரமாக இருந்த கும்பகோணத்துக்கு அருகிலுள்ள பழையாறை மற்றும் கங்கைகொண்ட சோழபுரம் போன்ற நகரங்களுக்கு இவ்வூர் வழியாக நெடுஞ்சாலை இருந்ததாலும், இங்கு எள் பயிர் அதிகளவில் விளைந்ததாலும் இவ்வூர் 'கூழம் பந்தல்' எனும் பெயர் பெற்றது.ஒரு ஊரின் ஒருபுறத்தில் சிவாலயமும், மற்றொரு புறத்தில் விஷ்ணு ஆலயமும் இருப்பது அந்த ஊரின் இரு கண்கள்போல் என்பார்கள். அதற்கேற்றார்போல் சோழர்களின் ராஜகுருவான ஈசான சர்வ சிவ பண்டிதர் ஆணையால் 'கங்கை கொண்ட சோழீச்சுரம்' என்னும் முழுவதும் கருங்கற்களாலான அற்புத கற்றளி ஒன்று எழுப்பப்பட்டது.
வேதசத்சங்கம்.

இந்த கற்றளி தெப்பக்குளத்தில் மிதப்பது போன்ற அமைப்புடன் இருப்பது வியப்புக்குரியது. மேற்கில் ஒரு பெருமாள் கோயில் உள்ளது. சில வருடங்களுக்கு முன்பு பூமியிலிருந்து 12 அடி உயர மகா விஷ்ணு சிலை கண்டுபிடிக்கப்பட்டது. இவர்தான் பேசும் பெருமாளாக தற்போது அருள்பாலித்து வருகிறார்.

கங்கைகொண்ட சோழீச்சுரம் சிவன் கோயில் கட்டப்பட்ட காலத்திலேயே இப்பேசும் பெருமாள் கோயிலும் கட்டப்பட்டதாக வரலாறுகள் கூறுகின்றன.ஆந்திர மாநிலத்தின் நெல்லூரையும், தமிழகத்தில் காஞ்சிபுரத்தையும் தலைநகராக கொண்டு ஆட்சிபுரிந்தவர்கள் தெலுங்குச் சோழர்கள். அதில் விஜயகண்ட கோபாலன் என்பவர் இக்கோயிலுக்கு வந்து இப்பெருமாளைக் கண்டு மிகவும் வியப்புற்று பேச, இப்பெருமாளும் பதிலுக்கு அரசனுடன் சாதாரணமாக உரையாடியதாக புராணங்கள் தெரிவிக்கின்றன.

இப்போதும்கூட பெருமாள் முன்பு நின்று அவரை சற்றே ஆர்வத்துடன் நோக்கினால், அவர் கருணையுடன் நம்மை நோக்கி புன்னகைக்கிறார்.காதுகளிலும் துளை இருப்பதாகவும் நாம் தெரிவிக்கும் கோரிக்கைகள் எல்லாம் அவருக்கு கேட்கிறது என்பதும் அதன்மூலம் அருளாசி வழங்குகிறார். வேதனைகளை எல்லாம் தீர்த்து வைக்கிறார் என்பதும் பக்தர்களின் நம்பிக்கையாக உள்ளது.பேசும் பெருமாள் நின்ற திருக்கோலத்தில் மிக கம்பீரமாகக் காட்சியளிக்கிறார். பின் இரு கைகளிலும் சங்கு சக்கரத்துடன், வலக்கை அருள்பாலிக்கும் வரதஹஸ்தமாக, இடக்கை தொடையில் பதிந்துள்ளதாக சேவை சாதிக்கிறார்.

தோற்றம் கம்பீரமாக இருந்தாலும் பெருமாள் சாந்த மூர்த்தியாகவே திகழ்கிறார். பெருமாளின் இருபுறமும் ஸ்ரீதேவி, பூதேவி தாயார்கள். அவ்விருவரும் அணிந்துள்ள அழகிய அணிகலன்களும், தலைக் கிரீடங்களும் நம்மை மெய் மறக்கச் செய்கின்றன.இக்கோயிலின் தனிப்பெருஞ்சிறப்பு, தாயார் இருவருமே தங்கள் வலக்கையில் தாமரை மலர்களை பற்றியிருப்பதுதான். பிற கோயில்களில் ஒரு தேவி வலக்கையிலும், இன்னொரு தேவி இடக்கையிலும் தாமரை மலரை வைத்திருப்பார்கள்.

வருடந்தோறும் எல்லா முக்கிய திருவிழாக்களும் மிகச்சிறப்பாக கொண்டாடப்படுகின்றன. முதலில் பேசும் பெருமாளை தரிசித்துவிட்டு, பிறகு கங்கைகொண்ட சோழீஸ்வரரை தரிசிக்க வேண்டும் என்பது ஐதீகம் என மக்களால் பேசப்படுகிறது.

**பெருமாள்பேசினார்**

தன்னுடன் பெருமாள் பேசியதற்கு ஆதாரமாக இரண்டு வாயிற்படி நிலைகளிலும் உள்ள கல்வெட்டில் "ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்ரவர்த்திகள் ஸ்ரீவிஜயகண்டகோபாலற்குயாண்டு இருபது காலியூற் கோட்டத்து கூவழன் பந்தலான விக்கிரம சோழபுரத்து பேசும் பெருமாள் கோயில் காணியுடைய உறுபலியாந்தான் நூற்றிவுடையான் சொற்பார்பணிபந்தல்" என பொறிக்கப்பட்டுள்ளது.

**எம் அசோக்ராஜா**
அரவக்குறிச்சிப்பட்டி,
திருச்சி

# மீம்ஸ்







# திரு. நம்பியார் அவர்களின் ஆசைகள்

எச். ராமகிருஷ்ணன் என்பவரால் தொலைக்காட்சி ஒன்றிற்காக எடுக்கப்பட்ட பேட்டியில் குருசாமி (வில்லன் நடிகர்) திரு. நம்பியார் அவர்கள் தனது ஆசைகளாகத் தெரிவித்தவை :





1. உலகின் மிக ஆழமான கடற்பகுதியான மேரியானா ட்ரெஞ்ச்சுக்கு ஒரு பயணம்.

2. அலாஸ்காவிற்கும் சைபீரியாவுக்கும் இடையேயான பேரிங் கடல் மூலம் வடதுருவம் ஊடாக ஐஸ்லாந்து செல்லும் பனிப்பாதை வழியாக ஒரு பயணம்.

3. தென்துருவத்துக்கு ஒரு நடை பயணம்.

4. உலகின் நீண்ட மலைத்தொடரான ஆண்டீஸ் மலை மீது பறத்தல்

5. உலகின் பேராறுகளில் முதன்மையான அமேஸான் நதியில் ஒரு கப்பற் பயணம்.

இதில் சிறப்பு என்னவென்றால் ------ இந்த நேர்காணல் 1990 களில் எடுக்கப்பட்டது. இணையம் என்பதே இந்தியாவில் நுழையாத அந்த காலகட்டத்தில் இவற்றை எல்லாம் ஒருவர் கூறுகிறார் என்பது பெரு வியப்பு அன்றோ?

இவற்றை எல்லாம் அவர் எப்படி அறிந்திருப்பார். தொடர்ச்சியான ஆவலும், தேடலும், கற்றலும் கொண்ட ஒருவருக்கே அது சாத்தியம். சாகச மனநிலையின் சாத்தியங்களுக்கு எடுத்துக்காட்டு வில்லன் நடிகரின் வீரியத் துணிச்சல். நிஜவாழ்க்கையில் குருசாமியாக ஆன்மீகத்தை நேசித்து, அன்பை போதித்த அவர் புகழ் சாஸ்வதமானது. அவரின் ஆசிகள் நமக்கு அதே வீரியத்தை வழங்கட்டும். ஆம். அவ்வாறே ஆகுக.

**-பாளை. கணபதி.**




| | |
|---|---|
| பற்கள் இருக்கும் கடிக்கமாட்டான் அவன் யார் | சீப்பு |
| கன்று நிற்க கயிறு மேயுது அது என்ன? | பூசனிக்கொடி |
| தலையைச் சீவினால் தாளில் நடப்பான் அவன் யார்? | பென்சில் |
| கசக்கிப் பிழிந்தாலும் கடைசிவரை இனிப்பான் அவன் யார்? | கரும்பு |
| பிடுங்கலாம் நடமுடியாது அது என்ன? | தலைமுடி |
| மூன்றெழுத்துப் பெயர், உடல் முழுவதும் வெள்ளை நிறம் அது என்ன? | பஞ்சு |
| இவன் வாலுக்கு வையகமே நடுங்கும் அவன் யார்? | தேள் |

# ஜோக்ஸ்

"கபாலி தான் திருடிய சில நகைகளில் சில நகைகளை மட்டும் விற்காமல் பாதுகாத்து வைதிருப்பது ஏன்?"


"அவைகள் அவன் அட்சய திருதியை நாளில் திருடிய அதிஷ்ட நகைகளாம்"

---------------------------

"நமது மன்னர் ஒரு கோழை என்று எப்படி சொல்றே?"

"பிறந்த நாளுக்கு கத்தியால் கேக் வெட்டும்போது கூட அவரது கைகள் நடுங்குவதைப் பாரேன்!"

---------------------------



"பையனின் ஆதார் எண்ணை வங்கிக் கணக்கு, வருமான வரி கணக்கு, வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை அனைத்திலும் இணைத்தாகிவிட்டது. ஆனால் அவனை இல்லறத்தில் இணைக்க ஒரு மணமகள் கிடைக்கவில்லையே!"

---------------------------

"நான் டயட்டில் இருக்ககறேன். கல்யாண விருந்து என்னால் சாப்பிட முடியாது."

"கவலைப்படாதீங்க. உங்களைப் போன்றவர்களுக்கு தனியாக பத்தியப் பந்தி ஏற்பாடு செய்திருக்கிறோம்."

---------------------------

"மன்னர் உங்களை சொக்கட்டான் ஆட்டத்தில் எப்படி ஜெயித்தார் மகாராணி?"

'அவர் எங்கே ஜெயித்தார்? பாவம் தோல்விகளுக்கு மேல் தோல்விகளைக் கண்டு துவண்டு போயிருக்கும் அவருக்கு இதிலாவது வெற்றி கிடைக்கட்டுமே என்று நான்தான் விட்டுக் கொடுத்த ஆடினேன் மந்திரியாரே!"

---------------------------

"என்ன தோசையில் வெட்டுக்கிளி கிடக்கிறதே"
"நீங்கள் கொடுக்கிற காசுக்கு பச்சைக்கிளியா போடுவாங்க?"

---------------------------

"அந்த வீட்டு வாசலில் ஏன் மூன்று கோலம் போட்டு இருக்காங்க?"

"ஒன்று மாமியார் கோலம், ஒன்று மருமகள் கோலம், மற்றொன்று நாத்தனார் கோலம்?"



# குழந்தைகளின் கை வண்ணம்

சிறுவர் உலகம்




**S.Rithikka**
Gr-7,Horizon International Academy, kovilanchery




**Yaazhini R**
3C, PM Shri Kendriya Vidyalaya No.2, Tambaram





**Sivesh Swaminathan**
Class - II
School - Velammal Vidyalaya, Madambakkam




**A.Sai Charan**
3rd std, Chennai





**பா.தஸ்வின் சாய்**
நான்காம் வகுப்பு
கார்மல் பன்னாட்டுப் பள்ளி, ஒசூர்.




**S.samyuktha**
Class IV
NEW PRINCE SHRI BHAVANI SENIOR SEC.SCHOOL
Adambakkam, Chennai 600 088




**V.PramatKumar**
Class : V
School : Trileaves global school, Madambakkam



# இரண்டு நண்பர்கள்..!



ரகு, அருண் இருவரும் நண்பர்கள். அவர்கள் இருவரும் படுசுட்டி பையன்கள். இவர்கள் ஐந்தாம் வகுப்பு படித்து வருகின்றனர். ரகுவின் மாமா பட்டணத்தில் வேலை செய்பவர். இவர் ஞாயிற்றுக்கிழமை அன்று ஊருக்கு வருவதாக சொல்லியிருந்தார். மேலும், வரும்போது பரிசுகள் வாங்கி வருவதாகவும் கூறினார்.

அதனால், ரகுவிற்கு ஒரே மகிழ்ச்சி. 'எப்போது ஞாயிற்றுக்கிழமை வரும், மாமா என்ன பரிசு வாங்கி வருவார்" என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். ஞாயிற்றுக்கிழமை விடிந்ததும் ரகு, தன் அம்மாவிடம் கிரிக்கெட் விளையாடச் செல்கிறேன். மாமா வருவதற்குள் வந்துவிடுவேன் என்று சொல்லிவிட்டு சென்றான். தன்னுடன் தன் நண்பன் அருணையும் மைதானத்திற்கு அழைத்துச் சென்றான்.

அவர்கள் விளையாடப் போகும் வழியில் மாமரத்தில் நிறைய பழங்கள் காய்த்து தொங்குவதைப் பார்த்தனர். ரகு அந்த மாம்பழத்தை 'கல்லால் அடித்து சாப்பிடுவோம்" என்றான். அதற்கு, அருண் வேண்டாம் என்றான். ஆனால், ரகு மீண்டும் கட்டாயப்படுத்தியதால் இருவரும் மாமரத்தில் கல்லெறிந்து மாம்பழங்களை எடுத்து சாப்பிட்டுக் கொண்டே விளையாடச் சென்றனர்.

இருவரும் விளையாடிவிட்டு வீடு திரும்பும்போதும், மாம்பழங்கள் ருசியாக இருந்ததால் மீண்டும் மாமரத்தில் கல்லெறிந்தனர். அப்போது அந்த கல் ஒருவர் மீது பட்டுவிட்டது. உடனே ரகுவும், அருணும் ஓடிவிட்டனர். யாராவது துரத்துகிறார்களா? என்று திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே வீட்டிற்கு ஓடி சென்றுவிட்டார்கள். வீட்டிற்கு மாமா வந்திருந்தார். ரகுவிற்கு ஒரே சந்தோம். மாமா ரகுவின் கால்சட்டையின் நிறத்தைப் பார்த்தவுடன், மரத்தில் கல்லெறிந்தது இவன்தான் என்று கண்டுகொண்டார். என்ன ரகு? கிரிக்கெட் விளையாடிவிட்டு வந்தாச்சா? உன்னிடம் ஒன்று கேட்க வேண்டும். 'நீ இன்று ஏதாவது தவறு செய்தாயா?" என்று கேட்டார்.

ரகு 'இல்லவே இல்லை" என்று சொன்னான். உடனே அவனது மாமா, அருகில் நின்ற அருணை அழைத்து நீங்கள் இன்று ஏதாவது தவறு செய்தீர்களா? என்றார். அருண் உண்மையை ஒத்துக்கொண்டான். 'ஆமாம் நாங்கள் மாமரத்தில் கல்லெறிந்து திருடி தின்றோம்". அப்போது யார் மீதோ கல் பட்டுவிட்டது. உடனே ஓடிவந்துவிட்டோம் என்றான்.

நீங்கள் கல் எரிந்தது என் மீதுதான் என்றார் மாமா. இருவரும், மாமாவிடம் மன்னிப்புக் கேட்டனர். நான் கேட்டதும் உண்மையைச் சொன்ன அருணுக்கு தான், நான் வாங்கிவந்த பரிசு என்று சொல்லி விலையுயர்ந்த கைகடிகாரத்தை அருண் கையில் கட்டினார் மாமா. ரகு 'இனிமேல் பொய் சொல்ல மாட்டேன்" என்று மாமாவிடம் கூறினான். அவனுக்கு கிரிக்கெட் பந்து வாங்கிக் கொடுத்து, ஆறுதல் படுத்தினார்.

நீதி :
நாம் பேசும் உண்மை நம் மதிப்பை தானாக உயர்த்தும்.

**A s Govinda rajan**
Kodambakkam Chennai

## பொது அறிவுப் பூங்கா...

1.நான்மணிக் கடிகையின் ஆசிரியர் "விளம்பி நாகனார்."

2). இந்தியாவின் முதல் ராணுவப் பீல்ட் மார்ஷல் H. F.J. மானக்சா.

3). நமது தேசிய கீதத்தை 52 வினாடிக்குள் பாடி முடிக்க வேண்டும்.


4). 1941.4.12ல் சோவியத் யூனியன் கலைக்கப்பட்டது.

5). இந்தியா, வங்காளம், சீனா,ஆகிய நாடுகளிடையே ஓடும் நதி பிரமபுத்திரா.

6).ஆகஸ்ட் 29ஆம் நாள் தேசிய விளையாட்டுத் தினம் கொண்டாடப் படுகிறது.

7). 1867 ஆம் ஆண்டு அசாம் மாநிலத்தில், இந்தியாவின் முதல் எண்ணெய்க் கிணறு கண்டுபிடிக்கப்பட்டது.

8). தமிழில் உள்ள சிற்றிலங்கியங்கள் 96.



குடந்தை பரிபூரணன்.

## உழைப்போம் மழலைகளே!



உழைப்போம் உயர்வோம்
மழலைகளே
உணர்வோம் உழைப்பே
பெரிதென்றே!
தழைப்போம் உயர்வோம்
மழலைகளே
தளரா(து) உழைப்போம்
பெரிதென்றே!
மதிப்போம் உழைப்பை
மழலைகளே
மாண்பு உழைப்பே
பெரிதென்றே!
இதயம் வைப்போம்
உழவினிலே
இனிதாய்க் கொள்வோம்
நெல்மணியை!
உலகைக் காக்கும்
உழைப்பன்றோ
உலகைக் காக்கும்
உழவன்றோ!
கலையாய்க் காணும்
மழலைகளே
காட்சி நல்கும்
மழலைகளே!

முனைவர்
**இராம.வேதநாயகம்.**

## பூ என்ன பூ?



மலையிலே பூக்குமாம்
ஊதா நிறக் குறிஞ்சிப் பூ.

நீரிலே பூக்குமாம்
இளஞ்சிவப்பு தாமரைப் பூ.

செடியிலே பூக்குமாம்
வெள்ளை நிற தும்பைப் பூ.


கொடியிலே பூக்குமாம்
நீல நிற சங்குப் பூ.

மரத்திலே பூக்குமாம்
மஞ்சள் நிற கொன்றைப் பூ.

செல்லக் குட்டிப் பாப்பாவின்
அழகு தவழும் முகத்திலே
பூக்கும் பூ என்னவாம்?
முல்லை போன்ற சிரிப்பு.

**-கீர்த்தி**

## எங்கள் வீட்டுப் பாப்பாவுக்கு என்ன கோபம்?




பட்டாம்பூச்சி பிடிச்சுத்
தரணும்..
பட்டாம்பூச்சி பிடிச்சுத்
தரணும்..
பறக்கும் பூச்சி
பட்டாம்பூச்சி
பிடிக்கலாமோ...
கொஞ்சம் நேரம் ஆட்டம்
போடப் பட்டாம்பூச்சி
வேணும்.. வேணும்..
பாவம் பாவம்
பட்டாம்பூச்சி
பிடித்து வைத்தால்
பாவம்..
ஏன்? ஏன்? அம்மாவே?

உன்னை பிடித்து
வைத்தால்
அழுவேன் அம்மா
தானே?
ஆமாம் ஆமாம்
அம்மாவே..

பட்டாம்பூச்சி அம்மா
அழுவாள் பாவம் தானே..
ஆமாம் ஆமாம்
வேண்டாம் அம்மா..
சமத்து சமத்து செல்லமே
என் சர்க்கரைக் குட்டி
பாப்பாவே..

**ஹரணி** தஞ்சாவூர்-



மழையே
மழையே பெய்க
மண்ணும் நன்றாய்
செழிக்க..

மலரே மலரே மலர்க
மண்ணின் மணமாய்
வீசுக..

வயலே வயலே விளைக
மாந்தர் வறுமை ஒழிக..

நதியே நதியே நிறைக
நானிலம் பயன்பட
ஓடுக..

உயிரே உயிரே மகிழ்க
உள்ளம் பொங்க வாழ்க...

**ஹரணி**
**தஞ்சாவூர்-**

இந்த பகுதியில்
உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்
whatsapp No
8122664699

## 11 ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டி



ஆவடி, காமராஜர் நகர், ஆர்சிஎம் மேல்நிலைப் பள்ளியில், 11 ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகளை அமைச்சர் நாசர் வழங்கினார்.

## நாற்று நடும் போராட்டம்



திண்டுக்கல் மாவட்டம், சிலுக்குவார்பட்டி ஊராட்சியில் சாலையை சீரமைத்து தர வலியுறுத்தி, அப்பகுதி மக்கள் நாற்று நடும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## 405 பகுதி நேர செவிலியர்கள், 117 வட்டார சுகாதார மேற்பார்வையாளர்களுக்கு பதவி உயர்வு



பொதுசுகாதாரத்துறையில் 405 பகுதி நேர செவிலியர்கள், 117 வட்டார சுகாதார மேற்பார்வையாளர்களுக்கு பதவி உயர்வு ஆணைகளை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று வழங்கினார்.

## புரிந்துணர்வு ஒப்பந்தம்



கோவை கிருஷ்ணா பொறியியல் கல்லூரி, டிஜிட்டல் சிறப்பு நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டது.

## இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்



காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் திமுக செயலாளர்கள் மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் அன்பரசன் பேசினார்.

## திருப்பத்தூரில் 5-ம் ஆண்டு புத்தக திருவிழா



திருப்பத்தூரில் 5-ம் ஆண்டு புத்தக திருவிழா சிறப்பாக நடைபெற காரணமாக இருந்த 117 அரசு அலுவலர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களை கலெக்டர் சிவசவுந்திரவல்லி வழங்கினார்.

## ஒன்றிய மாவட்ட அளவிலான சதுரங்க போட்டி

**பனைக்குளம், நவ 10:** ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் ஊராட்சி ஒன்றியம் பனைக்குளம் பஹ்ரூதீன் தொடக்கபள்ளி பனைக்குளத்தை சேர்ந்த 4 மாணவ மாணவியருக்கு மதுரையில் நடைபெற்ற மாநிலஅளவிலான யோகாசன போட்டியில் பங்குபெற்று இரண்டாம் இடத்தை பிடித்த மாணவி சாதனாவுக்கு தமிழ்நாடு அரசு கரூரில் நடத்திய கலை திருவிழ 2025 மாநில அளவில் போட்டியில் பங்கேற்ற மாணவன் முஹம்மது அசாத் மாநில அளவில் இரண்டாம் இடம்பெற்ற மாணவி நூர் ராசி பாவிற்கும் ராமேஸ்வரம் மெய்யம்புளி இண்டர்நேசனல் சீனியர் செகண்டரி பள்ளியில் நடைபெற்ற மாவட்ட அளவிலான இரண்டாம்



போட்டியில் பங்கேற்று வெற்றி பெற்ற பள்ளியின் மாணவ மாணவியருக்கு பள்ளியின் இசை குழு சார்பில் வரவேற்பும் ஆசிரியர்கள் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் மற்றும் மண்டபம் வட்டார கல்வி அலுவலர் பாலாமணி ஆகியோருக்கு பாராட்டுக்கள் அளிக்கப்பட்டது தலைமை ஆசிரியர் அனைவரையும் வரவேற்றார் ஆசிரியர் மணிகண்டன் நிகழ்ச்சியை ஒருங்கினந்தார். இந்த நிகழ்ச்சியில் ஏராளமான னோர் கலந்து கொண்டனர்.

## 105-வது ஹெலிகாப்டர் பயிற்சி நிறைவு விழா



அரக்கோணம் ஐ.என்.எஸ். ராஜாளியில் நேற்று நடந்த 105-வது ஹெலிகாப்டர் பயிற்சி நிறைவு விழாவில் 16 கடற்படை விமானிகளுக்கு தங்கச் சிறகுகள் விருதுகள் வழங்கப்பட்டன.

## தார் சாலை பணிகளுக்கு பூமி பூஜை



கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் நபார்டு மற்றும் கிராம சாலைகள் திட்டத்தின் கீழ், ரூ..2.66 கோடி மதிப்பில் அமைக்கப்படவுள்ள தார் சாலை பணிகளுக்கு கலெக்டர் தினேஷ்குமார் முன்னிலையில் அமைச்சர் சக்கரபாணி நேற்று பூமி பூஜை செய்து பணிகளை துவக்கி வைத்தார்.

## தவெக வாக்குச்சாவடி கலந்தாய்வு கூட்டம்



நாகை மாவட்டம் கீழையூரில், தவெக வாக்குச்சாவடி கலந்தாய்வு கூட்டம் நடந்தது.

## வளர்ச்சி திட்ட பணி



நாமக்கல் மாவட்டத்தில் வளர்ச்சி திட்ட பணிகளை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் ஆசியாமரியம், ஆய்வு செய்தார். உடன் கலெக்டர் துர்காமூர்த்தி உள்ளார்.

## செங்கோட்டையனின் அண்ணன் மகன் அதிமுகவில் இணைந்தார்



செங்கோட்டையனின் அண்ணன் கே.ஏ. காளியப்பனின் மகன் செல்வம், நேற்று அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி முன்னிலையில் அதிமுகவில் இணைந்தார்.

## மாணவியர்களுக்கு வழங்கப்படும் உணவுகளின் தரம்குறித்து அமைச்சர் கோவி.செழியன் ஆய்வு



சென்னை காயிதே மில்லத் அரசு கலை கல்லூரியில் மாணவியர்களுக்கு வழங்கப்படும் உணவுகளின் தரம்குறித்து அமைச்சர் கோவி. செழியன் ஆய்வு செய்தார்.உயர்கல்வித்துறை செயலாளர் சங்கர், கல்லூரி கல்வி இயக்குநர் சுந்தரவல்லி உடன் இருந்தனர்.

## பதவி நீக்கம் செய்யக் கோரி மக்களவை சபாநாயகரிடம் தீர்மான நோட்டீஸ்



சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதனை பதவி நீக்கம் செய்யக் கோரி 120-க்கும் மேற்பட்ட எம்.பிக்கள் கையெழுத்திட்ட இம்பீச்மெண்ட் தீர்மான நோட்டீஸை மக்களவை சபாநாயகரிடம் நேற்று திமுக மற்றும் இந்தியா கூட்டணி எம்பிக்கள் வழங்கினர்.

## கலையரங்க கட்டிடத்தை கடம்பூர் ராஜீ எம்எல்ஏ திறந்து வைத்தார்



கயத்தாறு ஒன்றியம் சவலாப்பேரி ஊராட்சி நாகம்பட்டி கிராமத்தில் சட்டமன்ற உறுப்பினர் நிதியில் இருந்து கட்டப்பட்ட கலையரங்க கட்டிடத்தை கடம்பூர் ராஜீ எம்எல்ஏ திறந்து வைத்தார்.

## குழந்தைகள் நல குழுவுக்கு நியமிக்கப்பட்டுள்ள தலைவர் மற்றும் உறுப்பினர்கள்



ஈரோடு மாவட்டத்தில் குழந்தைகள் நல குழுவுக்கு நியமிக்கப்பட்டுள்ள தலைவர் மற்றும் உறுப்பினர்கள், கலெக்டர் கந்தசாமியை சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

## குடிமைப்பணிகள் முதல் நிலை தேர்வில் வெற்றி பெற்ற மாற்றுத்திறனாளி மாணவி காவியா



ஈரோடு மாவட்டத்தில் குடிமைப்பணிகள் முதல் நிலை தேர்வில் வெற்றி பெற்ற மாற்றுத்திறனாளி மாணவி காவியாவுக்கு மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக கலெக்டர் கந்தசாமி ரூ.50ஆயிரம் வழங்கினார்.

## பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவி



காஞ்சிபுரம் மாவட்டம் படப்பை வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள வட்டார கல்வி அலுவலகத்தை அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்து பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் செல்வப்பெருந்தகை எம்எல்ஏ, சாய்ராம் கல்வி குழுமத்தின் தலைவர் சாய்பிரகாஷ் லியோ முத்து, மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் படப்பை மனோகரன், குன்றத்தூர் ஒன்றியக் குழுத் தலைவர் சரஸ்வதி, துணைத் தலைவர் உமாமகேஸ்வரி உள்ளனர்.

## நீர் செறிவூட்டல் திட்டம்



திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டத்தில் 20 எண்ணிக்கையிலான குளம், குட்டைகள் மற்றும் தடுப்பணைகளுக்கு நீர் செறிவூட்டல் திட்டத்தினை அமைச்சர் சாமிநாதன் துவக்கி வைத்தார். உடன் கலெக்டர் மனிஷ் நாரணவரே உள்ளார்.

## பணிநியமன ஆணை



அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில் பணிக் காலத்தில் மறைந்த பணியாளரின் வாரிசுதாரருக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணையை அமைச்சர் சிவசங்கர் வழங்கினார்.

ரவுசு மணி

எதிர்பார்ப்புடன்
தொடங்கும்
நாள்
அனுபவத்துடன்
முடிவடைகிறது
இதுதான்
வாழ்க்கை



ராஜகோபாலன்.ஜே
சென்னை 18

## 'சான் சத்' விளையாட்டுத் திருவிழா



இளைய தலைமுறையினரின் விளையாட்டுத் திறனை அங்கீகரிக்கும் விதமாக நீலகிரி பாராளுமன்றத் தொகுதியில் மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் முயற்சியில் 'சான் சத்' விளையாட்டுத் திருவிழா நவம்பர் 21ம் தேதி தொடங்கியது. இதில் வெற்றி பெறுவோர் தேசிய, சர்வதேச மற்றும் ஒலிம்பிக் போட்டிகளுக்குத் தயார் செய்யப்படுவர். பல்வேறு விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றுள்ள வீரர் வீராங்கனைகளுக்கு இணை அமைச்சர் எல்.முருகன் வாழ்த்து தெரிவித்துள்ளார்..

## மாபெரும் மாட்டுவண்டி



புதுக்கோட்டை மச்சுவாடி பகுதியில் துணை முதல்வர் உதயநிதி பிறந்தநாளினை முன்னிட்டு மாபெரும் மாட்டுவண்டி,குதிரை வண்டி பந்தயம், மாராத்தான் மற்றும் சைக்கிள் பந்தய போட்டிகளை அமைச்சர்கள் ரகுபதி, மெய்யநாதன் கொடியசைத்து தொடங்கிவைத்தனர்.

# வேலைவாய்ப்பு கார்னர்

## 61 காலிப்பணியிடங்களை நிரப்ப டிஎன்பிஎஸ்சி அறிவிப்பு வெளியீடு




அரசு உதவி வழக்கு நடத்துநர் பணியிடங்களை நிரப்ப அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

தமிழக அரசு துறைகளில் காலியாக உள்ள பணியிடங்களை டிஎன்பிஎஸ்சி எனப்படும் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வு ஆணையம் நிரப்பி வருகிறது. அந்த வகையில், தற்போது அரசு உதவி வழக்கு நடத்துநர் பணியிடங்களை நிரப்ப அறிவிப்பு வெளியிட்டுள்ளது. இதன் விவரங்கள் வருமாறு:

தேர்வு நடத்தும் நிறுவனம்: தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் (டி.என்.பி.எஸ்.சி)

பணி நிறுவனம்: தமிழ்நாடு மின் விநியோக நிறுவனம் லிமிடெட்

காலி இடம்: 61

பதவி: அரசு உதவி வழக்கு நடத்துநர் (நிலை - 2)

கல்வி தகுதி: பி.எல். பட்டம் பெற்றிருக்க வேண்டும். வழக்கறிஞர் சங்கத்தில் உறுப்பினராக இருக்க வேண்டும். குற்றவியல் நீதிமன்றங்களில் குறைந்தது ஐந்து ஆண்டுகள் பணியாற்றி இருக்க வேண்டும்.

வயது: பிரிவுகளுக்கு ஏற்ப வயது வரம்பு மாறுபடும்.

தேர்வு முறை: தமிழ் தகுதித் தேர்வு, முதல் நிலைத்தேர்வு, மெயின் தேர்வு, ஆவண சரிபார்ப்பு.

விண்ணப்பிக்க கடைசி தேதி: 31-12-2025.

இணையதள முகவரி: https://tnpsc.gov.in/

# சுற்றுலா: அமைதி தேடுபவர்களுக்கு சொர்க்க பூமி வால்பாறை! (1)



மேற்கு தொடர்ச்சி மலையின் மடிப்புகளுக்கு மத்தியில் அடர்ந்த பசுமையான தேயிலை தோட்டங்கள் காப்பி தோட்டங்கள் சூழப்பட்டு அமைதியான நீல நிற நீர் தேக்கத்துடன் காணப்படுகிறது வால்பாறை பகுதி. கோவையிலிருந்து 100 கிலோமீட்டர் தொலைவிலும் பொள்ளாச்சியில் இருந்து அறுபது கிலோமீட்டர் தொலைவிலும் வால்பாறை உள்ளது. குறைந்த பட்ஜெட்டில் செல்லக்கூடிய சிறந்த மலை வாசஸ்தலமாகும். இயற்கையான சூழ்நிலை எங்கு பார்த்தாலும் கண்ணுக்கு குளிர்ச்சியான பகுதிகள் மாசுபடாத அமைதியான சூழ்நிலை என நம்மை அழைத்துச் செல்கிறது.

நீர்த்தேக்கம் மட்டுமல்ல இயற்கையான காட்சிகள் வனவிலங்கு சரணாலயம் போன்றவை நம்மை வரவேற்கிறது. வால்பாறை கடல் மட்டத்திலிருந்து 3500 அடி உயரத்தில் உள்ளது. ஆண்டுமுழுவதும் இங்கு சுற்றுலாப் பயணிகள் வந்த வண்ணம் உள்ளனர்.

பொள்ளாச்சியில் இருந்து வால்பாறை செல்லும் 60 கிலோ மீட்டர் பகுதிகளில் எங்கு பார்த்தாலும் வளைந்து நெளிந்து செல்லும் பாதைகள் இருபுறமும் கண்ணை கவரும் இயற்கை காட்சிகள் இவற்றுடன் 40 கொண்டை ஊசி வளைவுகளை கொண்ட பாதைகள் என அனைத்தும் பிரம்மாண்டமாக உள்ளது. எங்கு பார்த்தாலும் தேயிலை தோட்டங்களும் காப்பி தோட்டங்களும் நிறைந்து காணப்படுகிறது.

மேகங்கள் தாழ்வாக இறங்கி நம்மை தொட்டு செல்கிறது. அதுவே ஒரு புதிய உலகத்தில் இருப்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்துகிறது. வால்பாறை பகுதியில் ஏகப்பட்ட சுற்றுலா இடங்களை காணலாம்.

### ஆழியார் அணை

வால்பாறை அடிவாரத்தில் ஆழியார் அணை பறந்து விரிந்து காணப்படுகிறது. மூன்று புறமும் மலைகளால் சூழப்பட்டு அடர்ந்த வனப்பகுதியில் இந்த நீர்த்தேக்கம் பறந்து விரிந்து காணப்படுகிறது. இங்குள்ள பூங்காக்களில் விதவிதமான வண்ணப் பூக்களை காணலாம். சிறுவர்களுக்கு பொழுதுபோக்காக ஒரு அழகிய பூங்கா உள்ளது. நீர்நிலைகளில் படகு சவாரி செய்யலாம். குரங்கு இனங்கள் பல வகையான பறவைகளை இங்கு பார்த்து மகிழலாம்.

### நல்ல முடி காட்சி முனை

அடர்ந்ததேயிலைதோட்டங்களின் நடுவில் அமைந்துள்ளது. முக்கியமான சுற்றுலா இடமாக உள்ளது. இங்கிருந்து மிக உயரமான ஆணை முடி சிகரத்தை இங்கிருந்து காணலாம். அருகிலுள்ள நீர்வீழ்ச்சிகளையும் பார்த்து மகிழலாம்.

### சோலையார் அணை

ஆசியாவின் மிகப்பெரிய அணையாக இந்த அணை கருதப்படுகிறது. அடர்ந்த வனப்பகுதிக்குள் பறந்து விரிந்து காணப்படுகிறது. அணையின் மீது நடந்து செல்வது ஒரு புதிய அனுபவமாக இருக்கும். வனத்துறையுடன் அனுமதி பெற்று இந்த அணைக்கட்டு பகுதியை பார்வையிடலாம்.

### சின்னக்கல்லார் அருவி

தென்னிந்தியாவில் அதிக மழை பெய்யக்கூடிய இடமாக இந்த இடம் உள்ளது. கம்பீரமான அருவி அடர்ந்த வனப்பகுதிக்குள் உள்ளது. இங்குள்ள தொங்குபாலத்தில் நின்று கொண்டு அருவியின் அழகை ரசிக்கலாம். இந்தப்பகுதி முழுவதும் ஈரப்பதத்துடன் காணப்படும். எதற்கும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

### ஆனைமலை புலிகள் காப்பகம்

வால்பாறைக்கு அருகில் உள்ள அடர்ந்த வனப்பகுதிக்குள் இந்த காப்பகம் உள்ளது. வனவிலங்குகளுக்கு சொர்க்க பூமியாக இந்த இடம் அமைந்துள்ளது. சிங்கவால் குரங்கு புலி சிறுத்தை யானை காட்டெருமை மான் கரடி மற்றும் பறவை இனங்கள் நிறைய உள்ளன. வனத்துறை நடத்தும் சபாரி மூலம் இந்த இடத்தை சுற்றி பார்க்கலாம்.

### கருமலை பாலாஜி கோவில்

அமைதியான சூழ்நிலையில் அமைந்துள்ள மிகப் பழமையான கோவிலாக உள்ளது. இந்தக் கோவில் கட்டிடக்கலைக்கு பேர் போனது. ஆன்மீகவாதிகள் சுற்றுலாப் பயணிகள் இங்கு அமர்ந்து தியானம் செய்கின்றனர். மன அமைதிக்கு ஏற்ற அமைதியான சூழ்நிலையில் அமைந்துள்ளதால் மனதிற்கு புத்துணர்ச்சி ஏற்படுகிறது.

## தமிழகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியும் சீர்கெட்டு உள்ளது: எடப்பாடி குற்றச்சாட்டு

**சென்னை, டிச.10:**

அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவில் கூறியிருப்பதாவது:-

தமிழ்நாட்டில் ஸ்டாலின் மாடல் ஆட்சியில் சட்டம் ஒழுங்கு பாதாளத்திற்கு சென்றிருப்பதை கடந்த 24 மணி நேரத்தில் வந்த செய்திகளே தெளிவாக உணர்த்துகின்றன. கும்பகோணம் அருகே பட்டீஸ்வரம் பள்ளி மாணவர்கள் இடையேயான மோதலில் தாக்கப்பட்ட பிளஸ்2 மாணவர் பரிதாபமாக உயிரிழப்பு. மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் எடை தராசால் அடித்து காய்கறி கடைக்காரர் கொலை. தென்காசியில் சொத்து தகராறில் விவசாயி வெட்டிப்படுகொலை.

சேலம் தோப்பூர் பகுதியில் தலை துண்டித்து கொல்லப்பட்ட இளைஞரின் தலையை தேடும் போலீசார். நாகர்கோவிலில் பட்டப்பகலில் சாலையில் நடந்து சென்ற பெண்ணை வழிமறித்து திருட முயற்சி என தொடர்ச்சியாக வரும் செய்திகள் அதிர்ச்சி அளிக்கின்றன. பள்ளி மாணவர்கள் இடையே படிப்பு தான் வளர வேண்டும். ஆனால், ஸ்டாலின் ஆட்சியில் வன்முறை போக்கு தான் அதிகரித்து வருகிறது. கொலை வரை நீண்டுள்ள இந்த மோதல் வெறியை கட்டுப்படுத்தத் தவறியதற்கு பொம்மை முதல்-அமைச்சரின் அரசு வெட்கப்பட வேண்டும். விவசாயி, வியாபாரி, பெண், இளைஞர் என யாருக்குமே பகல், இரவு என எந்த நேரத்திலும் துளி கூட பாதுகாப்பு இல்லாத ஒரு அவலத்தின் மொத்த உருவான ஆட்சியைத் தான் மு.க.ஸ்டாலின் நடத்தி வருகிறார். சட்டம்ஒழுங்கு சீர்கெட்டதால் தான் தமிழகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியும் சீர்கெட்டு உள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

## வால்பாறையில் மனிதவிலங்கு மோதலை தடுக்க சிறப்புக்குழு நியமனம்: 2 வாரத்தில் அரசுக்கு அறிக்கை தாக்கல்

**கோவை, டிச.10:**

கோயம்புத்தூர் மாவட்டம் ஆனைமலை புலிகள் காப்பகத்தில், வால்பாறை பகுதியில் உள்ள தனியார் நிறுவனத்திற்கு சொந்தமான ஐயர்பாடி தேயிலைத் தோட்டத்தில் 4 வீடுகள் கொண்ட தொழிலாளர் குடியிருப்பு அமைந்துள்ளது. அந்த குடியிருப்பில் அஸ்ஸாமைச் சேர்ந்த குடும்பத்தினர் ஒரு பெண் மற்றும் இரண்டு ஆண் குழந்தைகளுடன் வசித்து வருகின்றனர். கடந்த 6ந் தேதி தங்கள் வீட்டின் முன் விளையாடிக் கொண்டிருந்த சுமார் 5 வயதுடைய சிறுவன் சைபுல் ஆலம் என்பவரை அருகிலுள்ள தேயிலை புதர்களுக்குள் சிறுத்தை இழுத்துச் சென்றுள்ளது.

சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் உடனடியாக தோட்ட அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்ததின் பேரில் வால்பாறை வனத்துறையினர், சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். வனத்துறையினரின் தேடுதல் வேட்டையில் தேயிலை புதர்களில் இருந்து சிறுவனின் உடலை கண்டறிந்து, வால்பாறை அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்த சிறுவனின் குடும்பத்திற்கு தேவையான அனைத்து உதவிகளையும் வனத்துறை செய்து வருகிறது.

வால்பாறை பகுதியில் உள்ள தேயிலை தோட்ட எஸ்டேட் குடியிருப்புகளில் வனவிலங்குகளின் நடமாட்டத்தினால் பொதுமக்கள் பாதிக்கப்படுவதை தடுக்கும் பொருட்டு வனத்துறையினர், அனைத்து எஸ்டேட் பகுதிகளிலும், தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை தொடர்ந்து நடத்தி வருகின்றனர். கோவை மாவட்ட கலெக்டர் தலைமையில் எஸ்டேட் மேலாளர்களுடனும் விழிப்புணர்வு ஆலோசனைக் கூட்டங்களும் நடத்தப்பட்டு வருகின்றன. தோட்ட அதிகாரிகளுக்கு கீழ்க்காணும் வழிமுறைகளை பின்பற்று மாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது:- தொழிலாளர் குடியிருப்புகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் புதர்களை அகற்றி சுத்தமாக வைத்தல், தெளிவான நிலையை ஏற்படுத்த வீடுகளைச் சுற்றி விளக்குகள் அமைத்து, போதுமான வெளிச்சத்தை உறுதி செய்தல், மாலை நேரங்களில் குடியிருப்புவாசிகள் அதிக எச்சரிக்கையுடன் இருக்கவும், பாதுகாப்பை பலப்படுத்தவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக இந்த தோட்டத்தில் தொழிலாளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் இரண்டு வாரங்களுக்கு முன்பு நடத்தப்பட்டது. நீண்ட கால தடுப்பு நடவடிக்கை களை வலுப்படுத்த, குறிப்பாக புலிகள் காப்பக எல்லைக்கு வெளியே உள்ள எஸ்டேட் பகுதிகளில், தலைமை வனஉரியினக் காப்பாளரின் பரிந்துரையின் பேரில், கூடுதல் தலைமை முதன்மை தலைமை வனக்காப்பாளர் ராம சுப்பிரமணியன் தலைமையில், 5 உறுப்பினர்களைக் கொண்ட குழுவை அரசு அமைத்துள்ளது.

## நில அபகரிப்பு வழக்கில் மு.க.அழகிரி மேல் முறையீட்டு மனு: சுப்ரீம் கோர்ட் தள்ளுபடி

**புதுடெல்லி, டிச.10:**

நில அபகரிப்பு வழக்கு தொடர்பாக மு.க. அழகிரி தாக்கல் செய்த மேல் முறையீட்டு மனுவை சுப்ரீம் கோர்ட் தள்ளுபடி செய்தது.

மதுரை சிவரக்கோட்டையில் கோவிலுக்குச் சொந்தமான 4 சென்ட் இடத்தை அபகரித்ததாக கூறி முன்னாள் மத்திய அமைச்சர் மு.க. அழகிரி உள்பட 7 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கை விசாரித்த சென்னை ஐகோர்ட், வழக்கை எதிர்கொள்ள வேண்டும் என உத்தரவு பிறப்பித்திருந்தது.

இந்த உத்தரவை எதிர்த்து மு.க. அழகிரி சுப்ரீம் கோர்ட்டில் மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கை விசாரித்த சுப்ரீம் கோர்ட், மு.க. அழகிரியின் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது. விசாரணைக்காக கோர்ட்டில் உள்ள வழக்கை நீதிபதி ஏன் எதிர்கொள்ளக் கூடாது எனவும் அழகிரி தரப்புக்கு நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.

## 23 சட்டமன்றத் தொகுதிகளில் ரூ.69 கோடியில் சிறு விளையாட்டு அரங்கங்கள்: ஸ்டாலின் அடிக்கல்

**சென்னை, டிச.10:**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் தமிழ்நாட்டின் 23 சட்டமன்றத் தொகுதிகளில் 69 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 23 முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கங்கள் கட்டுமானப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

தற்போது மூன்றாவது கட்டமாக 44 சட்டமன்றத் தொகுதிகளில் முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கங்கள் அமைத்திட மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அந்த வகையில் கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் மற்றும் தளி, தஞ்சாவூர் மாவட்டம் - பேராவூரணி, திருவையாறு மற்றும் ஒரத்தநாடு, கோயம்புத்தூர் மாவட்டம் - கிணத்துக்கடவு, திருச்சி மாவட்டம் மணப்பாறை, விழுப்புரம் மாவட்டம் - செஞ்சி, திண்டிவனம் மற்றும் திருக்கோவிலூர், சென்னை மாவட்டம் - மதுரவாயல், திரு.வி.க.நகர் மற்றும் பெரம்பூர், விருதுநகர் மாவட்டம் திருச்சுழி மற்றும் ராஜபாளையம், காஞ்சிபுரம் மாவட்டம்- திருப்பெரும்புதூர், திருவாரூர் மாவட்டம் நன்னிலம் மற்றும் திருத்துறைபூண்டி, கரூர் மாவட்டம் குளித்தலை, செங்கல்பட்டு மாவட்டம் ஆலந்தூர், கன்னியாகுமரி மாவட்டம் - கிள்ளியூர், சேலம் மாவட்டம் - சங்ககிரி மற்றும் எடப்பாடி சட்டமன்ற தொகுதிகளிலும், என மொத்தம் 23 சட்டமன்றத் தொகுதிகளில் 69 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கங்கள் அமைப்பதற்கு முதலமைச்சர் அடிக்கல் நாட்டினார்.


முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கில் தடகளம், கால்பந்து, கூடைப்பந்து, கையுந்துபந்து, கபாடி மற்றும் அந்தந்த பகுதிகளில் உள்ள பிரபலமான விளையாட்டுகள் உட்படகுறைந்தபட்சம் ஐந்து முக்கியவிளையாட்டுக்களுக்கான வசதிகளுடன் இவ்விளையாட்டரங்கம் அமைக்கப்பட உள்ளது.

இந்நிகழ்வில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் அன்பில்மகேஸ்பொய்யாமொழி, டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ரூ.99 கோடி செலவில் மேம்படுத்தப்பட்ட மீன்பிடி துறைமுகங்கள், மீன் இறங்குதளம், மீன் விதைப் பண்ணை: ஸ்டாலின் திறந்தார்

**சென்னை, டிச.10:**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், இன்று தலைமைச் செயலகத்தில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் 98 கோடியே 92 லட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட மீன்பிடி துறைமுகங்கள், மீன் இறங்குதளம் மற்றும் புதிய மீன் விதைப் பண்ணை ஆகியவற்றை திறந்து வைத்தார்.

கன்னியாகுமரி மாவட்டம், தேங்காப்பட்டணம் மீன்பிடி துறைமுகத்தில் 60 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ள கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பெரியநாயகி தெரு மீனவ கிராமத்தில் 26 கோடி ரூபாய் செலவில் தூண்டில் வளைவுடன் மேம்படுத்தப்பட்ட மீன் இறங்குதளம், மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடியில் 10 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட மீன்பிடி துறைமுகம், தென்காசி மாவட்டம், கடானா கிராமத்தில் 2 கோடியே 92 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள அரசு மீன் விதைப் பண்ணை; மொத்தம் 98 கோடியே92 லட்சம் ரூபாய் செலவில் 4 முடிவுற்ற பணிகளை முதலமைச்சர் திறந்து வைத்தார்.

தென்காசி மாவட்டம், கடானா அரசு மீன் விதைப் பண்ணையில் மீன் வளர்ப்பு தொட்டிகள் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட்டதால் வருடத்திற்கு 5 இலட்சம் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்து உள்நாட்டு மீன்வளத்தை உயர்த்த இயலும்.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மீன்வளத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் ந.கௌதமன், மீனவர் நல வாரியத் தலைவர் அ. ஜோசப் ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், மீனவர் நலத்துறை செயலாளர் என். சுப்பையன், மீனவர் நலத்துறை இயக்குநர் கே.வி.முரளிதரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# 20-ந் தேதி திருமணம்... போட்டோ சூட் எடுக்க சென்ற மணமக்கள்... விபத்தில் பலி!



**பெங்களூரு, டிச.10:**

கரியப்பாவுக்கும், கவிதாவுக்கும் திருமணம் நடத்த 2 பேரின் பெற்றோரும் முடிவு செய்தார்கள்.

கர்நாடக மாநிலம் கொப்பல் மாவட்டம் கனுமனகட்டே கிராமத்தைச் சேர்ந்தவர் கரியப்பா மடிவாளா (வயது 26). இவருக்கும், கொப்பல் மாவட்டம் காரடகி தாலுகா முஸ்டூரு கிராமத்தை சேர்ந்த கவிதா (19) என்பவருக்கும் கடந்த 4 மாதங்களுக்கு முன்பு, இருவரின் பெற்றோரும் திருமணம் பேசி முடிவு செய்தார்கள். கொப்பல் டவுனில் வருகிற 20-ந் தேதி கூட்டு திருமணம் நடைபெற உள்ளது.

அப்போது கரியப்பாவுக்கும், கவிதாவுக்கும் திருமணம் நடத்த 2 பேரின் பெற்றோரும் முடிவு செய்தார்கள். அதே நேரத்தில் கரியப்பாவின் அண்ணன் ரமேசுக்கும், அதேநாளில் திருமணம் செய்யவும் தீர்மானிக்கப்பட்டு இருந்தது. திருமணத்திற்கு இன்னும் 2 வாரங்களே இருந்ததால், கரியப்பா, கவிதா ஆகியோர் திருமணத்துக்கு முந்தைய 'போட்டோ சூட்' நடத்துவதற்கு முடிவு செய்தார்கள்.

ஏனெனில் கூட்டு திருமணம் என்பதால், அதற்கு முன்பே பல்வேறு இடங்களுக்கு சென்று போட்டோ சூட் நடத்தி விடலாம் என்பது அந்த ஜோடியின் முடிவாகும். இதற்கு 2 பேரின் குடும்பத்தினரும் சம்மதம் தெரிவித்தார்கள். அதைத்தொடர்ந்து, நேற்று முன்தினம் பல்லாரி மாவட்டம் ஒசப்பேட்டே, உம்னாபாத் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு மோட்டார் சைக்கிளில் சென்று விதவிதமாக போஸ் கொடுத்து கரியப்பாவும், கவிதாவும் போட்டோ எடுத்து மகிழ்ந்தனர்.

இந்த மகிழ்ச்சி அவர்களுக்கு நீண்ட நேரம் நீடிக்கவில்லை. 'போட்டோ சூட்' எடுத்து முடிந்ததும் வருங்கால மனைவியை, அவரது வீட்டில் கொண்டுபோய் விடுவதற்காக தனது மோட்டார் சைக்கிளில் கரியப்பா அழைத்து சென்றார். நேற்று முன்தினம் இரவு கங்காவதி அருகே சிக்கபெனகல் கிராமம் வழியாக 2 பேரும் மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தனர்.

அப்போது சாலையோரம் பழுதாகி ஒரு லாரி நின்று கொண்டிருந்தது. அதையடுத்து மோட்டார் சைக்கிளை, நடுரோட்டில் ஓட்டியபடி கரியப்பா வந்தார். அந்த சந்தர்ப்பத்தில் எதிரே வந்த மற்றொரு லாரி, எதிர்பாராத விதமாக கரியப்பாவின் மோட்டார் சைக்கிள் மீது பயங்கரமாக மோதியது. லாரி மோதிய வேகத்தில் மோட்டார் சைக்கிளில் இருந்து கரியப்பாவும், கவிதாவும் தூக்கி வீசப்பட்டனர். இதில், தலையில் பலத்தகாயம் அடைந்த கவிதா சம்பவ இடத்திலேயே பலியானார்.

ஆஸ்பத்திரிக்கு செல்லும் வழியில் கரியப்பாவின் உயிரும் பிரிந்தது. இதனால் கரியப்பா, கவிதா ஆகியோரின் இல்லற வாழ்க்கை கனவு தகர்ந்தது. இதை அறிந்த அவர்களது குடும்பத்தினர் கதறி அழுதனர். மேலும் சோகத்தில் மூழ்கி உள்ளனர். திருமண உற்சாகத்தில் இருந்த அவர்கள் பதறி அடித்துக் கொண்டு சம்பவ இடத்துக்கு வந்தனர். அப்போது கரியப்பா மற்றும் கவிதா ஆகியோரின் உடல்களை பார்த்து அவர்களது பெற்றோரும், குடும்பத்தினரும் கதறி துடித்தனர்.

அந்த காட்சி கல்நெஞ்சையும் உருக்குவதுபோல் இருந்தது. இதுகுறித்து அறிந்த கங்காவதி புறநகர் போலீசார் விரைந்து வந்து கரியப்பா மற்றும் கவிதா ஆகியோரின் உடல்களை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக மாவட்ட அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இதுபற்றி போலீசார் வழக்குப்பதிவு செய்து லாரி டிரைவரை வலைவீசி தேடிவருகிறார்கள்.

இல்லறவாழ்க்கையில் இணைய பல்வேறு கனவுகளுடன் போட்டோ சூட் நடத்தி முடித்த மணமக்கள் விபத்தில் சிக்கி பலியானது அப்பகுதி மக்களிடையே சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. தற்போது அவர்கள் எடுத்து கொண்ட புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் பரவி வைரலாகி வருகிறது.

## தொழில்நுட்ப / அறிவியல் செய்திகள்

# தசைகளை தூண்டி கொழுப்பை எரிக்கும் மாத்திரை



உடல் எடை குறைப்பு சிகிச்சையில் இப்போதுள்ள முறைகளை தலைகீழாக மாற்றக் கூடிய ஒரு புதிய மருந்து வந்துள்ளது.

சுவீடனின் கரோலி ன்ஸ்கா நிலையமும் ஸ்டாக்ஹோம் பல்கலை ஆய்வாளர்களும் இதை உருவாக்கியுள்ளனர்.


தற்போது சந்தையில் பிரபலமாக உள்ள சில மருந்துகள், பசி உணர்வை கட்டுப்படுத்தி, உட்கொள்ளும் உணவின் அளவை குறைப்பதன் வாயிலாக எடையைக் குறைக்கின்றன.

ஆனால், இந்த புதிய மருந்து பசியை அடக்குவதில்லை. அதற்குப் பதிலாக, எலும்போடு இணைந்துள்ள 40 சதவீத தசைகளின் வளர்சிதை மாற்றத்தைத் துாண்டிவிடுகிறது. இதனால், தசைகள் வலுவிழக்காமல் பாதுகாக்கப்படுவதுடன், உடலில் உபரியாக உள்ள கொழுப்பு மட்டும் எரிக்கப்படுகிறது.

இதன் முதற்கட்ட சோதனைகளில், உணவுக் கட்டுப்பாடின்றியே ரத்த சர்க்கரை அளவு சீராவதும், கொழுப்பு கரைவதும் உறுதி செய்யப்பட்டுள்ளது. வழக்கமான எடை குறைப்பு மருந்துகளால் ஏற்படும் தசை இழப்போ, உடல் பலவீனமோ இதில் ஏற்படுவதில்லை.

மூளை அல்லது குடலை ஏமாற்றி பசியைக் குறைப்பதற்குப் பதிலாக, உடலின் 'கலோரி எரிக்கும் இயந்திரமான' தசைகளை நேரடியாகச் செயல்பட வைப்பதே இந்த மருந்தின் உத்தி. மருத்துவப் பரிசோதனைகளில் இது வெற்றி பெற்றால், உடல் மெலிவதோடு மட்டுமல்லாமல் வலிமையாகவும் இருக்க உதவும் அரிய சிகிச்சையாக இது அமையும்.

# தமிழகம், மேற்கு வங்க சட்டசபை தேர்தல்: தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி உறுதி: அமித்ஷா



**அகமதாபாத், டிச.10:**

அடுத்த ஆண்டு நடைபெற உள்ள சட்டசபை தேர்தலில் மேற்கு வங்கம் மற்றும் தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெறும் என மத்திய அமைச்சர் அமித்ஷா தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலத்தில் பல்வேறு அரசு திட்டங்களை தொடங்கி வைத்து, அவர் கூறியதாவது:

2014 மக்களவைத் தேர்தல் தொடங்கி தற்போது வரை (2025) பாஜக தொடர் வெற்றிகளைப் பெற்று வருகிறது. 2024 மக்களவை தேர்தல் வெற்றியின் மூலம் தொடர்ந்து மூன்றாவது முறையாக பிரதமர் ஆனார் நரேந்திர மோடி. இது பல ஆண்டுகளுக்குப் பின்னர் படைக்கப்பட்ட சாதனையாகும்.

பிரதமர் மோடியின் தலைமையிலான ஆட்சியில், இந்திய தேசம் அனைத்து துறைகளிலும் வளர்ச்சி கண்டு, உலக அளவில் சிறந்த நாடாக திகழும் என்ற நம்பிக்கையை மக்கள் கொண்டுள்ளனர்.

எதிர்க்கட்சிகளுக்கு தலைவர்களோ அல்லது கொள்கைகளோ இல்லை. தேசத்தின் எந்தப் பகுதியிலும் அவர்கள் மக்களால் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. இந்த மேடையில் இருந்து மம்தா பானர்ஜி மற்றும் ஸ்டாலினுக்கு ஒன்றை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பீகாரை தொடர்ந்து மேற்கு வங்கத்திலும், தமிழகத்திலும் தேசிய ஜனநாயக கூட்டணி அமோக வெற்றி பெற்று திருப்புமுனையை ஏற்படுத்தும். அதற்கு தயாராக இருங்கள்.

எதிர்வரும் தேர்தல் முடிவுகள் வரட்டும். மேற்கு வங்கத்தில் திரிணமூல் காங்கிரஸும், தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகமும் துடைத்தெறியப்படும். இவ்வாறு அமித்ஷா கூறினார்.

# காட்டு வழி பயணம் வேண்டாம்: ஐயப்ப பக்தர்களுக்கு அறிவுறுத்தல்



**சபரிமலை, டிச.10:**

கேரள ஐகோர்ட்டு உத்தரவின் பேரில், சபரிமலையில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், நேற்று சன்னிதானத்தில் கூடுதல் கலெக்டர் அருண் தலைமையில், உயர் அதிகாரிகளின் ஆய்வு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்துக்கு பின் அவர் கூறியதாவது:-

சபரிமலையில், தரிசனத்துக்கான ஆன்லைன் முன்பதிவு, உடனடி தரிசன முன்பதிவு தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. இதனால் பக்தர்கள் சிரமம் இன்றி தரிசனம் செய்து வருகிறார்கள். கூட்ட தெரிசலை தவிர்க்க பக்தர்கள் முன்பதிவு செய்த நாளிலேயே தரிசனத்தை முடித்து கொள்ள வேண்டும்,

சபரிமலை தரிசனத்துக்கு வரும், பெண்கள், குழந்தைகள், நோயாளிகள், வயதானவர்கள் பாரம்பரிய காட்டு வழி பயணத்தை தவிர்த்த வேண்டும். அவர்கள் அனைவரும் நிலக்கல்-பம்பை வழியாக, சபரிமலைக்கு வருவது சிறந்தது, யானை, சிறுத்தை உட்பட வன மிருகங்களின் நடமாட்டம் இந்த வனப்பகுதிகளில் அதிக அளவில் இருக்கும் என்பதால், பாதுகாப்பு கருதி இந்த எச்சரிக்கை விடப்படுகிறது. இந்த வழிகளில் வனத்துறை, தீயணைப்பு மீட்பு படையினர் 24 மணி நேரமும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு உள்ள போதிலும் எச்சரிக்கை தேவை. இவ்வாறு அவர் கூறினார்.

# சீனிவாசமங்காபுரம் கோவிலில் வைகுண்ட ஏகாதசி, துவாதசி விழாக்கள்: 30, 31-ந்தேதி நடக்கிறது



**திருமலை, டிச.10:**

வைகுண்ட ஏகாதசி நாளில் அதிகாலை 2.30 மணியில் இருந்து மாலை 4 மணி வரை பக்தர்கள் இலவச தரிசனத்தில் அனுமதிக்கப்படுவார்கள்.

திருமலை-திருப்பதி தேவஸ்தானம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

திருப்பதியை அடுத்த சீனிவாசமங்காபுரத்தில் உள்ள கல்யாண வெங்கடேஸ்வரசாமி கோவிலில் வருகிற 30-ந்தேதி வைகுண்ட ஏகாதசி, 31-ந்தேதி வைகுண்ட துவாதசி விழாக்கள் நடக்கின்றன. அதையொட்டி சொர்க்கவாசல் திறக்கப்படுகிறது. இந்த விழாக்களை முன்னிட்டு கோவிலில் சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

30-ந்தேதி வைகுண்ட ஏகாதசி அன்று தனுர் மாத கைங்கர்யம், தோமாலசேவை, கொலு, பஞ்சாங்க சிரவணம் ஆகிய நிகழ்ச்சிகள் நடக்கின்றன. அதிகாலை 2.30 மணியில் இருந்து மாலை 4 மணி வரை பக்தர்கள் இலவச தரிசனத்தில் அனுமதிக்கப்படுவார்கள்.

அதைத்தொடர்ந்து மாலை 4 மணியில் இருந்து மாலை 5 மணி வரை இரவு சடங்குகள் நடக்கிறது. மாலை 5 மணியில் இருந்து இரவு 9 மணி வரை மீண்டும் பக்தர்களுக்கு சாமி தரிசன அனுமதி வழங்கப்படும்.

31-ந்தேதி வைகுண்ட துவாதசியை முன்னிட்டு தனுர் மாத கைங்கர்யங்கள், தோமால சேவை, கொலு மற்றும் பஞ்சாங்க சிரவணம் ஆகியவை அதிகாலை 4 மணியில் இருந்து அதிகாலை 5.30 மணி வரை நடக்கிறது.

சக்கர ஸ்நானம் காலை 8.30 மணியில் இருந்து காலை 9.30 மணி வரை நடக்கும் திருச்சி உற்சவம் காலை 6 மணியில் இருந்து காலை 7 மணி வரை நடக்கிறது.

2026-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ந்தேதி ஆங்கில புத்தாண்டு தினத்தன்று, தனுர் மாத கைங்கர்யங்கள், தோமால சேவை, கொலு மற்றும் பஞ்சாங்க சிரவணம் ஆகியவை மதியம் 1 மணியில் இருந்து அதிகாலை 4 மணி வரை நடக்கிறது. அதன்பிறகு பக்தர்களுக்கு இலவச தரிசனம் அதிகாலை 4 மணியில் இருந்து மாலை 4 மணி வரை அனுமதிக்கப்படும்.

இரவு சடங்குகள் மாலை 4 மணியில் இருந்து மாலை 5 மணி வரை நடக்கும். அதன் பிறகு மீண்டும் மாலை 5 மணியில் இருந்து இரவு 8.30 மணி வரை இலவச தரிசனத்தில் பக்தர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

இந்த 2 முக்கிய விழாக்களை முன்னிட்டு திருப்பதி தேவஸ்தானத்தின் இந்து தர்ம பிரசார பரிஷத் மற்றும் அன்னமாச்சாரியார் திட்டத்தின் கீழ் கோவில் வளாகத்தில் பக்தி மற்றும் ஆன்மிக இசை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## க்ரைம் கார்னர்

### காவலரைத் தாக்கிய தவெக நிர்வாகி கைது

**தருமபுரி, டிச.10:**

தருமபுரி பாலக்கோடு தக்காளி மார்க்கெட் அருகே புதிதாகத் திறக்கப்பட்ட மனமகிழ் மன்றம் என்ற மது பான பாரை அகற்றக் கோரி தவெகவினர் நடத்திய போராட்டத்தில் பதற்றம் ஏற்பட்டது. இந்த போராட்டத்தின்போது தவெகவினர் மதுபானக் கடையின் நுழைவாயிலில் கயிறு கட்டி காவல்துறையினரை மீறி உள்ளே நுழைந்தனர். இதையடுத்து ஏற்பட்ட தள்ளுமுள்ளுவில் தவெக தொண்டர் ஒருவர் காவலரின் கையைக் கடித்த சம்பவம் வீடியோவாகப் பதிவாகி சமூக வலைதளங்களில் பரவியது. இந்த சம்பவத்தில் ஜெமினி என்பவர் உட்பட ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மொத்தம் 12 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பாலக்கோடு காவல்துறை தெரிவித்துள்ளது.

### போதையில் கார் ஓட்டி வாகனங்களை சேதப்படுத்தியவர் கைது

**சென்னை, டிச.10:**

கொளத்தூர் ஜவகர் நகரைச் சேர்ந்த அசோக் (28) என்பவர் சனிக்கிழமையன்று போதையில் கார் ஓட்டி, கொளத்தூர் பேப்பர் மில்ஸ் சாலை, திருவீதி அம்மன் சாலை, காமராஜர் சாலை மற்றும் பெரியார் நகர் வழியாகத் தறிகெட்டுச் சென்று பைக்கில் சென்றவர் மீதும் மோதியதுடன், மேலும் 5 வாகனங்களை இடித்து சேதப்படுத்தினார். இந்த சம்பவத்தில், அயனாவரம் பகுதியில் வைத்து போலீசாரால் கைது செய்யப்பட்டார். இதுகுறித்து கொளத்தூர் போக்குவரத்து புலனாய்வு போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

### தவெக சேலம் மாவட்டச் செயலரிடம் சிபிஐ விசாரணை

**கரூர், டிச.10:**

கரூர் வேலுச்சாமிபுரத்தில் கடந்த செப்.27 ஆம் தேதி தவெக பிரச்சாரத்தின்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக சிபிஐ விசாரணை தீவிரமடைந்துள்ளது. உச்ச நீதிமன்றம் நியமித்த ஓய்வுபெற்ற நீதிபதி அஜய் ரஸ்தோகி தலைமையிலான குழுவின் மேற்பார்வையில் ஐபிஎஸ் அதிகாரி பிரவீன்குமார் தலைமையில் சிபிஐ அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். அக்.19 ஆம் தேதி முதல் கரூர் பொதுப் பணித்துறை சுற்றுலா மாளிகையில் தங்கி விசாரணை மேற்கொண்டு வரும் குழு, திங்கள்கிழமை தவெக சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் வெங்கடேசன் தலைமையில் 5 பேர் சிபிஐ அதிகாரிகள் முன் ஆஜராகி விசாரிக்கப்பட்டனர். உடற்கூராய்வு மேற்கொண்ட மருத்துவர்கள் மற்றும் அவர்களின் உதவியாளர்களிடமும் சிபிஐ விசாரணை நடத்தியுள்ளது. உயிரிழந்த திண்டுக்கல் மாவட்டம் குஜிலியம்பாறையைச் சேர்ந்த சங்கரின் குடும்பத்தினரிடமும் விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

### வியாபாரியை மிரட்டிப் பணம் பறித்த இருவர் கைது

**சென்னை, டிச. 10:**

வில்லிவாக்கம் ராஜமங்கலம் பிரதான சாலையில் உணவகம் நடத்தி வருபவர் விஜய் (50). கடந்த டிசம்பர் 4-ஆம் தேதி, இவரது கடைக்கு வந்த இரண்டு நபர்கள், கத்தியைக் காட்டி அவரிடம் பணம் கேட்டு மிரட்டினர். அவர் பணம் கொடுக்க மறுத்த தால், இருவரும் விஜயைத் தாக்கிப் பணப் பெட்டியில் இருந்த பணத்தைப் பறித்துக்கொண்டு ஓடினர். இது குறித்து விஜய் ராஜமங்கலம் காவல் நிலையத்தினர் நட வடிக்கை எடுத்து வில்லிவாக்கத்தைச் சேர்ந்த ஜெயக்குமார் (27) மற்றும் பாஸ்கர் (33) ஆகியோர் கைது செய்தனர்.

### செங்கல் சூளைகளுக்கு ரூ.900 கோடி அபராதம்!

**கோவை, டிச.10:**

கோவையில் செயல்பட்டு வந்த செங்கல் சூளைகளுக்கு சுமார் ரூ.900 கோடி அபராதம் விதிக்க மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் பரிந்துரைத்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

கோவை மாவட்டம், சின்ன தடாகம், வீரபாண்டி, நஞ்சுண்டாபுரம், சோமையம்பாளையம், பன்னிமடை பகுதிகளில் செயல்பட்டு வந்த செங்கல் சூளைகளால், மலையடிவாரம் அருகேயுள்ள ஓடைகள், நீர்வழித்தடங்களில் சட்டவிரோதமாக சுமார் 1.10 கோடி கியூபிக் மீட்டர் அளவு மண் அள்ளப் பட்டதாக புகார் எழுந்தது. இதையடுத்து சட்டவிரோதமாக செயல்பட்டு வந்த 177 செங்கல் சூளைகளை மூட நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதைய டுத்து செங்கல் சூளைகள் மூடி சீல் வைக்கப்பட்டுள்ளன. இதற் கிடையே செங்கல் சூளைகளால் ஏற்பட்ட சூழல் பாதிப்பு களை அளவீடு செய்து அவர்களிடம் இழப்பீடு பெற சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் வழக்குத் தொடர்ந்தனர். இதைத் தொடர்ந்து நீதிமன்ற உத்தரவின் பேரில் தில்லியைச் சேர்ந்த ஆற்றல், வளங்கள் நிறுவனத்தின் (டெரி) நிபுணர்கள் சுமார் 4 மாதங்கள் ஆய்வு செய்து ரூ.3 ஆயிரம் கோடி அபராதம் விதிக்கலாம் என்று மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்துக்கு பரிந்துரைத்திருந்தனர். அபராதத் தொகை குறித்து மறுபரிசீலனை செய்ய மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் 3 முறை கோரிக்கை விடுத்திருந்த நிலையில், தற்போது திருத்தப்பட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத் துக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதன்படி, சூழல் பாதிப்புகளில் ஈடுபட்டதற்காக செங்கல் சூளைகளுக்கு சுமார் ரூ.900 கோடி அபராதம் விதிக்க பரிந் துரைக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையை மாசுக்கட்டுப் பாட்டு வாரியம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும் என்றும் அதன்படி சம்பந்தப்பட்ட செங்கல் சூளை உரிமையாளர்களி டம் இருந்து அபராதத் தொகையை வசூலிக்க நீதிமன்றம் உத் தரவிடும் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# நீதிபதி ஜிஆர் சுவாமிநாதனை தகுதி நீக்கம் செய்ய வேண்டும்: இந்தியா கூட்டணி எம்.பிக்கள் மனு

**புதுடெல்லி, டிச.10:**

சென்னை ஐகோர்ட்டு நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதனை பதவி நீக்கம் செய்யும் தீர்மான நோட்டீசை மக்களவை சபாநாயகரிடம் மனு அளிக்கப்பட்டுள்ளது.



திருப்பரங்குன்றம் மலையில் கல்தூணில் தீபம் ஏற்ற உத்தரவிட்ட ஐகோர்ட்டு நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் மீது நடவடிக்கை எடுக்கக்கோரும் தீர்மானத்தைநாடாளுமன்றத்தில் கொண்டுவர 'இந்தியா' கூட்டணி திட்டமிட்டு உள்ளது. சர்ச்சைக்குரியதிருப்பரங்குன்றம் மலையில் கார்த்திகை தீபம் ஏற்ற மதுரை ஐகோர்ட்டு நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் உத்தரவிட்டார். இதன்படி தீபம் ஏற்றச்சென்றபோது அங்கு பிரச்சினை ஏற்பட்டது. இந்த வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளது.

இதற்கிடையே, நீதிபதியின் தீர்ப்பில் விமர்சனங்கள் எழுந்துள்ளது. தி.மு.க., கம்யூனிஸ்டு உள்ளிட்ட கட்சிகள் இது தொடர்பாக ஆலோசனை நடத்தின. நாடாளுமன்றத்திலும் இந்த விவகாரம் பேசப்பட்டது. இந்த நிலையில் நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் மீது நடவடிக்கை எடுக்கக் கோருவது தொடர்பான தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் கொண்டு வர இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் திட்டமிட்டு உள்ளதாக தமிழக எம்.பி. ஒருவர் தெரிவித்தார்.

இந்த நிலையில்,சென்னை ஐகோர்ட்டு நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதனை பதவி நீக்கம் செய்யும் தீர்மான நோட்டீசை மக்களவை சபாநாயகரிடம் மனு அளிக்கப்பட்டுள்ளது.. தகுதி நீக்க தீர்மானம் கொண்டுவர, மக்களவையில் 100 உறுப்பினர்கள், மாநிலங்களவையின் 50 உறுப்பினர்கள் கையெழுத்திட வேண்டும், அந்த அடிப்படையில் திமுக சார்பில் மக்களவையில் இந்தியா கூட்டணி கட்சி உறுப்பினர்களின் கையெழுத்துகள் பெறப்பட்டுள்ளன.

## ரெயிலில் நூதன முறையில் கஞ்சா கடத்தல்: இளம்பெண் கைது

**திருச்சூர், டிச.10:**

ஓடும் ரெயிலில் இருந்து பயணி ஒருவர் 4 பிளாஸ்டிக் பாக்கெட்டுகளை ஜன்னல் வழியாக வெளியே வீசி உள்ளார்

கேரள மாநிலம் திருச்சூர் ரெயில் நிலையத்தில் இருந்து எர்ணாகுளம் நோக்கி ஒரு எக்ஸ்பிரஸ் ரெயில் சென்று கொண்டிருந்தது. எர்ணாகுளம் மாவட்டம் அங்கமாலி அருகே நெடுவன்னூர் பகுதியில் சென்ற போது, பயணி ஒருவர் 4 பிளாஸ்டிக் பாக்கெட்டுகளை ஜன்னல் வழியாக வெளியே வீசி உள்ளார். இதனால் சந்தேகம் அடைந்த சிலர், ரெயில்வே போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். அதன் பேரில் நெடும்பாசேரி போலீசார் அங்கு சென்ற போது, ரெயிலில் இருந்து வீசிய அந்த பாக்கெட்டுகளை இளம்பெண் ஒருவர் எடுத்து சென்றார்.

அவரை பிடித்து சோதனை செய்த போது, பிளாஸ்டிக் பாக்கெட்டுகளில் 8 கிலோ கஞ்சா இருப்பது கண்டறியப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணையில் அவர் ஒடிசா மாநிலத்தை சேர்ந்தஷாலினி (வயது 24) என்பதும், ரெயில் நிலையங்களில் போலீசார், கலால் துறையினர் சோதனை மேற்கொள்வதால் கஞ்சா கடத்தல்காரர்கள் நூதன முறையில் கடத்தியதும் தெரியவந்தது. அவரை போலீசார் கைது செய்தனர்.

## வணிக தலைநகரில் அதிகரிக்கும் சைபர் குற்றங்கள்

**மும்பை, டிச.10:**

இந்தியாவின் வணிக தலைநகரான மும்பையில் சைபர் குற்றங்கள் அதிகரித்துள்ளன. ஓடிபி முதல் போலி கார்டுகள் உருவாக்குவது வரை மும்பையில் கடந்த ஐந்து ஆண்டுகளில் 20 ஆயிரம் சைபர் குற்றம் சார்ந்த வழக்கு கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதில், பாதிக்கப்பட்டவர்கள் மொத்த மாக சுமார் 2,000 கோடி ரூபாய் வரை யிலான பணத்தை இழந்துள்ளனர். இதுவரை புகார் அளிக்கப்பட்டு மீட்கப் பட்ட பணத்தின் அளவு இழந்த தொகையு டன் ஒப்பிடுகையில் மிகச் சொற்பமான தொகையாகவே உள்ளது.

கடந்த ஐந்தாண்டுகளில் சுமார் 4,132 வழக்குகள் கிரெடிட், டெபிட் கார்டு மோசடிகள், ஏடிஎம் மோசடி, போலிக் கார்டுகளை உருவாக்குவது ஆகியவை உள்ளன. இது போன்ற குற்றங்களில் சுமார் 161.5 கோடி ரூபாயை மக்கள் இழந்துள்ளனர். இதே நேரத்தில் வெறும் 4.8 கோடி ரூபாய் மட்டுமே மீட்கப்பட்டுள் ளது. சிசிடிவி இருக்கும் இடங்களில் உள்ள கடைகளில் கார்டுகளை ஸ்வைப் செய்யும்போது, அதில் பதிவா கும் அட்டை எண் மற்றும் பின் எண் ஆகிய வற்றைக் கொண்டு கிரெடிட் அல்லது டெபிட் அட்டைகள் குளோனிங் செய் யப்பட்டு பணம் திருடுவதும் அதிகரித்தி ருப்பதாகக் கூறப்படுகிறது. பல மோசடிகள் குறித்து வங்கிகளி டம் புகார் அளிக்கப்பட்டாலும், அந்தப் பணப்பரிமாற்றங்களை வங்கிகள் ரத்து செய்து பணத்தைத் திரும்பப் பெறும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை. மோசடி நடந்து மூன்று நாள்களுக்குப் பின் புகார் அளித்தால் அந்த மோசடியில் வங்கிகள் எந்தப் பொறுப்பையும் ஏற்பதில்லை. எனவே, இதுபோன்ற மோசடிகளின்போது, வங்கிகள், பணப் பரிமாற்றத்தை திரும்பப் பெறும் நடவ டிக்கையில் ஈடுபட்டு, பாதிக்கப்பட்ட வர்களின் பணத்தைத் திரும்பப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பலரும் கோரிக்கை வைத்து வரு கிறார்கள்.

## இண்டிகோ விமான சேவை பாதிப்பு: நேற்றும் 450 விமானங்கள் ரத்து




**புதுடெல்லி, டிச.10:**

விமான விபத்துக்கள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை தவிர்க்க டெல்லி ஐகோர்ட்டு உத்தரவின் அடிப்படையில் விமான நிறுவனங்களுக்கு சிவில் விமான போக்குவரத்து துறை புதிய விதிகளை வகுத்தது. புதிய விதிகளை அமல்படுத்த 2 ஆண்டுகள் அவகாசம் வழங்கப்பட்டது. ஆனால், சிவில் விமான போக்குவரத்து துறை வகுத்த புதிய விதிகளை இண்டிகோ அமல்படுத்தவில்லை.

குறிப்பாக, குறைவான விமானிகள், பணியாளர்களுடன் சேவையை தொடர்ந்தது. இதனால், கடந்த 1ம் தேதி முதல் இண்டிகோ விமான சேவை கடும் பாதிப்பை சந்தித்து வருகிறது. போதிய விமானிகள் இல்லாத காரணத்தால் இண்டிகோ நிறுவனத்தின் உள்நாட்டு விமான சேவை பல ரத்து செய்யப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், நேற்று ஒரேநாளில் 450 இண்டிகோ விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. சென்னை, மும்பை, டெல்லி, பெங்களூரு என பல்வேறு நகரங்களுக்கான இண்டிகோ விமான சேவை ரத்து செய்யப்பட்டுள்ளது. இதனால், பயணிகள் கடும் அவதியடைந்துள்ளனர். அதேவேளை, இண்டிகோ விமான சேவை இன்னும் ஓரிரு நாட்களில் இயல்புநிலைக்கு திரும்பும் என்று விமான நிறுவனம் தெரிவித்துள்ளது.

## இண்டிகோ விமான சேவைகளை 5 சதவீதம் வரை குறைக்க உத்தரவு..!

**புதுடெல்லி, டிச.10:**

நாட்டின் முன்னணி தனியார் விமான நிறுவனமான இண்டிகோ, கடந்த 2-ந் தேதியில் இருந்து தனது சேவையில் குளறுபடிகளை சந்தித்து வருகிறது. விமானிகள் பணி நேரம் தொடர்பான மத்திய அரசின் புதிய விதிமுறைகளால் இந்த நிலை ஏற்பட்டது. நாள்தோறும் நூற்றுக்கணக்கான விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. இதனால், நாடு முழுவதும் விமான நிலையங்களில் பயணிகள் தவித்தனர்.

இதையடுத்து இந்த பிரச்சினையில் மத்திய அரசு தலையிட்டு, பயணிகளின் பரிதவிப்பை குறைக்க உடனடியாக விமான சேவைகளை சீரமைக்க உத்தரவிட்டது. நிலைமை சீராகும் வரை விமானிகளின் பணிநேர கட்டுப்பாடுகளை நிறுத்தி வைத்தது. அதேபோல இண்டிகோ நிறுவன விமானங்கள் ரத்து காரணமாக மற்ற விமானங்களின் டிக்கெட் கட்டணமும் பல மடங்கு உயர்ந்தது. இதை கட்டுப்படுத்த மத்திய அரசு கட்டண உச்சவரம்பை கொண்டு வந்தது.

இண்டிகோ நிறுவன விமானங்களின் செயல்பாடுகளில் சற்று முன்னேற்றம் ஏற்பட்டது. இண்டிகோ நிறுவனம் சனிக்கிழமை வரை விமான ரத்து மற்றும் தாமதத்தால் பாதிக்கப்பட்ட பயணிகளுக்கு ரூ.610 கோடி வரை திரும்ப கொடுத்து உள்ளதாக விமான போக்குவரத்து அமைச்சகம் கூறியுள்ளது.

இந்த நிலையில், இண்டிகோ விமான சேவைகளை 5 சதவீதம் வரை குறைக்க சிவில் விமான போக்குவரத்து இயக்குநரகம் உத்தரவிட்டுள்ளது.

தற்போதைய அட்டவணையின்படி, விமானங்கள் திறமையாக இயக்க தவறியதால் 5% சேவைகளை குறைத்து நாளை (10-ம் தேதி) மாலை 5 மணிக்குள் திருத்தப்பட்ட அட்டவணையை சமர்பிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் குறைக்கப்படும் சேவைகளை பிற விமான நிறுவனங்களுக்கு ஒதுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மத்திய அரசு இணையதளத்தில் 5.17 லட்சம் வக்பு சொத்துகள் பதிவேற்றம்

**புதுடெல்லி, டிச.10:**

வக்பு திருத்த சட்டத்தை நிறைவேற்றிய மத்திய அரசு, அனைத்து பதிவு செய்யப்பட்ட வக்பு சொத்துகளும் 'ஒருங்கிணைந்த வக்பு மேலாண்மை, அதிகாரமளித்தல், செயல்திறன் மற்றும் மேம்பாடு' (உமீது) போர்ட்டலில் 6 மாதங்களுக்குள் பதிவேற்றம் செய்ய வேண்டும் என அறிவித்து இருந்தது.



இந்த போர்ட்டல் கடந்த ஜூன் 6-ந்தேதி தொடங்கப்பட்ட நிலையில் டிசம்பர் 6-ந்தேதி வரை சொத்து பதிவேற்றத்துக்கு காலக்கெடு அளிக்கப்பட்டது. இந்த காலக்கெடுவை மேலும் நீட்டிக்க முடியாது என அரசும், சுப்ரீம் கோர்ட்டும் திட்டவட்டமாக தெரிவித்தன.

தற்போது இந்த காலக்கெடு முடிவடைந்த நிலையில், அது தொடர்பாக மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:-

உமீது போர்ட்டலில் 5,17,040 வக்பு சொத்துகள் பதிவேற்றம் செய்யப்பட்டு உள்ளன. அவற்றில் 2,16,905 சொத்துகள் நியமிக்கப்பட்ட ஒப்புதல் அளிப்பவர்களால் அங்கீகரிக்கப்பட்டன. இதில் அதிகபட்சமாக உத்தரபிரதேசத்தில் 92,830 சொத்துகள் பதிவேற்றப்பட்டு உள்ளன. அடுத்ததாக மராட்டியத்தில் 62,939 சொத்துகளும், கர்நாடகாவில் 58,328 சொத்துகளும் பதிவேற்றப்பட்டு உள்ளன.

மேற்கு வங்காளத்தில் 23,086 சொத்துகள் பதிவேற்றப்பட்டன. மொத்தம் 2,13,941 சொத்துகள் தயாரிப்பாளர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மேலும் காலக்கெடுவின்படி அவை பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. சரிபார்ப்பின் போது 10,869 சொத்துகள் நிராகரிக்கப்பட்டன.

இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டு உள்ளது.

# விளையாட்டு செய்திகள்

## இங்கிலாந்துக்கு எதிரான 2-வது டெஸ்ட் போட்டி: ஆஸ்திரேலியா அபார வெற்றி

**பிரிஸ்பேன், டிச.10:**

இங்கிலாந்துக்கு எதிரான 2-வது டெஸ்டிலும் ஆஸ்திரேலிய அணி அபார வெற்றி பெற்றது.

ஆஸ்திரேலியா - இங்கிலாந்து கிரிக்கெட் அணிகள் இடையிலான ஆஷஸ் 2-வது டெஸ்ட் போட்டி பகல்-இரவு மோதலாக (பிங்க் பந்து டெஸ்ட்) கடந்த 4-ந்தேதி பிரிஸ்பேனில் தொடங்கியது. இதில் முதல் இன்னிங்சில் முறையே இங்கிலாந்து 334 ரன்களும், ஆஸ்திரேலியா 511 ரன்களும் எடுத்தன. 177 ரன்கள் பின்தங்கிய நிலையில் 2-வது இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து 3-வது நாள் முடிவில் 6 விக்கெட்டுக்கு 134 ரன்களுடன் தத்தளித்தது. கேப்டன் பென் ஸ்டோக்ஸ் (4 ரன்), வில் ஜாக்ஸ் (4 ரன்) களத்தில் இருந்தனர்.

இந்த நிலையில் 4-வது நாளான நேற்று இங்கிலாந்து அணி 2-வது இன்னிங்சில் 75.2 ஓவர்களில் 241 ரன்களுக்கு ஆல்-அவுட் ஆனது. ஆஸ்திரேலிய தரப்பில் மைக்கேல் நேசர் 5 விக்கெட்டும், மிட்செல் ஸ்டார்க், ஸ்காட் போலன்ட் தலா 2 விக்கெட்டும் கைப்பற்றினர்.

பின்னர் 65 ரன் எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்குடன் 2-வது இன்னிங்சை ஆடிய ஆஸ்திரேலிய அணி 10 ஓவர்களில் 2 விக்கெட்டுக்கு 69 ரன்கள் சேர்த்து 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. முன்னதாக டிராவிஸ் ஹெட் 22 ரன்களிலும், மார்னஸ் லபுஸ்சேன் 3 ரன்னிலும் ஆட்டமிழந்தனர். இதுவரை 15 பகல்-இரவு டெஸ்டில் விளையாடியுள்ள ஆஸ்திரேலியா அதில் 14-ல் வெற்றி கண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரில் ஆஸ்திரேலியா 2-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. இவ்விரு அணிகள் மோதும் 3-வது டெஸ்ட் வருகிற 17-ந்தேதி அடிலெய்டில் தொடங்குகிறது.

## ஹாக்கி: இந்திய பெண்கள் வெற்றி

**சாண்டியாகோ, டிச.10:**

ஜூனியர் உலகக்கோப்பை ஹாக்கி, 9-16வது இடத்துக்கான போட்டியில் இந்திய பெண்கள் அணி 3-1 என, வேல்சை வீழ்த்தியது.

சிலியில், பெண்களுக்கான ஜூனியர் உலகக்கோப்பை ஹாக்கி 11வது சீசன் நடக்கிறது. 'சி' பிரிவு லீக் சுற்றில் நமீபியா, அயர்லாந்தை வீழ்த்திய இந்தியா, ஜெர்மனியிடம் தோல்வியடைந்து 2வது இடம் பிடித்தது. இதன் 9-16வது இடத்துக்கான போட்டியில் இந்தியா, வேல்ஸ் அணிகள் மோதின. இதில் இந்திய அணி 3-1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. இந்தியா சார்பில் ஹினா பானோ (14வது நிமிடம்), சுனேலிதா (24வது), இஷிகா (31வது) தலா ஒரு கோல் அடித்தனர். வேல்ஸ் அணிக்கு எலோயிஸ் (52வது நிமிடம்) ஆறுதல் தந்தார். இந்திய அணி, வரும் டிச. 10ல் நடக்கவுள்ள 9-12வது இடத்துக்கான போட்டியில் உருகுவே அணியை எதிர்கொள்கிறது.

## சாய் சுதர்சன் அசத்தல் சதம்: தமிழக அணி ஆறுதல் வெற்றி

**ஆமதாபாத், டிச.10:**

சையது முஷ்தாக் அலி டிராபி லீக் போட்டியில், சாய் சுதர்சன் சதம் விளாச தமிழக அணி 3 விக்கெட் வித்தியாசத்தில் சவுராஷ்டிராவை வீழ்த்தியது.

இந்திய கிரிக்கெட் போர்டு (பி.சி.சி.ஐ.,) சார்பில் சையது முஷ்தாக் அலி டிராபி ('டி-20') 18வது சீசன் நடக்கிறது. மொத்தம் 38 அணிகள் பங்கேற்கின்றன. நேற்று, ஆமதாபாத்தில் நடந்த 'டி' பிரிவு லீக் போட்டியில் தமிழகம், சவுராஷ்டிரா அணிகள் மோதின.

'டாஸ்' வென்ற சவுராஷ்டிரா அணி கேப்டன் ஜெய்தேவ் உனத்கட் 'பேட்டிங்' தேர்வு செய்தார். விஷ்வராஜ் ஜடேஜா (70), சம்மர் கஜ்ஜார் (66) கைகொடுக்க, சவுராஷ்டிரா அணி 20 ஓவரில் 7 விக்கெட்டுக்கு 182 ரன் எடுத்தது. தமிழகம் சார்பில் சிலம்பரசன் 3, இசக்கிமுத்து 2 விக்கெட் கைப்பற்றினர். சவாலான இலக்கை விரட்டிய தமிழக அணிக்கு துஷார் ரஹேஜா (1), ஷிவம் சிங் (2), கேப்டன் ஜெகதீசன் (5) ஏமாற்றினர். ரித்திக் ஈஸ்வரன் (29), சன்னி (30) ஓரளவு கைகொடுத்தனர். தனிநபராக அசத்திய துவக்க வீரர் சாய் சுதர்சன், 55 பந்தில் சதம் கடந்து அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றார்.

தமிழக அணி 18.4 ஓவரில், 7 விக்கெட்டுக்கு 185 ரன் எடுத்து ஆறுதல் வெற்றி பெற்றது. சாய் சுதர்சன் (101* ரன், 4X6, 10X4), சித்தார்த் (2) அவுட்டாகாமல் இருந்தனர். 'டி' பிரிவில் விளையாடிய 7 போட்டியில், 3 வெற்றி, 4 தோல்வி என, 12 புள்ளிகளுடன் தமிழக அணி 4வது இடம் பிடித்தது. ஜார்க்கண்ட் (28 புள்ளி), ராஜஸ்தான் (24) அணிகள் முதலிரண்டு இடம் பிடித்தன.

## பயிற்சியில் ஸ்மிருதி மந்தனா: இலங்கை தொடருக்கு 'ரெடி'

**புதுடில்லி, டிச.10:**

இந்திய கிரிக்கெட் வீராங்கனை ஸ்மிருதி மந்தனா 29, மத்திய பிரதேசத்தை சேர்ந்த பாலிவுட் இசையமைப்பாளர் பலாஷ் முச்சல் 30, திருமணம் சமீபத்தில் ரத்தானது. இக்கடினமான கால கட்டத்தில் இருந்து மீண்டு வர, சர்வதேச போட்டிகளின் மீது கவனம் செலுத்தி வருகிறார் ஸ்மிருதி.

இந்தியா வரவுள்ள இலங்கை அணி, ஐந்து போட்டிகள் கொண்ட 'டி-20' தொடரில் பங்கேற்கிறது. முதலிரண்டு போட்டிகள் விசாகப்பட்டினத்திலும் (டிச. 21, 23), கடைசி 3 போட்டிகள் திருவனந்தபுரத்திலும் (டிச. 26, 28, 30) நடக்கவுள்ளன. இத்தொடருக்கு தயாராக இந்திய துணை கேப்டன் ஸ்மிருதி மந்தனா வலைப்பயிற்சி மேற்கொண்டார். இதற்கான புகைப்படத்தை ஸ்மிருதியின் சகோதரர் ஷ்ரவன் மந்தனா, சமூகவலைதளத்தில் பதிவிட்டிருந்தார்.

# அமெரிக்காவில் இந்திய அரிசிக்கு இறக்குமதி வரி விதிக்க ட்ரம்ப் பரிசீலனை!

**வாஷிங்டன், டிச.10:**

இந்தியா, வியட்நாம், தாய்லாந்து உள்ளிட்ட நாடுகளில் இருந்து அரிசி இறக்குமதி செய்வது தங்களுக்கு இழப்பை ஏற்படுத்துவதாக அமெரிக்க விவசாயிகள் குற்றம்சாட்டிய நிலையில், அவற்றுக்கு இறக்குமதி வரி விதிப்பது குறித்து தனது அரசு பரிசீலித்து வருவதாக அந்நாட்டு அதிபர் டொனல்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.



வெள்ளை மாளிகையில் வேளாண் பொருட்கள் உற்பத்தியாளர்கள் உடனான வட்டமேசை விவாத கூட்டம் நடைபெற்றது. அப்போது விவசாயிகளுக்காக சுமார் 12 பில்லியன் டாலர்களை விடுவிப்பதாக அந்நாட்டு அதிபர் ட்ரம்ப் அறிவித்தார். அதன் பிறகு அவர் கூறியது: "அமெரிக்க உற்பத்தியாளர்களை வெளிநாட்டு இறக்குமதி கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பது எனது நோக்கம். இதை நான் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது இந்தியா, வியட்நாம், தாய்லாந்து உள்ளிட்ட நாடுகளில் இருந்து அதிகளவில் அரிசியை இறக்குமதி செய்வது அமெரிக்க விவசாயிகளுக்கு இழப்பை ஏற்படுத்துவதாக அறிந்தேன். நிச்சயம் அதை அதிகளவில் குவிப்பது கூடாது. அதில் நான் கவனம் செலுத்த வேண்டி உள்ளது. கனடாவில் இருந்து அதிகளவில் உரங்கள் இறக்குமதி ஆகின்றன. அதனால் தேவைப்பட்டால் கடுமையான வரிகளை விதிப்போம்" என ட்ரம்ப் தெரிவித்தார்.

பரஸ்பர வரிவிதிப்பு: அமெரிக்கப் பொருட்களுக்கு அதிக வரி விதிக்கும் நாடுகளுக்கு எதிராக பரஸ்பர வரிவிதிப்புக் கொள்கையை அமெரிக்கா கடை பிடிக்கும் என அதிபர் டொனால்டு ட்ரம்ப் அறிவித்தார்.

கனடா, மெக்சிகோ உட்பட உலகின் பல்வேறு நாடுகளுக்கும் கடும் இறக்குமதி வரிகளை விதித்துள்ளார். தனது இந்த முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்ததால், சீனா மீதான வரியை ட்ரம்ப் பல மடங்கு உயர்த்தினார். பின்னர், சீனாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி, வரி விகிதத்தை குறைத்தார்.

இந்தியாவுக்கு 50% வரி: இந்தியப் பொருட்களுக்கு ஏற்கெனவே 25 சதவீத வரி விதித்த ட்ரம்ப், ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை காரணம் காட்டி, கூடுதலாக 25 சதவீதம் வரியை விதித்து, இந்தியாவுக்கான வரியை 50 சதவீதமாக உயர்த்தினார். இதற்கு இந்தியா கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

ட்ரம்பின் வரிவிதிப்பு நடவடிக்கையால், இந்தியாவில் தொழில் துறைகடும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளது. தமிழகத்திலும் ஜவுளி, ஆடைகள், இயந்திரங்கள், ஆட்டோமொபைல், நகைகள், ரத்தினக் கற்கள், தோல் காலணிகள், கடல் பொருட்கள், ரசாயனங்கள் உள்ளிட்ட துறைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

## கம்போடியா - தாய்லாந்து மீண்டும் மோதல்

**தாய்லாந்து, டிச.10:**

தாய்லாந்து மற்றும் கம்போடியா நாடுகளின் எல்லைப் பகுதியில் இரு நாட்டு ராணுவத்தினருக்கும் இடையே மீண்டும் துப்பாக்கிச் சூடு நடந்துள்ளது. கம்போடியாதான் முதலில் தாக்கியது என தாய் லாந்தும், தாய்லாந்து தான் முதலில் தாக்குதல் நடத்தியது எனக் கம்போடியாவும் மாறி மாறி குற்றம் சாட்டி வருகின்றன. சில வாரங்களுக்கு முன் இரு நாடுகளுக்கும் இடையே போர் வெடித்த நிலையில் மலேசியா வில் வைத்து அமைதி உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆனால் தற்போது இரு நாடுகளுக்கும் இடையே மீண்டும் போர் பதற்றம் உருவாகியுள்ளது.

## அமெரிக்கா போரை தவிர்க்க வேண்டும்: வெனிசுலாவுக்கு ரஷ்யா ஆதரவு

வெனிசுலா மீது போர் தொடுப்பதை தவிர்க்குமாறு அமெரிக்க அரசை ரஷ்யா கேட்டுக் கொண் டுள்ளது. மேலும் ரஷ்யா வெனிசுலாவுக்கு ஆதரவாக இருப்பதாக அந்நாட்டின் துணை வெளியுற வுத்துறை அமைச்சர் செர்ஜி ரியப்கோவ் தெரிவித்துள்ளார். மேலும் கரீபியன் பகுதிகளில் பதற்றங்கள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. இது கரீபியன் பகுதியில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட வேண்டும் என்ற அமெரிக்காவின் திட்டத்துடன் தொடர்புடையது எனவும் அவர் கடுமையாக விமர்சித்துள்ளார்.

## மனிதாபிமான உதவிகள் செய்ய நிதி கேட்கும் ஐ.நா



உலகம் முழுவதும் போர்கள் மற்றும் வறுமையின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள 13.5 கோடி மக்களுக்கு உதவி செய்ய நிதி கேட்டு ஐ.நா அவை கோரிக்கை விடுத்துள்ளது. 2026 ஆம் ஆண்டு உதவி செய்ய சுமார் 2 லட்சத்து 97 ஆயிரத்து 353 கோடி ரூபாய் நிதி உதவி தேவைப்படுகிறது என ஐ.நா. தெரிவித்துள்ளது. காசா, உக்ரைன், சூடான், ஹைட்டி மற்றும் மியான்மர் போன்ற நாடுகளில் போர்களால் பாதிக்கப்பட்டுள்ள 8.7 கோடி மக்களுக்கு மட்டுமே 2 லட்சத்து 7 ஆயிரத்து 246 கோடி ரூபாய் தேவை எனவும் குறிப்பிட்டுள்ளது.

## இந்தோனேசியா வெள்ளப் பாதிப்பு : மறுசீரமைப்புக்கு 28 ஆயிரம் கோடி

இந்தோனேசியாவின் சுமத்ரா தீவில் சமீபத்தில் ஏற்பட்ட புயல், மழை வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் அந்நாடு மிக மோசமான பேரழிவை சந்தித்தது. இந்நிலையில் மறுசீரமைப்பு மற்றும் மீட்புப் பணிகளுக்காக 28 ஆயிரத்து 23 கோடி நிதி தேவைப்படும் என்று அந்நாட்டின் அதிகாரிகள் தெரிவித்துள் ளனர். இந்தோனேசியாவில் இயற்கைச் சீற்ற பாதிப்பில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 950 ஆக உயர்ந்துள்ளது. 274 பேர் காணாமல் போயுள்ளனர். இந்தப் பாதிப்பில் தெற்கு தாய்லாந்து மற்றும் மலேசியாவிலும் சுமார் 200 பேர் பலியாகியுள்ளனர்

## ஐரோப்பிய தலைவர்களை சந்திக்கும் ஜெலென்ஸ்கி

ரஷ்யாவுடனான போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அமெரிக்காவின் திட்டம் தொடர்பான கோப்புகளை உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி இன்னும் படிக்கவில்லை என்று டிரம்ப் குற்றம் சாட்டி இருந்தார். இந்நிலையில் ஐரோப்பிய நட்பு நாடுகளின் தலைவர்களைச் சந்திக்க ஜெலென்ஸ்கி இங்கிலாந்து சென்றுள்ளார். உக்ரைன்-அமெரிக்க அதிகாரிகளுக்கு இடையேயான பேச்சுவார்த்தை சனிக்கிழமை முடிவடைந்தது. அதில் எந்த முன்னேற்றமும் இல்லை. இந்நிலையில் அவர் ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களை சந்திக்கச் சென்றுள்ளார்.

## பாகிஸ்தானின் பகவல்பூரில் தீவிரவாதிகள் ஆலோசனை

**இஸ்லாமாபாத், டிச.10:**

ஜம்மு காஷ்மீரின் பஹல்காம் தாக்குதலில் லஷ்கர்-இ-தொய்பா அமைப்புக்கும் டெல்லி செங்கோட்டை கார் குண்டுவெடிப்பில் ஜெய்ஷ்-இ-முகமது அமைப்புக்கும் தொடர்பு இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் பாகிஸ்தானின் பகவல்பூரில் உள்ள ஜெய்ஷ்-இ-முகமது தலைமையகத்தில் இரு அமைப்பின் தீவிரவாதிகளும் கூடி ஆலோசனை நடத்தி உள்ளனர். பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடியாக இந்தியா மேற்கொண்ட ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையில் குண்டு வீசப்பட்ட இடங்களில் இதுவும் ஒன்றாகும்.

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள ராவல்கோட்டில் தீவிரவாத முகாம்கள் மீண்டும் கட்டப்பட்டு வருவதாகவும், இது ஆபரேஷன் சிந்தூர் தாக்குதலில் குறிவைக்கப்பட்ட மற்றொரு இடம் என்றும் புலனாய்வு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

டெல்லி கார் குண்டு வெடிப்புக்கு பிறகு, புதிய தாக்குதலுக்கு மற்றொரு தற்கொலைப் படையை ஜெய்ஷ்-இ-முகமது தயார்படுத்தி வருவதாக கடந்த மாதம் செய்தி வெளியானது.

செங்கோட்டை குண்டுவெடிப்பு விசாரணையில் கிடைத்த தகவலின்படி, நிதி திரட்டுதல் டிஜிட்டல் வழியே நடைபெறுவதாகவும், அதில் 'சடாபே' என்ற பாகிஸ்தான் செயலியும் அடங்கும் என்றும் புலனாய்வு வட்டாரங்கள் தெரிவித்தன. செங்கோட்டை கார் குண்டுவெடிப்புக்கு சில நாட்களுக்கு முன், காஷ்மீரை குறிவைத்து நடைபெறும் சதித் திட்டமிடல் அபாய அளவுக்கு அதிகரித்துள்ளதாகவும் லஷ்கர், ஜெய்ஷ் ஆகிய அமைப்புகள் ஒருங்கிணைந்த தாக்குதல் நடத்தலாம் எனவும் உளவுத் தகவல்கள் எச்சரித்தன.

## இந்தோனேஷியா: அலுவலக கட்டிடத்தில் தீ விபத்து;17 பேர் பலி

**ஜகார்த்தா, டிச.10:**

இந்தோனேசியாவின் தலைநகரான ஜகார்த்தாவில் 7 மாடி கொண்ட அலுவலக கட்டிடம் செயல்பட்டு வருகிறது. இந்தநிலையில் அந்த கட்டிடத்தில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. இதில் 17 பேர் உயிரிழந்ததாக முதற்கட்ட தகவல் வெளியாகி உள்ளது. பலர் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தீ விபத்து குறித்து தகவலறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற தீயணைப்பு துறையினர் தீயை அணைத்து கட்டுக்குள் கொண்டுவந்தனர். 7 மாடி கட்டிடத்தில் தீ மளமளவென பரவியதால் வானத்தில் அடர்ந்த கரும்புகை எழுந்தது. இந்த கரும்புகை எழும்பியதை பார்த்த அப்பகுதி மக்கள் அச்சம் அடைந்தனர். இந்த தீ விபத்து குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ஜப்பானில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்: 30 பேர் காயம் - சுனாமி எச்சரிக்கை வாபஸ்

**டோக்கியோ, டிச.10:**



ஜப்பானில் நேற்று சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 7.5-ஆக பதிவாகி உள்ளதாக அந்நாட்டு தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது. இதில் சுமார் 30 பேர் படுகாயமடைந்துள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. நிலநடுக்கத்தை தொடர்ந்து ஜப்பானில் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. பின்னர் அது வாபஸ் பெறப்பட்டது.

வட ஜப்பானின் ஹோன்ஷு தீவிலுள்ள ஆவோமோரி, ஹொக்காடியோ தீவின் தென் பகுதிகளில் இந்த சக்திவாய்ந்த நிலநடுக்கம் அதிகமாக உணரப் பட்டது. பல கட்டிடங்கள் அதிர்ந்தன. இதனால், அதிர்ச்சியடைந்த மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி சாலைகளில் தஞ்சம் புகுந்தனர்.

சுனாமி எச்சரிக்கை வாபஸ்: இதைத் தொடர்ந்து ஜப்பானின் வடகடலோரப் பகுதி களில் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. 10 அடி உயரத்துக்கு சுனாமி பேரலை கடற்கரை பகுதிகளை தாக்கக்கூடும் என ஜப்பான் அரசு தரப்பில் மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. அதனால் கடற்கரை பகுதிகளில் வசித்த மக்கள் பாதுகாப்பு காரணங்களுக்காக வெளியேற்றப்பட்டனர்.

இருப்பினும், 0.5 முதல் 0.7 மீட்டர் என்ற உயரத்தில் தான் கடல் அலைகள் எழும்பின. இதையடுத்து சுனாமி எச்சரிக்கை வாபஸ் பெறப்பட்டது.

30 பேர் காயம்: இந்த நிலநடுக்கத்தால் ஆவோமோரி டவுன் பகுதியில் ஓட்டலில் தங்கியிருந்த சிலர் காயம் அடைந்ததாக அங்கிருந்து வரும் தகவல்கள் வெளியாகின. ஆவோமோரி, ஹொக்காடியோ பகுதியில் நிலநடுக்கத்தின் அதிர்வு காரணமாக குடியிருப்புகளில் சுவர் மற்றும் மாடங்களில் வைக்கப்பட்ட பொருட்கள் கீழே விழுந்தன. சில இடங்களில் விபத்து சம்பவங்களும் ஏற்பட்டன. நிலநடுக்கம் காரணமாக சுமார் 30 பேர் காயமடைந்துள்ளனர். சாலைகள் விரிசல் காரணமாக சேதம் அடைந்துள்ளன. மேலும், இரவு முழுவதும் மின்சாரம் இல்லாமல் மக்கள் பாதிக்கப்பட்டனர்.

## ராணுவத்தில் ஆள்சேர்க்க வெளிநாட்டினரை குறிவைக்கும் ரஷியா



**மாஸ்கோ, டிச.10:**

உக்ரைன்-ரஷியா போர் கடந்த 4 ஆண்டுகளாக நடந்து வருகிறது. இதில் உக்ரைனுக்கு ஆதரவாக ஐரோப்பிய நாடுகள் ஆயுதம் சப்ளை, பொருளாதார உதவி வழங்குகின்றன. அதேபோல் ரஷியாவுக்கும் அதன் நட்பு நாடான வடகொரியா சுமார் 10 ஆயிரம் வீரர்களை அனுப்பியது.

ஆனால் மிக பரந்த நிலப்பரப்பை கொண்டுள்ள ரஷியாவுக்கு அதன் எல்லையை பாதுகாக்கும் அளவுக்கு போதுமான வீரர்கள் இல்லை. எனவே படிப்பு, வேலை நிமித்தம் அங்கு செல்லும் வெளிநாட்டினரை போரில் கட்டாயப்படுத்தி ஈடுபடுத்துவதாக குற்றச்சாட்டு உள்ளது. இந்தநிலையில் அங்குள்ள வெளிநாட்டினரை குறிவைத்து சமூகவலைதளம் மூலம் அரசாங்கம் விளம்பரம் அனுப்புகிறது.

இதில் ராணுவத்தில் இணையும் வெளிநாட்டினருக்கு ரஷிய குடியுரிமை, சுமார் ரூ.2½ லட்சம் சம்பளம் மற்றும் பல்வேறு சலுகைகள் வழங்கப்படும் என கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் தற்போது ஆள்சேர்ப்பை ரஷியா ராணுவம் விரைவுபடுத்தி உள்ளது. ஆனால் இது ஒரு ஏமாற்று வேலை என பல தரப்பினரும் தங்களது எதிர்ப்பை பதிவு செய்து வருகின்றனர்.

## ஆப்பிரிக்க நாடான ருவாண்டாவுக்கு ரூ.2 ஆயிரம் கோடி நிதி - அமெரிக்கா ஒப்புதல்

**வாஷிங்டன், டிச.10:**

கிழக்கு ஆப்பிரிக்க நாடான ருவாண்டாவில் எய்ட்ஸ், மலேரியா உள்ளிட்ட பல தொற்றுநோய்கள் வேகமாக பரவுகின்றன. இதனை கட்டுப்படுத்த முடியாமல் அந்த நாட்டின் சுகாதாரத்துறை போராடி வருகிறது. இந்த நிலையில் காங்கோ உடனான அமைதி ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தைக்காக ருவாண்டா அதிபர் பால் ககாமே அமெரிக்கா சென்றிருந்தார்.

பின்னர் ஜனாதிபதி டிரம்ப் முன்னிலையில் இரு நாடுகளின் தலைவர்களும் அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இதனை தொடர்ந்து நாட்டின் சுகாதாரத்துறையை மேம்படுத்துவது தொடர்பாக ருவாண்டா அதிபர் பால் ககாமே அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது உலக சுகாதார திட்டத்தின்கீழ் சுமார் ரூ.2 ஆயிரம் கோடி வழங்கும் ஒப்பந்தத்தில் இரு தரப்பினரும் கையெழுத்திட்டனர்.

## வெனிசுலா மீது போர்த் திட்டம் அமெரிக்க மக்களிடையே அதிகரிக்கும் எதிர்ப்பு

**நியூயார்க், டிச.10:**

வெனிசுலா நாட்டின் மீது போர் தொடுக்க வேண்டும் என அமெரிக்க அரசு பல்வேறு வகையில் தாக்குதல்களையும் நெருக்கடிகளையும் கொடுத்து வருகிறது. இதற்கு அமெரிக்க மக்களிடம் எதிர்ப்புகள் அதிகரித்து வருகின்றன.



வெனிசுலா கடல் எல்லையில் தனது கடற்படையை நிலைநிறுத்தி போர் ஒத்திகையில் ஈடுபடுவது. சிறிய படகுக ளின் மீது தாக்குதல் நடத்துவது. வெனி சுலா ஜனாதிபதி போதைப்பொருள் கடத்துகிறார் என பொய்க் குற்றம்சாட்டி தனது குற்றங்களை நியாயப்படுத்திக் கொள்வது என அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் செயல்பட்டு வருகிறார். கரீபியன் கடலில் தாக்குதல்கள் டிரம்ப் மற்றும் அமெரிக்க வெளியுறவுத்துறை அதிகாரிகள் வெனிசுலா மீது விரைவில் போர் துவங்கும் என்று மிரட்டல் விடுத்து வருகின்றனர். இது வரை கரீபியன் கடலில் அமெரிக்கக் கடற்படையின் திட்டமிட்ட தாக்குதல்களில் 83 பேர் படுகொலை செய்யப் பட்டுள்ளனர். அவர்கள் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் என அமெரிக்கா எந்த ஒரு ஆதாரமும் இன்றி குற்றம் சாட்டி தனது படுகொலைகளை நியாயப் படுத்தியுள்ளது. இந்தக் கடல் பகுதியில் விமானம் தாங்கிக் கப்பலான யு.எஸ்.எஸ். ஜெரால்ட் ஆர். ஃபோர்ட், எஃப்-35 ரக போர் விமானங்கள், எட்டுக்கும் மேற்பட்ட போர்க்கப்பல்கள் மற்றும் 15,000 அமெ ரிக்க வீரர்கள் படைகள் என ராணுவத்தை குவித்துவைத்துள்ளது அமெரிக்கா. போருக்கு எதிராக அமெரிக்கர்கள் இதே நேரத்தில் அமெரிக்க மக்களின் கருத்துகள் டிரம்ப்பின் போர் வெறி நடவடிக்கைக்கு எதிராக உள்ளது. சிபிஎஸ் நியூஸ் நடத்திய கருத்துக் கணிப்பில், 70 சதவிகித அமெரிக்க மக்கள் வெனிசுலா மீதான தாக்குதல்களை எதிர்ப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

போதைப்பொருள் கொண்டுசெல்லப்பட்டதுஎனக் கூறி அமெரிக்கப் படைகள் வெனிசுலா கடல் பகுதியில் பல படகுகளை குண்டு வீசி அழித்தன. அப்படகுகளில் போதைப்பொருட்கள் இருந்ததற்கான ஆதாரத்தை அரசு காட்ட வேண்டும் என 75 சதவிகித மக்கள் கூறியுள்ளனர். வெனிசுலா அமெரிக்காவின் தேசிய பாதுகாப்புக்கு ஒரு அச்சுறுத்தல் என்ற டிரம்ப்பின் பிரச்சாரத்தை பெரும்பாலான அமெரிக்க மக்கள் நம்பவில்லை. வெறும் 13 சதவிகித அமெரிக்கர்கள் மட்டுமே நம்புகின்றனர்.

மேலும், டிரம்ப் அந்நாட்டின் மீது போர் தொடுப்பதைத் தடுக்க, சில அமெ ரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் சட்டரீதியான முயற்சிகளை எடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கரீபியன் கடலில் வெனிசுலா உள்ளிட்ட சில நாடுகளின் படகுகள் மீது அமெரிக்கப் போர்க்கப்பல்கள் தாக்கு தல் நடத்தியபோது ஒருசிலர் உயிர் பிழைத்தனர். அச்சமயத்தில் அவர்கள் மீது மீண்டும் தாக்குதல் நடத்தி படுகொலை செய்ய அமெரிக்கப் போர்த் துறை செயலாளர் பீட் ஹெக்செத் உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் மீது விசாரணைகள் தொடங்கப் பட்டுள்ளன. வெனிசுலாவின் எண்ணெய் வளங்களை கொள்ளையடிக்கும் நோக்கத்துடன் தான் டிரம்ப் நிர்வாகம் ஒரு புதிய போரைத் தொடங்க மிரட்டி வருகிறது என ஜனநாயகக் கட்சி கூட்டணியில் உள்ள ஆன்சர் என்ற கட்சி குற்றம் சாட்டி யுள்ளது.